

ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமி.

శ్రీ సద్గురు త్యాగరాజస్వామి.

ஸ்ரீ த்யாகராஜ ஸத்குரு துணை

ஸ்ரீ க்ருதி மணிமாலை

ஸ்ரீ தியாகராஜ நூற்றாண்டு நினைவு நூல்

இரண்டாம் பாகம்

ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார், பி. ஏ., எல். டி.

பிரசுரித்தது

ஸபர்மதி

எழும்பூர், சென்னை.

1947

[விலை ரூபா 9-8-0

ஸமர்ப்பணம்


தாக்ஷிண்யாக்ய கிரீசமூர்த்தி ஸத்ருசம் ஸான்னித்ய மாத்ராத்யயா
வீணாவாதன வேதன வ்யஸனினாம் மத்யேய மாஸ்தாபித:
வாணீவைணிக கர்மடஸ் ஸசமுனிர்யத் பூர்வபாவாத் ச்ருதௌ
கந்தர்வாகம வேதினாம் தனமியம் யாயாத்துலாம் கேனவா.

தென்முகமா மூர்த்திநிக ராவார்தம் அருளால்
தேனொழுகு யாழிசையை அறிவோர் நாப்பண்
என்றனக்கு மிடமளித்தார் யாரோ, எங்கும்
இசைபரவு மகதிமுனி கலையின் வாணி
முன்னமே யன்னார்தம் வாழ்னாளைக்கு
விளங்கியதால் விஞ்சுபுகழ் வாய்ந்தார் யாரோ,
அன்னவர்தாம் இசையறிவோர் தனமே யன்றோ?
அவரொப்பார்யார்? அவர்தாள் பணிவேன் யானே.

ஸ்ரீ சாரதையின் அம்சம் பெற்று, ஸுஸ்வர ஆலயமென, இணையற்ற வைணிக திலகமாக ஆசந்த்ரார்க்கம் மங்காப் புகழ் படைத்தவரும், எனது பரம மார்க்கதர்சினியுமான ஸித்த வித்யாதரி ஸ்ரீமதி வீணை தனம்மாளின் திவ்ய ஞாபகத்திற்கு இந்நூல் தக்க துணையாகுக!

அன்னையின் அடிமை,

ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார்.



ரங்கராமாநுஜ அய்யங்கார்.
రంగరామానుజ అయ్యంగారు.

ஸித்த வித்யாதரி ஸ்ரீமதி வீணை தனம்மாள்.
సిద్ధ విద్యాధరి శ్రీమతి వీణ ధనమ్మగారు (1867-1938)

அறிமுகம்

வேத சந்ததியில் பிறந்து, இளமை முதல் இசைப் பயிற்சியில் ஊக்கமும் உழைப்புங்கொண்டு, காலம் சென்ற நாதசுரம் சின்னப்பக்கிரி, கோனேரிராசபுரம் வைத்திநாதய்யர், ராமனாதபுரம் பூச்சி அய்யங்கார், சிமிழி சுந்தரமய்யர் முதலியோரின் சங்கீதப் பாணியை நன்ருகக் கிரகித்து, விடா முயற்சியால் நாளடைவில் விரிவான பாடாந்தரம் பெற்று, கடைசியாகப் பனிரண்டு ஆண்டுகள் வீணை தனம்மாளின் இசை முறையில் ஏகாக்கிர பக்தியுடன் ஈடுபட்டு, வீணையிலும் வாய்ப்பாட்டிலும் தெளிவும் தேர்ச்சியும் அடைந்து அரும் பாடுபட்டுச் சேகரித்த கலைச் செல்வத்தைச் சமுதாயத்திற்கு அர்ப்பணமாக்க இப்பொழுது "கிருதிமணிமாலை" என்ற இந்நூலை வெளியிட முன் வந்திருக்கும் திரு. ராமானுஜ அய்யங்கார் அவர்களைக் கலையுலகம் நன்றியுடன் பாராட்டுமாக.

1921ல் பி. ஏ. வகுப்பில் படித்துவந்த இவர் காங்கிரஸ் மகாசபையின் ஆணையை மதித்துக் கல்விச் சாலையினின்றும் வெளியேறிச் சிலகாலம் பொதுஜன சேவையை மேற்கொண்டு, பின்பு சென்னை புரசவாக்கம் ஸர். எம். சி. டி. முத்தய்ய செட்டியார் உயர்தரப் பள்ளியில் அமர்ந்து, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக உபாத்திமைத் தொழில் நடத்தி வருகிருர். இயற்கையாக உள்ள அடக்கத்துடன், இடைவிடாத கிலேசங்களுடன் தொடர்ந்த போராட்டமும் சேர்ந்தமையால், உற்சாகமும் ஆடம்பரமும் ஒழிந்த எளிய வாழ்க்கையில் இவருடைய பரந்த பொதுக் கல்வியறிவும் சாரீரசம்பத்தும், வீணை வாசிப்பின் தனிச்சிறப்பும் மறைந்து கிடப்பது மிகச் சிலருக்குமட்டுமே தெரியும். 1937ல் ஒரு சந்தர்ப்பத்தில் ரசிகமானிகள் சிலரின் குறும்பான நகைப்பை உக்கிரமாகக் கண்டித்து, "ஆம். கேட்கத்தகுந்ததே. அவர் சங்கோசம் மிகுந்தவர். அவருடைய சௌகரியத்தை அறிந்து, அவர் நிம்மதியுடன் வாசித்துக் கேட்டால் அவருடைய யோக்கியதையை நீங்கள் அறிவீர்கள்", என்று பரிவுடன் தனம்மாள் சொன்னது இன்றும் என் செவிகளில் ஒலிக்கிறது.

அழகிய, நுட்பமான அம்சங்கள் நிறைந்த உருப்படிகள் ஆயிரத்துக்குமேல் இவருக்குப் பாடம் உண்டு. அவற்றைக் கூறியது கூறல் முதலிய இழுக்குகளில்லாமல், கன நயமும், கமகப் பொருத்தமும் விளங்க நன்ருகப் பண்படுத்திப் பாடுவதிலும், வீணையில் வாசிப்பதிலும், சொரூபம் எளிதில் தெரியும்படி விபரமாக்ச் சுரப்படுத்துவதிலும் இவர் மிகுந்த திறமையும் அனுபவமும் வாய்ந்தவர். மேலும் கலைவாணியின் தொண்டர் முன்னணியில் நின்று ஏற்கனவே அரிய சேவை புரிந்திருக்கிருர். திரு. பாபநாசம் சிவன் என்பாரின் "கீர்த்தனமாலை"யும், திரு. லலிதாங்கியின் "புரந்தரம்ணிமாலை"யும் இவருடைய சுயநலமற்ற தனி முயற்சியின் விளைவே.

பிராசீன சங்கீத முறையும் பழைய கீர்த்தனங்களும் தற்காலம் விரைவில் அழிந்து வருவதை யாவரும் அறிவர். திருவாளர் பொதுஜனம் தலையிடும் துறைகளிலிருந்து உயர்ந்த லட்சியங்கள் பறந்தோடுவதும், அங்கே பாமரத்துவம் தாண்டவ

மாடுவதும் உலகெங்கும் காண்கிறோம். இசைக்கலையும் இவ் விதிக்கு விலக்கல்ல. இந்நாட்டில் தொன்றுதொட்டுக் கலைமீதுள்ள பயபக்தியையும் இசைவாணரிடமிருந்த மதிப்பையும் உதறிவிட்டு, சீர்திருத்தம், முன்னேற்றம் என்ற பெயரால் உபவேதமும் தெய்வத் தன்மை வாய்ந்ததுமான அருங்கலையைப் பலசரக்குப்போன்ற விற்பனைப் பொருளாக்கித் தன் பக்குவமற்ற ஆசாபாசங்களுக்குத் தக்கபடி ஆட்டிவைக்கும் நிந்தை திருவாளர் பொது ஜனத்தைச் சாரும். இதனால் இசைக்கலைக்கும் இசைவாணருக்கும் நேர்ந்த எண்ணிறந்த தீமைகளை நினைக்குங்கால் உண்மையான கலையன்பர் மனம் வாட்டமுறும். தூய்மை, தெய்வபக்தி, உயர்ந்த சிந்தனை, மனத்தாழ்மை, கலோபாசனை அனைத்தையும் துறந்து, படாடோபமும் மாய்மாலமுமிகுந்து, நவநாகரீகத்தில் தலைசிறந்து, இசைவணிகராய் அலையும் போலிப் பாகவதர்கள், போலி வித்துவான்கள் பலரின் நிலை அந்தோ !

காலப்போக்கின் விபரீதத்தைக்கண்டு மனந்தளராது, உன்னத லட்சியங்களில் சலியாத நம்பிக்கையுடன், இப்பொழுது நண்பர் ராமானுஜ அய்யங்கார் இவ்விசை நூல் தொகுதியை வெளியிடுகிறார். இத்திருப்பணியை ஆதரவுடன் வரவேற்று மென்மேலும் இத்தொண்டு செழிக்கும்படி இவருக்கு ஊக்கமளிக்க இசையன்பர்களை வேண்டுகிறேன்.

சதாசிவ யோகிதாசன்.

இசை யுலகில் இந்திய ஸங்கீதம் பழமையானது. கிறிஸ்து சகாப்தத்திற்குப் பல நூற்றுண்டுகள் முன்பே இது பக்குவ நிலை எய்தியது. பாரத நாடு முழுவதும் ஒரே லக்ஷ்ய லக்ஷண ஸம்பிரதாயம் பரவி நின்றது. பின்னர் முஸ்லிம் ஆட்சியின் விளைவாக வட இந்தியாவில் பூர்வ ஸங்கீத பத்ததி மாறியது. தென்னிந்தியாவில் மாத்திரம் அதுவேரூன்றிக் கர்நாடக ஸங்கீதம் என்ற பெயருடன் வளர்ந்து வந்தது. இதன் பிரத்தியேக அம்சங்கள் பல. அவற்றில் முதன்மையானது க்ருதி நிர்மாணம். பல்லவி, அனுபல்லவி, சரணம் என மூன்று அங்கங்களுடன் விளங்கும் க்ருதி 15வது நூற்றுண்டில் தாளப்பாக்கம் சின்னையா என்பவரால் அமைக்கப்பட்டது. 16வது நூற்றுண்டில் புரந்தர தாஸரின் பிரபாவத்தினுல் இது நாடெங்கும் வியாபித்தது. ஸ்ரீதாஸர் 5லட்சம் க்ருதிகளையும், க்ஷேத்ரக்ஞர் 4200 பதங்களையும், ஸ்ரீ தியாகராஜஸ்வாமி 24000 க்ருதிகளையும் இயற்றியதாக நம்பிக்கை. இவர்களைப் பின்பற்றி எண்ணிறந்த வாக்கேயகாரர்கள் பல திராவிட மொழிகளில் அரிய ரத்னங்களை வழங்கினர். ஆனுல் தற்போது அவற்றில் பெரும் பகுதி மறைந்து விட்டது. இப்பொழுதாவது தக்க முயற்சி செய்தால் ஸ்வரஸாஹித்ய ரூபமாகக் கன்னட உருப்படிகள் சுமார் 2000, க்ஷேத்ரக்ஞரின் பதங்கள் 100, தியாகராஜ கீர்த்தனைகள் 600 கிடைக்கும். கிடைப்பதைச் சேமித்துக் காப்பது என்ற ஆவலுடன் எவ்விதக் கஷ்டங்களையும் பொருட் படுத்தாது, பல ஆண்டுகளாக முயன்றதில் ஏறக் குறைய 1000 க்ருதிகளின் குறிப்புகள் கிடைத்தன. "இருந் தமிழே உன்னுலிருந்தே னிமையோர் விருந்தமிழ்த மென்றுலும் வேண்டேன்; திருந்த உதிப்பித்த பன்னூ லொளிர அடியேன் பதிப்பிக்கவே கடைக் கண் பார்," என்ற கருத்தையே கான வித்தைக்குப் பொருத்தி, வாழ்வின் ஏக லக்ஷ்யமாக எண்ணி, உள்ளதை அச்சிட்டு வெளியிடும் ஸந்தர்ப்பத்தை நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்தேன். இத்தகைய வெளியீடுகள் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த பலர் ஒன்றுகூடி ஒத்துழைத்துப் பூர்த்தி செய்ய வேண்டிய முக்கிய ஸமூஹத் தொண்டாகும். எனினும் பல காரணங்களால் இந்த ஒருமைப்பாடு இது வரையில் உருப் பெறவில்லை.

1947ஆு ஜனவரிமீ நடைபெறும் ஸ்ரீதியாகராஜ ஸ்வாமியின் நூருவதாண்டு விழாவின்போது தியாகராஜ கீர்த்தனங்களைத் தொகுத்து அச்சிடும் அவசியத்தைப்பற்றிப் பிரஸ்தாபங்கள் அங்கங்கே 1940ஆு முதல் நடக்கின்றன. 100ஆு ஆராதனை கடந்தும் பிரசுர ஏற்பாடு கிரியாம்சத்தில் எங்கும் காணப்படவில்லை. காலதாமதம் ஆவதைக்கண்டு, ஸ்ரீ தியாக ப்ரும்மத்தின் கருணையே தஞ்சமென நம்பி, என் சிற்றறிவையும், எளிய முயற்சியையும் ஸாதனங்களாகக் கொண்டு, 400 க்ருதிகளைத் தமிழ், தெலுங்கு, இரண்டு லிபிகளில் ஸம்பிரதாயப் பாடங்களை அனுஸரித்து, விஸ்தாரமாக ஸ்வரப்படுத்தி வெளியிடத் துணிந்தேன்.

இந்நாட்களில் எவ்வகையிலும் ஸாத்தியமில்லாத குருகுல வாஸத்தைச் சூழ்நிலை யறியாது பொறுப்பற்ற வகையில் பேசிப்

போற்றும் அபிமானிகளின் கலாஸேவை பேச்சளவில்தான். ஸங்கீதத் தொழிலில் பிரபலமானவர் தினசரியைக் கவனித்தால் சாங்கோபாங்கமாகப் பாடம் சொல்லுவதற்கான அவகாசம், மனோநிலை, விச்ராந்தி, ஏகாந்தம், முதலிய அனுகூலங்கள் அவர்களுக்குத் துர்லபம் என்பது கண்கூடு. ஸங்கீதப் பள்ளிக்கூடங்கள், கோஷ்டிகானப் பயிற்சி, கோடைக் கல்வி போன்ற குறுக்குப் பாதைகள் முதலியன ஓரளவு பயன் தரத்தக்க நவீன முறைகள். இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுவதுடன் நின்றுவிடாமல், கலையின் உயிர் நிலையான ராகம், தானம், பல்லவி முதலிய கற்பனை அம்சங்களை விருத்தி செய்து, பிராசீன உருப்படிகளைத் தெளிவுடன் பாடம் செய்து பரிசீலனைக்கும் வழிதேட வேண்டும். இந்த அபிவிருத்திக்கு இன்றியமையாத ஸாதனம் ஸ்வரப்படுத்தும் பந்தாவை நிர்ணயமாக்கிக் கொள்ளுவதே. "எழுத்து மூலம் கற்கும் ஸங்கீதம் ஒன்றுக்கு முதவாது," என்பது ஆதாரமற்ற கூற்று. ஸ்வரஸாஹித்ய ரூபமாகக் கமகம் முதலிய எல்லா அம்சங்களையும் தெளிவுற எழுதவும் பிறர் எழுதியதைப் படித்தறியவும் பயிலுதல் அவசியம். கலை வளர்ச்சியின் நிமித்தம் தீவிரமான பிரசாரம் செய்யவேண்டிய அரிய ஸாதனம் இது ஒன்றே. இதன் மூலமே பழைய நிரூபணங்களை மறையாமல் காத்து உலகெங்கும் வழங்கக்கூடும். கமக அடையாளங்கள் பெரும்பாலும் பிரமையை உண்டு பண்ணுவதுடன் பல படிகளிலுள்ள வித்யோபாஸிகளுக்குப் புலனாவது கடினம். மேலும் இந்தக் குறிகளைப்பற்றி விசதமான ஏகோபித்த அபிப்பிராயமும் இல்லை. ஸாதனம் எதுவானாலும் பிரசாரத்துக்குத் தடையான ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிடுதல் பொருந்தும். "இது எங்கள் வீட்டு ஸங்கீதம். பிறருக்கு வராது," "நான் உழைத்துச் சம்பாதித்ததைப் பிறர் கைப்பற்ற விடுவேனோ?" "ஸ்வரப்படுத்தவாவது? நேராகப் பாடந்தான் சொல்லுவேன்," "கலியாணத் தேதி காலம். பிறகு பார்த்துக் கொள்ளலாம்," "என் குருவின் அனுமதி பெற்றுத் தான் சொல்ல முடியும்," — என்றெல்லாம் பிதற்றும் கேவலமான லோபித்தனம் பல அதமரிடம் குடிகொண்டிருப்பதை உருப்படிகள் சேகரிக்கும் தொல்லைக்கு ஆளாகாதவர்கள் அறிய மாட்டார்கள். இத்தீய மனோபாவம் ஒழிந்தாலன்றிப் பழைய கலைச் செல்வம் அறவே அழிவது நிச்சயம். இந்த நிலையில் நன்றாகப் பரிசீலனைசெய்து விஸ்தாரமாக ஸ்வரப்படுத்திய உருப்படிகள் அடங்கிய அழகான புத்தகங்களே காலத்திற்கேற்ற ஸாதனங்களாகும்.

"க்ருதி மணிமாலை" என்ற இந்நூல் தொகுதி நான்கு பாகங்கள் கொண்டது. முதல் மூன்று பாகங்களில் அடங்கியவை 400 தியாகராஜ க்ருதிகள். எஞ்சிய பாகத்தின் பொருளடக்கம், தீக்ஷிதர், சியாமாசாஸ்திரி, ஸுப்பராயசாஸ்திரி, க்ஷேத்ரக்ஞர் முதலியோரின் நிரூபணங்கள். ஸ்ரீநரஸிம்ஹ பாகவதர், ஸுப்பராம தீக்ஷிதர், ராமானந்த யோகி, C. R. ஸ்ரீனிவாஸ அய்யங்கார், K. K. ராமஸாமி பாகவதர், K. V. ஸ்ரீனிவாஸய்யங்கார் முதலியோரின் பாடங்களைக் கவனித்து ஸம்பிரதாயத்திற்கேற்ற பாடமே தியாகராஜ க்ருதிகளின் மாதுவாக (ஸாஹித்யம்) எடுத்துக்கொள்ளப்பட்டது. சில நிரூபணங்கள் ஸ்வாமிகளுடைய

தல்ல வென்று வதந்தி உண்டு. ஆனால் முடிவாகத் தீர்மானிப்பது ஸுலபமன்று. மேலும், அவை திடமான பிரசார பலம் பெற்றுள்ளன. ஆகையால் இத் தொகுதியில் அவை இடம் பெற்றன. ஸ்வர ரூபமான பாடம் (தாது) சென்ற முப்பது வருஷங்களில் அனுபவ ஸித்தமான பல சிட்டைகளின் பரிசீலனையின் பயனாக உருவானது. ரஸமான கற்பனைக்குத் தாராளமாக இடந்தருவது கர்நாடக ஸங்கீதம். க்ருதிகளைக் கையாளுவதிலும் இந்தச் சுதந்திரம் உண்டு. எனவே, அளவும் அவசியமுமே தாதுவின் விஸ்தாரத்தை நிர்ணயித்தன. ஆந்திர தேசத்திலும், தெலுங்கு எழுத்துக்களை இலகுவாகப் படிக்கக்கூடிய கன்னட தேசத்திலும் உள்ள ஸங்கீத அபிமானிகளின் நிமித்தம் தலைப்பில் தெலுங்கு ஸாஹித்யமும் தமிழில் உள்ள தாதுவின்கீழ் தெலுங்கில் மாதுவும் அமைந்துள்ளது. ஸப்த ஸ்வரங்களின் தமிழ் எழுத்துக்களை மாத்திரம் கற்பது தெலுங்கறியும் எவருக்கும் கடினமாகத் தோன்றாதென்ற நம்பிக்கை. மேலும் மதிப்பற்ற இசைக் களஞ்சியம் ஆந்திர பாஷையில் இருப்பதனால், அந்தப் பாஷையின் எழுத்தறிவு கலோபாஸிகளுக்கு இன்றிமையாதது. அத்தகைய பழக்கம் இரண்டொரு நாள் முயற்சியில் தமிழருக்குக் கைகூடும் என்பது நிச்சயம். இதற்குத் தூண்டுகோலாகவும் இந்நூல் பயன்படலாம்.

"க்ருதிமணிமாலை"யில் அடங்கிய 400 தியாகராஜ கீர்த்தனங்களைத் தவிர சுமார் 200 அங்கங்கே சிதறிக் கிடக்கின்றன. அவைகளைத் திரட்டி ஒரு பாகமாக வெளியிட ஆவல். அவற்றின் ஸ்வரஸாஹித்ய ரூபமான குறிப்புகளை அறிஞர்கள் அனுப்பினால், நன்றியுடன் வரவேற்பேன். விஷயதானம் செய்ய மனமுள்ளவர்கள் எனக்குத் தெரிவித்தால் அவர்களை நாடிச் செல்லவும் சித்தனாயிருக்கிறேன். இம் முகவுரையில் முன்னரே குறிப்பிட்டபடி, இதர க்ருதி கர்த்தாக்கள் பலரின் அருமை மணிகள் சுமார் 400 என்னிடம் உள்ளன. ஆண்டவன் அருளும் அன்பர்களின் ஆதரவும் இருந்தால் தொடர்ந்து இரண்டு பாகங்கள் மேலும் பிரசுரிக்க உத்தேசம். "க்ருதிமணிமாலை" எனது இருபத்தைந்து வருஷத்திய கனவு. இது நினைவான விநோதம் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்றாகும். இம்முயற்சி ஈடேறும் வண்ணம் எனக்குத் துணைநின்று பலகாலும் பேருதவி புரிந்த அன்பர்கள் பலர்; பொருளுதவி புரிந்தும் ஏனைய விதங்களில் ஊக்கங் காட்டியும் எனக்கு உற்சாகமளித்தவர் பலர். அன்னார் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி. சரித்திரக் குறிப்புகளை உதவிய யோகி ஸ்ரீசுத்தானந்த பாரதி ஸ்வாமிகள், பஞ்சரத்னம், கோவூர் முதலிய க்ருதித் தொகுதிகளைக் குறித்த அனுபந்தம் எழுதித் தந்த பேராசிரியர் திரு. சாம்பமூர்த்தி அய்யர் அவர்கள், 'அறிமுகம்' என்ற தலைப்பின்கீழ் என்னிடம் கொண்ட அத்யந்த பிரேமையை உள்ளம் கனிந்து வெளிக்காட்டிய மித்ரமணி ஸதாசிவ யோகிதாஸன் அவர்கள், தியாகராஜ ஸ்வாமியின் மூவர்ணப் படத்தைக் கற்பித்த பலகலை நிபுணர் திரு. எஸ். ராஜம் அவர்கள், தற்கால நிலையில் ஏற்கவொண்ணாத பொறுப்பை உவகையுடன் ஏற்று, லாபங் கருதாது, முக மலர்ச்சியுடனும், மிகுந்த ஆர்வத்துடனும் அச்சு வேலையை மேற்கொண்டு, விரைவில் பூர்த்திசெய்த ஹோ அண்டு கம்பெனி அத்யக்ஷர்களான

திருநிறை செல்வர்கள் திரு. எம்பெருமானார் செட்டியார், திரு. ஆனந்த கிருஷ்ண செட்டியார் என்ற ஸஹோதரர்கள் முதலியவர்களுக்கு என் நன்றி.

இந் நூற்றாண்டுகுதியின்கண் மலிந்து கிடக்கும் பிழைகளை அன்பர்கள் எனக்கு அறிவித்தால், போதிய ஆதரவிருந்து இரண்டாவது பதிப்பு அவசியமென ஏற்படுங்கால் அவைகளை அகற்ற முயற்சிப்பேன். கர்நாடக ஸங்கீதம் ஸமுதாயத்தின் அருஞ் செல்வம். அதன் வளம் குன்றாமல் காப்பது எல்லோருடைய கடமையு மாகுமன்றோ?

"ஸபர்மதி"
எழும்பூர், சென்னை
ஸர்வஜித்து
சித்திரைமீ கஉ

பகவத் பக்தாங்க்ரிரேணு,
ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார்.

ஸங்கீத ஜோதி தியாகராஜர்

"ஓமே பிரம்மம்; ஓமே ஸர்வம்; ஓமே ஸாம கானம்" என்பது வேதமுனிவர் கண்ட உண்மை. அந்த ஓங்கார நிறைவே ஆகாசமாகிய பிரஹ்ம சரீரம்; அதனின்றே எல்லாப் பூதங்களும், தன்மாத்திரைகளும், தத்துவங்களும், உலகங்களும் விரிந்து பரவின. பரமாத்மா, ஓங்காரமாகவே ஜீவாத்மாவுடன் உடல்களில் வசிக்கிறான். அதனாலேதான், "உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற ஐயா!" என்று இறைவனைப் பரம பக்தர்கள் உபாசித்தனர். இந்த ஓங்காரத்தின் விரிவுதான் வாழ்வும் கலையுமாகும். ஓங்காரத்தையே உயிராகக் கொண்டது இசைக் கலை. அதனாலேதான் அஃது எல்லா உயிர்களையும் அப்படி வசப்படுத்துகிறது. கண்ணன் குழலோசையில் மயங்கித் தற்போதமிழக்காத உயிர்களில்லை. இசை யினிமையில் பாம்பும் சொக்கும்; பசுவும் புலியும் பகையை மறந்து விளையாடும்; சிசுவும் லயித்துறங்கும். பரம பக்தியால் அந்தக்கரண சுத்திபெற்ற யோகிகள் அனாஹதகானமான இந்த ஓங்காரத்தில் எப்போதும் லயித்திருப்பார்கள். அந்த லய முதிர்ச்சியால் விசுத்த சக்கரம் மலர்ந்தால் அருள்வாக் குதிக்கும். அருள் கனிந்து பொழியும் அமுதகான ரசம், நாதயோகப் பிரசாதமாகும். ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமலிங்க சுவாமிகள், தாயுமானவர், முத்துத்தாண்டவர், அருணகிரிநாதர், புரந்தரதாஸர், மீராபாய், கபீர், துளஸிதாஸர், குருநானகர் போன்ற மகான்கள் நாதயோகிகளே யாவர். பாஷை தெரியாத மக்களுக்குக்கூட, அவர்கள் பாடிய பாடல்கள் இன்பமளிக்கும். நாதவித்தை நாதமயமான ஜீவாத்மனைத் தொடும்போதுதான் பேரின்பச் சிலிர்ப்புண்டாகிறது. ஏனெனில், இசைக் கவியாகப் பாடுவோனும், அந்தராத்மனான நாதப்பொருளே; நாத கீதத்தைக் கேட்

பவனும் அதே அந்தராத்மனே! ஆதலால் சங்கீதம் கலைகளுக்கு அரசாகி, ஆத்மவசீகர சக்தியாக விளங்குகிறது.

உலகிலுள்ள எல்லா நாடுகளும் சங்கீதத்தைப் போற்றி வளர்க்கின்றன. மேற்கே நாட்டுக்கு நாடு குண்டுச் சண்டை கிளம்பினாலும், பெதோவன், மொஜார்டு, ஹாண்டெல் போன்ற இசைப் புலவர்களிடம் யாருக்கும் பகையில்லை; எல்லாரும் அவர்களைப் போற்றுகிறார்கள். நாடு மொழி சாதி மத பேதங்களைக் கடந்து, அகண்ட சமரச சக்தியாகவே ஸங்கீத வாணி விளங்குகிறாள்! ஸங்கீத வாணியின் பூரணமான ஒளியைப் பெற்ற நாடு, நமது தமிழகமே! இங்கேதான் இசைக் கலை, மிக உச்சநிலை யடைந்து கர்நாடக சங்கீர்த்தனமாக அவதரித்து விளங்குகிறது. கர்நாடக சங்கீர்த்தனத்திற்கு இணையான இசைக் கலைகளெல்லாம் இந்தக் கர்நாடக சங்கீர்த்தன சூரியனின் சில கதிர்களேயாகும். இக்கலை, பல்லாயிரம் ஆண்டுகளாகவே வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. நாரதரின் ஸங்கீத மகரந்தம், பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம், சாரங்க தேவரின் ஸங்கீத ரத்னாகரம், லோசன கவியின் ராக தரங்கிணி, புரந்தர கீதங்கள், நாராயண தீர்த்தரின் கிருஷ்ண லீலா தரங்கிணி, இராமதாஸ கீர்த்தனங்கள், அஹோபிலரின் ஸங்கீத பாரிஜாதம், வேங்கடமகியின் சதுர்தண்டி ப்ரகாசிகை முதலிய உயர்ந்த சங்கீத நூல்கள், கர்நாடகக் கலையில் அடங்கிய மேள ஜன்ய இராக லக்ஷணங்களையும், கமக லக்ஷணங்களையும் விளக்குகின்றன. இந்த இலக்கணங்களுக்கெல்லாம் இலக்கியமாக அமைந்த கீர்த்தனங்கள் பலவாம். அவற்றுள் முதன்மையானவை, தியாகராஜ கீர்த்தனங்களும், முத்துசாமி தீட்சதர் கிருதிகளும், சாமா சாஸ்திரிகள் கிருதிகளுமாகும். இவையெல்லாம் தெலுங்கிலும் சமுஸ்கிருதத்திலும் இருக்கின்றன. எனினும், நாதமயமான அந்தராத்மாவைத் தொட்டு, கானசுகமளிப்பதால், இவை எல்லா உலகிற்கும் பொதுவான இசைச் செல்வங்கள் ஆகின்றன. மேற்சொன்ன மூவரும் சங்கீதத் திருமூர்த்திகளே! இவர்கள் சிருஷ்டித்த நாதக்கலைதான், இன்று கர்நாடக சங்கீத வெள்ளமாகப் பெருகி வருகிறது! இவருள் தியாகராஜர், பரம இராமபக்தர். அவர் பாட்டு பக்தி பரவசத்தில் உருகி உருகி வந்து, இராமாபிஷேகமான புண்ணிய தீர்த்தம் போன்றது. தீட்சதர், முருகன் அருள் பெற்ற வேதாகமப் புலவர்; ஸ்ரீவித்யா உபாசகர். அவரது சமுஸ்கிருத கிருதிகள் நிரம்ப கமக லட்சணங்களுடன், கலைக்கு அழியாச் சிறப்பைத் தருவன. சாமா சாஸ்திரிகளின் வாக்கோ, காமாக்ஷியம்மன் அருளிற் பூத்த நாதசக்தி வெள்ளமாக வந்து, நம்மைப் பரவசப் படுத்துகிறது. இம் மூன்று இசை மணிகளின் ஜீவனமெல்லாம் நாதோபாஸனையே!

கர்நாடக சங்கீர்த்தனத்தில் எத்தனையோ மாறுதல்கள் காலக்கிரமத்தில் ஏற்பட்டன. 1750-1850-ஆம் ஆண்டுகளில் நமது இசைக்கலை உச்ச நிலையை அடைந்தது. அக்காலத்தில் எழுந்த பாவஸங்கீர்த்தனங்களே, இன்னும் இசை யுலகை ஆளுகின்றன. அதைச் சங்கீத சகாப்தம் என்றே சொல்லலாம்! அதில் எத்தனையோ சங்கீத மணிகள் விளங்கினர். அவர்களுக்கெல்லாம் அரசராக, கலைச் செங்கோல் பிடித்துப் புகழ்முடி

தரித்து விளங்கிய நாதாவதாரரே, ஸ்ரீமத் தியாகராஜப் பிரம்மம் ஆவார். அந்த நூற்றாண்டைத் "தியாகராஜ சகாப்தம்" என்பதும் பொருந்தும். தியாகராஜர், பக்தி பரவசரான சங்கீத ராஜர் என்பதை உலகெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறது! இவர் புகழ், நாளாக ஆக அகண்ட ஜீவநதிபோல் உலகெங்கும் விரிந்து இசைப்பயிரை வளர்த்து வருகிறது. இன்று பெதோவனை (Beethovan) அறிந்த வெள்ளைக்காரர் தியாகராஜரையும் அறிந்திருக்கின்றார்கள். தியாகப் பிரம்மத்தால் நமது நாட்டுக் கலை உலகளாவி விளங்குகிறது. இந்த மகாத்மாவின் வாழ்வே, சங்கீர்த்தனம்; சங்கீர்த்தனமே வாழ்வு. இந்த உண்மையை அறிவோம்.

காவேரிக் கரையில் பல அழகான க்ஷேத்திரங்கள் உள்ளன. அவற்றுள், திருவாரூர் = (திரு + ஆரூர்) மிகவும் புகழ் பெற்ற சிவஸ்தலம். "கமலையில் பிறக்க முக்தி, கைலையில் இறக்க முக்தி" என்பது பழமொழி. இஃது அப்பர், சுந்தரர், சம்பந்தர் முதலிய எல்லா அடியார்களாலும் பாடப்பெற்றது. இங்கேதான் மனுநீதிகண்ட சோழன், பொது நீதி செலுத்தினன். இங்கே கோயில் கொண்டுள்ள தியாகராஜப் பெருமானின்மீது மோகங்கொள்ளாத அடியார் இல்லை. காவேரியின் நித்திய ஓங்கார ஸ்ருதியுடன் அடியாரின் அருட் பாடலும் கலந்தொலிக்கும் இந்த ஊரில், எத்தனையோ வித்துவான்கள் இருந்தனர். அவர்களுள் பிரம்ம குலத்தில் வந்த கிரிஜாப் பிரம்மம் ஒருவர். இவர் முகில்நாடு வகையைச் சேர்ந்த திரைலிங்கத் தெலுங்குப் பிராமணர்; பாரத்வாஜ கோத்திரர்; தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் நிரப்பப் படித்த சங்கீத வித்துவான். இவருடைய வேதாந்தப் பாடல்களை மெச்சி, தஞ்சை மன்னன் ஷாஜி ராவ், தக்க சன்மானம் அளித்து ஆதரித்தான். இந்த கிரிஜாப் பிரம்மமே, நமது தியாகராஜருடைய பாட்டனர். கிரிஜாப் பிரம்மத்திற்கு ஐந்து குமாரர்கள் உண்டு. அவருள் கடைசி மகனே, தியாகரின் தந்தை, இராம பிரம்மம். இராம பிரம்மம், சாந்தா தேவியுடன் நிறைமுறையான இல்லறங் காத்து, பரம பாகவதராக விளங்கினர். சாந்தா, ஒழுக்கமும் கற்பும் பொறுமையும், நல்ல சங்கீதப் பயிற்சியும், ஜபசாதனமுங் கொண்ட உத்தமி. தந்தை இராம பிரம்மம் சிவ விஷ்ணு பக்தியில் ஈடுபட்டு, நித்யோத்ஸவ திவ்யநாம பஜனையும், திவ்ய கதா காலட்சேபமுமாகவே வாழ்ந்தார். திருவாரூர் தியாகேசரிடம் அவருக்கு ஈடுபாடதிகம். சிவ புராணத்திலும் பாகவதத்திலும் அவர் நிபுணர். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. மூத்த பையன், பஞ்சநதம் என்ற ஜப்யேசன்; இரண்டாம் பிள்ளை, இராமநாதன்; மூன்றாவது மணிப்பிள்ளையே, 1759-ஆம் ஆண்டு பிறந்த தியாகராஜன். தியாகையர் 1759-ஆம் ஆண்டு பிறந்ததாகவும், 88 ஆண்டுகள் வாழ்ந்ததாகவும் சிலர் ஆராய்கின்றனர். அவருடைய பிரதம சிஷ்யரான வேங்கடரமண பாகவதர், தியாகப் பிரம்மம் 5-5-1767-ல் பிறந்ததாகச் சொல்லுகிறார். "கலி 4868, ஸர்வஜித் வருஷம், சித்திரை மாதம், 25-ஆம் தேதி, திங்கட்கிழமை, வைசாக சுத்த சப்தமி, பூச நட்சத்திரம், பகல் 12-மணிக்கு, கடக லக்கினத்தில் தியாகராஜ ஜனனம்" என்று பழைய சோதிடர் கணித்திருக்கிறார்கள்.

அவரது இராசி அம்சச் சக்கரங்கள்

	சூ	சுக் சனி	செவ்
	இராசி		ல.கே சந்.
ராகு			வி. பு

		ராகு	
லக்/	அம்சம்		சுக்
			சந்
	செ. கே.	சூ. பு. வி.	சனி

பெற்றோர், தாம் வழிபட்ட க்ஷேத்ரேசர் பெயரையே கடைசிப்பிள்ளைக்குச் சூட்டினர். மூத்தவன், தந்திரப்புலி, முன் கோபி, பொறாமைத்தீயன். தந்தை எவ்வளவோ புத்தி சொல் லிப் படிக்கவைத்தும், அவனுக்குப் படிப்பு ஏறவில்லை. நடுப் பிள்ளையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. கடைக்குட் டித் தியாகப் பிரம்மமே தந்தைக்கேற்ற பிள்ளை. தந்தை திருவா ரூர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பையனைப் படிக்க வைத்தார். தியாகராஜரின் அறிவிற்கு இந்தப் படிப்பு போதாது. இராம பிரம்மம் திருவையாறு ஸப்தஸ்தானத்திற்குப் பஜனை செய்யச் சென்றார். அந்த ஊர் அவருக்குப் பிடித்திருந்தது. குடும்பத் திற்குத் தக்க சௌகரியங்களும் இருந்தன. முதன்மையாக நல்ல கலாசாலை யிருந்தது. ஆதலால் தந்தை, மனைவி மக்களுடன் திருவாரூரை விட்டுத் திருவையாற்றில், திருமஞ்சனத் தெருவில் ஒரு சிறு வீட்டிற் குடி புகுந்தார். எட்டாம் வயதில் தியாக ராஜருக்கு உபநயனம் நடந்தது. காயத்திரியுடன் தந்தை, இராம தாரக நாமத்தையும் உபதேசித்தார். அன்றுமுதல் தந்தையின் இராம விக்கிரகத்தைத் தியாகராஜரே பூஜித்துவந்தார். ஸ்ரீ இராம கிருஷ்ணனந்தர், ஸ்ரீ இராமஷடாட்சரி மந்திரத்தை உபதேசித் தார். தியாகப்பிரம்மம், கணக்கற்ற இராம ஜபம்செய்து வந்தார்.

காவேரி, கொள்ளிடம், குடமுருட்டி, வெண்ணாறு, வெட் டாறு ஆகிய ஐந்து நதிகள் நாமசங்கீர்த்தனம் செய்யும் திவ்ய க்ஷேத்திரம், திருவையாறு. ஆற்றுப்பாட்டை உண்டு வளர்ந்த இதன் வயல்களிலும் சோலைகளிலும் கலைமகளும் திருமகளும் நடன மாடுகிறார்கள்! அருட்கலைக்கெல்லாம் தாயகம் ஐயாறு. அப்பர், சுந்தரர், சம்பந்தர் தேவாரங்களும், வேதாகமங்களும், புராண இதிகாசங்களும் முழங்கும் கலைக்கோயில் திருவையாறு. மகா வைத்திநாதையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், கீதை இலட்சுமணாச்சாரியார் போன்ற இசைமணிகள் இருந்து விளங் கிய தலம், ஐயாறு. அப்பர் கைலைக்காட்சி கண்டு, "கண்டறியா தன கண்டேன்!" என்று வியந்து பாடிய இந்தத் திருத்தலத் தின் பெருமை, தியாகராஜரால் உலகெல்லாம் விளங்குகிறது! இங்கேதான் இராம பிரம்மம் பரம பாகவதராய் உஞ்சவிருத்தி யெடுத்துண்டு, பக்தி பரவசத்தில் வாழ்ந்தார். அவர் கவலை யெல்லாம் தியாகராஜனை ஆளாக்குவதிலேயே இருந்தது. அவனை அவர் பள்ளிக்கூடத்திற் கனுப்பாமல், தாமே ஐந்தாண்டுகள் தெலுங்கும் சமுஸ்கிருதமும் சொல்லிவைத்து, அந்தண ஒழுக் கமும் பயிற்றினார். தாய் சாந்தா, தியாகுவிற்கு இராமதாஸ், புரந்தரதாஸ் கீர்த்தனங்களும், அஷ்டபதியும் சொல்லித் தந்தாள். தியாகராஜன் குரலும் இசைத்திறமையும் கண்டு, "கண்மணீ,

நீ சங்கீத வித்வானாவாய்'' என்று தாயார் சொல்லிவந்தாள்! தகப்பனாரின் உஞ்சவிருத்தியில், தியாகுவும் உடன் சென்று பாடுவதுண்டு. தந்தைக்கு மகனுடைய பாட்டில் மகிழ்ச்சியே! என்றாலும், தியாகு நன்றாகப் படித்துச் சமஸ்கிருத வித்வானாக வேண்டும் என்பதே அவர் விருப்பம். அதற்கேற்றபடி திருவையாற்றில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரி இருந்தது. அது அச்சுதப்ப நாயகர் காலத்தில் புகழ்பெற்ற, மகா மேதாவி மந்திரியான கோவிந்த தீட்சதர் நாட்டியது. தீட்சதர் அதை, நாலந்தா, தக்ஷசீலம் போல் நடத்த எண்ணி வியாகரணம், தர்க்கம், வேதம், ஆயுர்வேதம், சோதிடம், வேதாந்தம் எல்லாம் கற்பிக்க ஏற்பாடு செய்தார்; அறுபத்துநான்கு கலைகளையும் கற்பிக்க விரும்பினார். அதற்குள் அவர் ஆயுள் முடிந்தது. பிறகு நவாபுகாலத்தில் இக் கல்லூரி நலிவுற்றது. தியாகராஜர் காலத்தில் மீண்டும் தலை தூக்கியது. இராமாயணம் பாரதம் பாகவதம் வேத வேதாந்தாதி கிரந்தங்களை இங்கே தக்க ஆசிரியர்கள் நன்றாகக் கற்பித்தனர். தியாகராஜர் இக்கல்லூரியிற் சேர்ந்து, நான்காண்டுகள் சமஸ்கிருதம் கற்றார். முதன்மையாக வால்மீகி இராமாயணம் அவரை உருக்கியது. தியாகராஜர் இராம காந்தத்தில் ஈடுபட்டார். வால்மீகியைப் படிக்கப்படிக்க, இராமபக்தி அவருடைய இரத்தத்தில் ஊறிப்போனது. அப்போதே தியாகராஜர் இராம சைதன்யரானார்! பத்ராசலம் இராமதாஸர் வரலாறும் கீர்த்தனங்களும் இந்த இராமபக்தியைத் தீவிரப்படுத்தின. "அந்த ராமமயம்'' என்ற கீர்த்தனத்தைப் பாடி தியாகராஜர் ஆனந்தக் கூத்தாடுவதுண்டாம்! இச்சமயம் தகப்பனார் ஸ்ரீ ராம விக்கிரகத்தைப் பூஜைபண்ணித் திவ்ய கானம் செய்து வந்தார். தியாகு, அப்பா பூஜைக்கு மலர் பறித்து வந்து கைங்கரியம் செய்வதும், அவருடன் இராம ஜபம் செய்வதுமானான். தந்தையும் இராம பிரம்மம்; அவர் பூசித்ததும் இராமனுருவம்; தன்னை வசீகரித்ததும் இராமாயணம்; தன் உள்ளத்தில் உதித்ததும் இராமதாரகம்! எல்லாம் இராம மயமாகவும் இராம ஜயமாகவும் அமைந்தன! தந்தை இராம பிரம்மம், இராமபக்தி பரவசத்திலேயே தம்மை மறந்தவர். உலகப் பொருள்களில் அவருக்கு ஆசையே இல்லை. அபரிக்ரக விரதத்தைப் பூரணமாக அவர் நிறைவேற்றினார். அவர் தஞ்சாவூர் மன்னர் தானமாகத் தந்த வீட்டை முதலில் மறுத்து, பிறகு கட்டாயப் படுத்தியதால் பெற்றுக்கொண்டு, மற்றொரு ஏழைப் பிராமணனுக்கு அதைத் தானம் கொடுத்துத் தாம் எளிய மனையில் வாழ்ந்தார். தந்தையின் வைராக்கியம் பன்மடங்காக மகனிடம் குடிகொண்டது. தியாகுவுக்குக் கல்லூரிப் படிப்புக்கூடப் பிடிக்கவில்லை. 'இராமாயணம் ஒன்றே தனக்குப் போதிய அறிவுச் செல்வம்' என்று கொண்டான் வாலிபக் காளை. அவன் உள்ளம், புரந்தரதாஸ் இராமதாஸ் பக்தபோதன மகான்கள்போல் இராமனைப் பாடிக் கொண்டும், பக்தி செய்துகொண்டும், நல்லபோதாகப் போக்கவேண்டும் என்று கருதியது. தாயார் சாந்தாவும் அப்படியே நினைத்தாள்; தியாகுவைத் தக்க சங்கீத ஆசிரியரிடம் விடவேண்டு மென்றே அடிக்கடி சொல்லிவந்தாள். தகப்பனாரோ, பிள்ளை பண்டிதனாகி ஆசிரியத் தொழில் செய்யவேண்டுமென்று விரும்பினார். தியாகுவின் சித்தம்

தாயார் வழியே சென்றது. கல்லூரியில் தர்க்க வியாகரணம் படிப்பதிலும், காதுகுளிர பக்தி கீதங்கள் கேட்பதிலுமே அவர் கருத்தூன்றினார்; அத்துடன் சோதிடமும் கற்றுத் தேர்ந்தார்.

அக்காலம் தஞ்சை யரசில் பல வித்வான்கள் இருந்தனர். துளஜாஜி, சரபோஜி ஆகிய மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் அரசு செலுத்திக் கலையைப் போற்றினர். அவர்களுடைய ஆதரவில் முன்னூறுக்கு மேற்பட்ட சங்கீத நிபுணர்கள் வாழ்ந்தனர். ராஜ சபையில் தனது திறமையைப் புலனாக்க அவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷத்தில் ஒரு தினமே கிடைக்கும். ஆகையால் சலியாது உழைத்துச் சந்தர்ப்பம் நேருங்கால் அதைச் செவ்வனே பயன்படுத்திக் கொள்ள அனைவரும் காத்திருந்தனர். அத்தகைய வித்துவான்களில் முதன்மையானவர் ஸொண்டி வெங்கட ஸுப்பையா. அவர் க்ருஷ்ணலீலா தரங்கிணியின் கர்த்தாவான நாராயண தீர்த்த யதீந்திரரின் சீடமரபினர். தெலுங்கு வருஷப்பிறப்பன்று அரசர்முன் வினிகை நடத்தும் உரிமை அவருடையது. அன்னாரின் புதல்வரான ஸொண்டி வெங்கடரமணையா என்பவரே தியாகராஜரின் குருநாதர். சிஷ்யரின் வரப்பிரஸாதமான இயலிசைத் திறமையையும், அகண்டமான மனோதர்மத்தையும் அவர் நன்றாக அறிந்து உளம் பூரித்தார். அந்த உத்தம ஸங்கீதத்தைப் பலரும் கேட்டனுபவிக்கவேண்டுமென்று ஆவல்கொண்டு, ஒரு நாள் ஒரு பெரிய ஸபையில் தியாகராஜரைப் பாடச் செய்தார். அன்று தியாகராஜர் "தொருகுனா இடுவண்டிஸேவ" என்ற பிலஹரிக்ருதியை முறைப்படி விஸ்தாரமாகப் பாடி அனைவரையும் பரவசமாக்கினார். ஆசானும் அகமகிழ்ந்து, "தொருகுனா இடுவண்டி சிஷ்யுடு" என்று வியந்து போற்றினார். பின்னர் தஞ்சையில், தம் குருநாதரின் தந்தையின் இல்லத்தில், அரண்மனை நிகழ்ச்சியொன்றை முன்னிட்டு வந்திருந்த திரளான வித்துவத்கோஷ்டியின்முன் தியாகராஜர் "மரி மரி நின்னே" என்ற காம்போஜி க்ருதியைப் பாடிப் புகழ்பெற்றார். இதன் பின்னரே சரபோஜி மன்னர் தியாகராஜரைக்காண ஆவல்கொண்டு செய்தியனுப்பினார். ஸொண்டி வெங்கடரமணையா தஞ்சை மராடிய மன்னனுக்குக் கண்போன்ற கலாரத்னம்; எல்லா வித்வான்களின் மரியாதையையும் பெற்ற சங்கீத கலாநிதி. இவர் அதிஷ்டவசமாகத் திருவையாறு வடக்குத் தெருவிலேயே இசைவிருந்தளித்து, பல மாணவர்களையும் பயிற்றிக்கொண்டிருந்தார். இவருடைய கானாமிருதம் தியாகராஜர் உள்ளத்தைக் கவர்ந்தது. இவர் தம்பூராச் சத்தம் கேட்டதுமே தியாகராஜர் ஓடிப்போய் வணக்கமுடன் இருந்து, சங்கீதரசம் பருகிவந்தார். நாதவாணியும் தியாகையர் உள்ளத்தில் வீணைமீட்டத் தொடங்கினாள்! வீட்டில் இராமமூர்த்திக்குப் பூமலர் தூவும்போதே, தியாகையரும் அன்புவெள்ளத்திற் பூத்த பாமலரைத் தூவி வந்தார். தியாகையர் முதலில் பாடிய பாட்டு, தேசீயத் தோடியில் "நமோ நமோ ராகவாய அநிசம்" என்பதேயாம். "சுகமுனிவரால் வணங்கப் பெற்றவன், தீனபந்து, சகலலோக தயாசிந்து, பாபாந்தகாரத்தைப் போக்கும் சூரியன், தொண்டருக்குக் கற்பகம்போன்றவன், தீன தயாளு, நல்லறிஞன், ஆயுராரோக்ய மளிப்பவன், சர்வஜன ரக்ஷகன் கஜேந்திரனைக் காத்தவன்-தியாகராஜன் சேவிக்கும் இத்தகைய

இராகவனுக்கு வணக்கம்" என்பது அப் பாடலின் பொருளாகும். இப்படியே மகன் பாடும் பாடல்களைத் தந்தை இராம பிரம்மம் பார்த்து, தக்க வித்வான்களிடம் காட்டினர். பாட்டிலுள்ள அருளும் பொருளும் அன்புணர்வும் பாவனரசமும் கண்ட பெரியோர் "தியாகராஜன் பக்திமான், புத்திமான், வரகவி, சங்கீதமணி" என்று புகழ்ந்தனர். தியாகராஜருக்குக் கேள்வியாலும், தந்தையிடம் கற்றதாலும் புரந்தர இராம தாஸர்களின் கீர்த்தனைகள் பல பாடமாயிருந்தன. அவற்றையே இலக்கணப்படி பயிற்றிய பிறகு, வேங்கடரமணர் ஸ்வர ஸாஹித்தியம் செய்துவைத்தார். இந்த வித்வானின் தாய்ப் பாட்டனாரான காளஹஸ்தி ஐயர், வீணை வித்வான்; அவரிடம் அரிய இசை நூல்கள் இருந்தன. வித்வானின் தகப்பனார் வேங்கடசுப்பையரும், நல்ல இசையேடுகளை வைத்துச் சென்றார். அவற்றையெல்லாம் தியாகராஜர் கூர்ந்து படித்து, புதுப்புது விஷயங்களை அறிந்துகொண்டார். ஆயினும், சங்கீத சாகரத்தை எளிதில் தாண்ட முடியவில்லை. பல சந்தேகங்கள் உதித்தன. அவற்றை வித்வான்கள்கூட நீக்க முடியவில்லை. முடிவில் தமக்கு இராம ஷடாட்சரியை உபதேசித்த கிருஷ்ணனந்தரிடம் கேட்டார். அவர், நாரதமந்திரம் உபதேசித்து, "ஸ்ரீ நாரதரையே உபாசித்தால் ஐயந் தீரும்; இசைவளம் பெருகும்" என்றார். தியாகராஜர், பக்தி சிரத்தையுடன் வரநாரதரைக் குருஸ்வாமியாக உபாசித்து வந்தார். நாரதர் கருணையால் தியாகராஜருக்கு "ஸ்வரார்ணவம்" என்ற அரிய ஸ்வர ரகசிய நூல் கிடைத்தது. அந்த நூல் சமய சஞ்சீவிபோல் உதவியது. நாரதீயம், ஸ்வரார்ணவம் முதலிய அரிய இசை நூல்கள் பூஜையில் வைத்துப் பாதுகாக்கப் பட்டுவந்தன. குருவின் அனுமதி பெற்றுச் சீடர்கள் அவ்வப்போது அவைகளிலிருந்து குறிப்பெடுத்துக் கொள்ளுவார்கள். அம்முதல் நூல்களும், சீடர்களின் குறிப்புகளும் நாளடைவில் மறைந்தது பிற்காலத்தவரின் துரதிருஷ்டமே.

தியாகராஜர், தினந்தோறும் 1,25,000-ம் இராமஜபம் வீதம், முப்பத்தெட்டாம் வயதிற்குள் 96 கோடி இராமஜபம் உருவேற்றினர்! கடைசிநாள் உள்ள முருகி ஸ்ரீராமனைப் பாடும்போது, கதவுதட்டிய சத்தம் கேட்டது; ஓடித் திறந்து பார்த்தார். ஸ்ரீராமலக்ஷ்மணர் விசுவாமித்ர யாக ஸம்ரக்ஷணத்திற்காகச் செல்லும் காட்சியைக் கண்டார்! உள்ளஞ் சிலிர்த்தார்; ஆனந்த பரவசமானர். பரம பக்தியால் உடல் சிலிர்க்கக் கண்ணீர் பெருக, "ஏல நீதயராது" என்ற அடாணு கீர்த்தனத்தைப் பொழிந்தார்; ராம சைதன்யராக விளங்கினர்.

பேரின்ப அருவிபோலத் தடதடத்துச் செல்லும் இக் கீர்த்தனத்தைக் கேட்டு இராமசேஷா சாஸ்திரிகள், கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ற புலவர்மணிகள், "நாரதரே இப்படிவந்து பாடுகிறார்!" என்று போற்றினர்கள்.

தந்தை இராம பிரம்மம், பிள்ளைகள் மூவருக்கும் திருமணம் செய்துவைத்தார். முதல் இரண்டு பிள்ளைகள், தமது நிலைக்குத் தக்கபடி வேலை பார்த்து உலகுடன் ஒட்டி வாழ்ந்தனர். அவர்களுக்கும் தியாகராஜருக்கும் வெகுதூரம். பரம பாகவதரான தம்பியை அவர்கள் "இராமப் பைத்தியம்"

என்றே நினைத்து வருந்தினர். "தோலினே சேஸின பூஜாபலமு" என்ற பாட்டில் தியாகராஜர் தமது குறைகளை முறையிடுகிறார். தியாகராஜர் பார்வதியம்மையாரை முதல் மனைவியாகக் கொண்டார். ஐந்தாண்டுகள் பதிகைங்கரியம் செய்து, அந்த உத்தமி உடலை உதறிச் சென்றாள். பிறகு அவள் இறுதி விருப்பப்படியே, அவளது தங்கை கமலாம்பாளை இவர் மணந்தார். இந்த அம்மாள் கற்பரசி; நாயகன் நோக்கமறிந்து நடந்த உத்தமி. இவள் வயிற்றில் ஒரு பெண் பிறந்தது. சீதாலக்ஷ்மி என்ற அந்தப் பெண்ணை சுவாமிகள் பிரியமாக வளர்த்து, தக்க வயதில், அம்மாள் அக்கிரகாரம் குப்புசாமி ஐயருக்குக் கன்னிகாதானம் செய்வித்தார். கலியாணம் சிறப்பாக நடந்தது. பக்தர்கள் காணிக்கையாகப் பல பொருள்களைத் தந்தனர். தியாகராஜர் அனைத்தையும் இராமார்ப்பணமே செய்தார். வாலாஜாப் பேட்டை வேங்கடரமண பாகவதர், தமது சீடர் பல்லவி எல்லய்யர் எழுதிய அழகான கோதண்டராம சீதா லக்ஷ்மணர் படத்தையும், உயர்ந்த சால்வை புடவை முடலியவற்றையும் குருவுக்குச் சமர்ப்பித்தார். தியாகராஜர் மற்றப் பொருள்களையெல்லாம் ஒதுக்கினார். ஸ்ரீராம படத்தைமட்டும் பெருமகிழ்ச்சியுடன் ஏற்று, 'நனுபாலிம்ப நடசிவச்சிதிவோ!' (என்னை ஆட்கொள்ளவே நடந்துவந்தாயோ, ஸ்ரீராமா!) என்ற மோகன கானத்துடன் உச்சிமேல் வைத்துக் கொண்டாடி, பூஜையில் வைத்தார். சீதாலக்ஷ்மிக்கு, "தியாக ராஜன்" என்ற ஒரு மகனிருந்தான். அவனும் இசை பயின்று, "வயலின்" வாத்தியந் தேர்ந்து, குரவம்மாள் என்ற பெண்ணை மணந்து இல்லறங் காத்தான். ஆனால் இப்பிள்ளை நோய்வாய்ப்பட்டு, முப்பதாம் ஆண்டில் வானுலகெய்தினான். அத்துடன் தியாகய்யர் சந்ததி ஓய்ந்தது. தியாக கீர்த்தனங்களே, அவரது அமரப் புதல்வர்கள்!

தியாகராஜர் புகழைத் தந்தை இருந்து பார்ப்பதற்கில்லை. மகன் சங்கீத சாதனம் செய்யுங் காலத்திலேயே ஒரு நாள், அவர் உயிர் இராம நாமத்துடன் பிரிந்தது. அப்போது இராம பிரம்மம் அருமை மகனைப் பக்கத்தில் அழைத்து, "தியாகு, உனக்கு நான் உலகோர் போற்றும் செல்வம் வைக்கவில்லை. நான் உஞ்சவிருத்தியாற் பிழைத்தேன். ஸ்ரீ ராமனை பஜனை செய்து வாழ்ந்தேன். உனக்கும ஸ்ரீ ராம தனத்தையே தருகிறேன். தியாகு, நீதான் எனக்கேற்ற பிள்ளை. உயிருள்ள மட்டும் ஸ்ரீராம மூர்த்தியை உபாசனைசெய்; அவனுக்கே வாழ்; அவனையே பாடு; அவனருள் உன்னை நடத்தட்டும். ஓம்! ஸ்ரீராம், ஜயராம், ராமஜயம்" என்று சொல்லி, ஸ்ரீராமபாதஞ் சேர்ந்தார்!

தந்தை யுரைகள் தியாகராஜரின் இராம பக்தியைச் சுடரோங்கத் தூண்டிவிட்டன. தியாகராஜர் சதா இராம நாமமும், இராம கானமுமாகவே உயிர்த்தார். நான்கு காசு சம்பாதித்து வயிறு வளர்ப்பதே வாழ்வென நினைத்த அண்ணன்மார்களுக்குத் தம்பியின் பக்தியும் பாட்டும் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றின. "தம்பி, நீ தண்டாகப்போய்ப் பாடிக் கொண்டிரு" என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். தியாகராஜர் தந்தையளித்த இராம விக்கிரகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றக் குடும்பச் சொத்துக்களைத் தமயன்மாருக்கே விட்டுவிட்டுத் தனியிடம் புகுந்தார். எளிய சிறிய மனையில், கூடத்தில் அழ-

கான மேடையமைத்து அலங்கரித்து, ஸ்ரீராமனைக் கொலுவிருத்தி, வாழ்வெல்லாம் அவனுக்கே அர்ப்பணித்தார் பரமபக்தர். "கோலுமவரே கதா கோதண்டபாணி" என்ற தோடி ராக கீர்த்தனமும், "கோலுவையுன்னாடே" "உபசாரமுலனு சேகோனவையா" என்ற பைரவி கீர்த்தனங்களும் தியாகராஜரின் சகுணோபாசனையை விளக்கும். பள்ளியெழுச்சி, அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், சிரமபரிகாரம் செய்தல், இரவில் திருப்பள்ளி சேர்த்தல், தாலாட்டல், பலவகையான இராஜோபசாரங்களைச் செய்தல், திருவிழா எடுத்தல் முதலிய எல்லா வழிபாடுகளையும் பாமாலைகளாகச் செய்து தியாகராஜர், தமது மூச்சையெல்லாம் நித்திய கீதாஞ்சலி யாக்கினார். "மேலுகோ தயாநிதீ, மேலுகோவையா, ஆரகிம்பவே, சேதுலார, துளஸி பில்வ, விடமு சாயவே, ஜோஜோராம ஆனந்த கன, லாலிலாலைய லாலி" முதலிய கீர்த்தனங்கள் சுவாமிகளின் தாஸ்ய வாத்ஸல்ய பாவபக்திகளைத் தெளிவாக்குகின்றன. தியாகராஜர் மதுரபாவனையை மேற்கொள்ளவில்லை; இராமதாஸர் கொண்ட தாஸ பாவபக்தியையே சாதகமாகக் கொண்டார். "நாஜீவாதார" என்னும் அழகான கீர்த்தனத்தில், "எனது பார்வையின் ஒளி, என் மூக்கிற்கு வாசனை, எனது ஜபவர்ணத்தின் ரூபம், நான் பூசிக்கும் மலர், எல்லாம் நீயே! நீயே எனது ஜீவாதாரம்" என்றார்.

தியாகையரின் பக்தி மகிமையும், கான மகிமையும் நாடெங்கும் பரவியது. தியாகராஜர் சரியான உயரம், ஒல்லி, மாநிறம், களையான முகப்பொலிவுடையவர். அவர் மார்பு அகன்றிருக்கும்; நெற்றி உயர்ந்திருக்கும்; கன்னங்கள் உப்பியிருக்கும்; குரல்வளை உரத்திருக்கும்; கண்கள் ஞானக்கனற் பிழம்பாயிருக்கும்! அவர் கழுத்தில் துளசி ஜபமாலை யணிவார்; இடுப்பில் ஜரிகை வேட்டியைப் பஞ்சகச்சம் வைத்துக் கட்டியிருப்பார்; மேலே ஓர் அங்கவஸ்திரம் போடுவார். பாடும்போது இது நழுவிவிடும். அவர் வலக்கையில் இரண்டு மோதிரங்கள் அணிந்திருப்பார்; எப்போதும் ஜபமாலை வைத்துக் கொண்டு ராமஜபம் செய்வார். உஞ்சவிருத்தி காலத்தில் தலையில் சிகப்புப் பட்டை, குஞ்சம் வைத்துக் கட்டுவார். இதற்குப் ப்ரபன்ன பாகையென்று பெயர். நெற்றியில் கோபிசந்தனம் இடுவார்; பாடும்போது இடக்கையில் சிப்பளாக் கட்டை வைத்திருப்பார். தம்பூரா பக்கத்திலேயே இருக்கும். பாட்டு வந்ததும் மீட்டிக்கொண்டு இராமசந்நிதியில் பரவசமாகப் பாடுவார். அவர், உடலுயிர்மனமெல்லாம் இராமார்ப்பணமே செய்தார். தெய்வ விரோதமான ஆடல் பாடல் பேச்சுக்களை அவர் வெறுத்தார். சீடர்களும் அவரிடம் பயபக்தியுடன் நடப்பார்கள். தெய்வாபசாரம் ஏதாவது செய்தால், இவர் பொறுக்கமாட்டார். ஒரு தரம் அவரது மாணவர்கள் ஒரு கலியாண வீட்டுக் கச்சேரிக்குப் போனார்கள். அங்கே ஒரு கணிகை ஜாவளி பாடி யாடினாள். அதைக் கேட்டுவந்து மாணவர், திண்ணையில் அமர்ந்து பாடிக்கொண்டிருந்தனர். தியாகையருக்குப் பெருங்கோபம் வந்துவிட்டது: "ஸ்ரீ இராமனைப் பாடும் இந்தப் பக்தவிலாசத்தில், வேசையின் ஜாவளியா பாடுவது? இப்படிப்பட்ட அபராதிகள் ஸ்ரீராம க்ரகத்தில் இருக்கக் கூடாது; போங்கள்" என்று துரத்திவிட்டார். பிறகு அவரது

தருமபத்தினி கணவனின் முன்கோபத்தை ஆற்றி, "தெரியாது செய்துவிட்டார்கள்; பிழையை மன்னிக்க வேண்டும்; ரோஜா என்றால் முள்ளும் இருக்கும்; முள்ளைக் கிள்ளி யெறிந்துதான் பூவைக் கொள்ளவேண்டும்; மனிதர் என்றால் குற்றமுங் குணமும் இருக்கும். இதமாகச் சொன்னால் யாரும் கேட்பார்கள்" என்று அமைதியாகச் சொல்லவே, தியாகராஜர் சினந்தணிந்து மனைவியை மெச்சி, சீடர்களை மீண்டும் புன்னகையுடன் வரவேற்று, "சாந்தமுலேக சௌக்யமுலேது" என்ற சாமாராகக் கிருதியைப் பாடினர். பெரிய வேதாந்தியானாலும் யோகசித்தனானாலும், கல்விமானானாலும் கோபம் பொல்லாது; சாந்தமின்றிச் சௌக்கியமில்லை என்பது அவர் கருத்து. "அசாந்தஸ்ய குதஸ்ஸுகம்?" (சாந்தமற்றோருக்குச் சுகமேது?) என்ற கீதையின் கருத்தமைந்தது அக் கீர்த்தனம்.

தியாகராஜர் காலை நான்கு மணிக்கே எழுந்து, திருப்பள்ளி யெழுச்சி பாடுவார்; காவேரியில் குளித்து வந்து நித்திய கர்மானுஷ்டானங்களைக் கருத்துடன் செய்வார்; பிறகு ஸ்ரீ ராமமூர்த்தியைப் பாமாலையாலும் பூமாலையாலும் வழிபட்டுப் பால் நிவேதித்துப் பருகுவார். வாரம் இரண்டொருமுறை பக்க வாத்தியங்களுடன் உருக்கமாகப் பாடிக்கொண்டு உஞ்ச விருத்திக்குச் செல்வார்; அதில் வந்ததைக்கொண்டே மாணவரையும் குடும்பத்தையும் அவர் காப்பாற்றினர். யாராவது மலர் கனிகள் அளித்தால், இராமார்ப்பணம் செய்து, ஒரு பாட்டுடன் நிவேதித்தே அவர் பயன்படுத்துவது வழக்கம். அவர் மாணவரிடம் எதுவும் பெற்றுக்கொண்டதில்லை. கச்சேரிகள் செய்து பணத்திற்கும் பாடியதில்லை. அவர் ஏகாதசி விரதம் ஒழுங்காகக் காப்பார். துவாதசியன்று விசேஷமான திருவாராதனம் நடத்தித் துளசித் தீர்த்தம் உட்கொண்டு பிறகே பாரணை செய்வார். அன்று துளசி பூஜைசெய்து, "துளசி, ஜகத்ஜனனி, அம்மராவம்ம" முதலிய துளசி மகாத்மிய கீர்த்தனங்களைப் பாடி வணங்குவார். பகல் 12 மணிக்கு நிவேதனம்செய்து உண்டபிறகு, சிறிது சிரம பரிகாரம் செய்துகொண்டு, சிஷ்யர்களுக்குத் தமது கீர்த்தனங்களை முறையாகச் சொல்லிக் கொடுப்பார். அவரவர் பக்குவத்திற் கேற்றபடியே பாடம் நடத்துவார். பண்டிதர்களைப்போல் அவர் பாடம் சொல்லவில்லை. பரம பாகவதர்போல் மாணவருக்குப் பக்தி பரவச முண்டாகவும், தமது பக்தி கானங்களை அவர்கள் நாடெங்கும் பாடிப் பகவத் கைங்கரியம் செய்யவுமே தியாகராஜர் சிஷ்யர்களைப் பழக்கினர். தஞ்சாவூர் இராமா ராவ் என்னும் அரிய மாணவர் ஒருவரே குருவிடம் தாராளமாகப் பழகி, "அது பாடுங்கள், இப்படிப் பாடுங்கள்" என்று நயமாக வேலை வாங்குவார். மற்றச் சீடர்களெல்லாரும் பயபக்தியுடன் இருப்பார்கள். அவர்களுள் முதன்மையானவர்கள், திருவொற்றியூர் வீணை குப்பையர், திருவையாறு ஐயா பாகவதர், வாலாஜாப்பேட்டை வேங்கடரமண பாகவதர், மானம்பூச்சாவடி வேங்கட சுப்பையர், தில்லைஸ்தானம் இராமையங்கார், லால்குடி இராமையர், உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தரையர், அமிர்தலிங்கம் பிள்ளை, நேமம் சுப்பராமையா, நங்கவரம் நீலகண்டையா, ஸொஜ்ஜிரி சீதாராமையா, கன்னையா பாகவதர், வேங்கடாசலபதி பாகவதர், கணேசப்பகாரு, கும்ப

கோணம் ஆராவமுதையங்கார், வாலாஜாப்பேட்டை பொட்டி ஜோசியர் முதலியோராவார். பின்னிருவரும், ஜோசியம் கற்றனர். மற்றவர்கள் முறையாக ஸங்கீதமும் ஸாகித்தியமுங் கற்றனர். தியாகராஜர் இவ்வாறு சங்கீத குருகுலமும் காலக்ஷேபமும் நடத்திவந்தார். மாலையில் சந்தி ஜபமும் இராம ஜபமும் ஆனதும், சுவாமிகள் சிஷ்யர்களுடன் மெய்ம்மறந்து ஸ்ரீ ராம பஜனை செய்வார். ஸ்ரீராமநவமி, கிருஷ்ண ஜயந்தி, ஏகாதசி முதலிய புண்ணிய நாட்களில் பஜனையும் தீபப்பிரதக்ஷிணமும் பலமாயிருக்கும். ஸப்தஸ்தான உத்ஸவ காலங்களில் சுவாமிகள், கோயிலிலும் சுவாமி புறப்பாட்டிலும் பரவசமாகப் பஜனை நடத்துவார். தமது பாடலேயன்றி, இராமதாஸ், புரந்தரதாஸ், ஜயதேவர் முதலிய மகான்களின் பாடல்களையும் உருகிப் பாடுவார். அவர் முதலில் பிடிவாதமாக இராமபக்தியே செய்து இதர தெய்வங்களைப் பாராதிருந்தார். "அதிலாவண்ய இராமா, உன் மனசு, உன் சொகுசு வேறுதான்! நீ யிருக்கும்போது தாமஸ தெய்வங்களை நான் தொழப்போமோ?" என்றும் பாடினார். அவர் பத்தினி சிவ பக்தை; தரும சம்வர்த்தினி உபாசகி. அரியும் சிவனும் ஒன்றென்று அவள் நாயகனிடம் சொல்லுவதுண்டு. இவர் தருமசம்வர்த்தினி யம்பாள் பவனியைக்கூடப் பார்ப்பதில்லை. தமது தங்க இராமனையே தியானிப்பார். கனவில் அவனுருவைக் காண்பார். ஒரு சமயம் இக்கனவுக் காட்சி வரவில்லை. அவர் உடம்பும் நோயால் படுத்தது. அச்சமயமே ஈசுவரன் பல வடிவாக வந்து பக்தர்களைக் காக்கிறான் என்பதை அறிந்தார்; பிறகு சிவ பரமாகவும், சக்தி பரமாகவும் பாடத் தொடங்கினார். "கருணஜூடவம்மா" (கருணை பாரம்மா) என்ற தோடி ராகக் கீர்த்தனத்தில், "சந்திர கலாதரன் மனைவியே, பஞ்சநத நகர நாயகியே, உன் பக்தி வரந்தா; என்னைக் கைவிடாது கா" என்று பாடுகிறார். ஸாவேரியிலுள்ள "கன்ன தல்லிநீவு" என்ற பாட்டிலும், திரிபுரசுந்தரியிடம் பக்தி வரம் வேண்டுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளியுபாசனை சித்திபெற்று, இராமன் கண்ணன் சிவன் பிரம்மம் ஆகிய எல்லாத் தெய்வ பாவனைகளிலும் சித்தி பெற்றதுபோலவே, தியாகராஜரும் இராம பக்தியில் சித்தி பெற்று, மற்றெல்லாத் தெய்வ வடிவங்களையும் சம பக்தியுடன் பாடி வணங்கினார். "சம்போ மஹாதேவ" என்று பந்துவராளி கீர்த்தனமும் "சிவசிவசிவ, சிவேபாஹிமாம்" என்ற கல்யாணி கீர்த்தனமும் தியாகராஜரின் சிவபக்தியை விளக்கும். தெய்வ ரசம் கண்டால் சமரசம் உண்டாகும். வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களுக்கேற்ற பாடல்களும் பல உண்டு.

அந்தக் கால நிலை படுமோசமாயிருந்தது. சுதேசி இராஜ்யங்கள் ஒவ்வொன்றாக அன்னியர் கைவசம் வந்தன. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் பெருஞ் சண்டை நடந்தது. அதன் பயனாக இருபுறத்திலும் சேர்ந்த இந்தியர் வருந்தினர். நாடெங்கும் கொள்ளையும் போரும் பஞ்சமும் சூழ்ந்தன. நான்கு மைசூர்க் கலகங்கள் நடந்ததில், பிரெஞ்சுக்காரர் கை தளர்ந்து, ஆங்கிலேயர் ஆட்சி வலுத்தது. தஞ்சையில் நாயக்கர் ஆட்சி ஒய்ந்து, மராட்டியர் ஆட்சி வந்தது. ஸ்ரீரங்கபட்டணத்தில் திப்பு சுல்தான் வீழ்ந்த ஆண்டிலேயே தஞ்சையும் ஆங்கி

லேயர் கைக்கு வந்தது. மராட்டியரை வென்று, நவாபு கொடி போட்டான். பிறகு ஐதராலி வந்து தஞ்சை ஜில்லாவைப் படு கொள்ளை யடித்தான். அதன்பிறகு, சரபோஜி மகாராஜா அரியணை வகித்தான். 1719 ஆம் ஆண்டில் அவனும் கும்பினிக் காரரிடம் அரசைத் தந்து ஜீவனும்சம் வாங்கிக்கொண்டு சுகமாகக் காலந் தள்ளினன். சரபோஜி 1832-ல் இறந்தான். பிறகு சிவாஜி அரசனுனன். தியாகராஜர் காலத்தில் இந்த இரண்டு மன்னரே பேருக்கு ஆண்டனர் தஞ்சையை. அதிகாரமெல்லாம் ஆங்கிலேயரிட மிருந்தது. பிடிவிலைப் பஞ்சம் நாட்டைப் பற்றிக்கொண்டது. கலையைத் தேடுவாரில்லை. மன்னர் ஆதரவும் கிடையாது. பொது ஜனங்களுக்கும் வயிற்றுப்பாடே பெரும்பாடா யிருந்தது. பக்தி சிரத்தை, விசுவாசம், தெய்வ நம்பிக்கை, ஆராதனை, வேதாப்யாசம், கான வித்தை எல்லாம் ஆதரவற்றன. சங்கீதத்தின் தாயகமான தஞ்சையும் மைசூரும் குழப்பத்தில் ஆழ்ந்தன. வித்துவான்களெல்லாம் ஆதரவில்லாமல், வேறு சமஸ்தானங்களைத் தேடிச் சென்றனர். அக்காலம் இராமனுதபுரம், சிவகங்கை, திருவனந்தபுரம் ஆகிய மூன்றுமே வித்துவான்களைப் போற்றின. திருவாங்கூரில் மார்த்தாண்ட வர்மன் தன் அரசைப் பத்மநாபருக்கே அர்ப்பணம் செய்தான். அவனுக்குப் பிறகு வந்த இராமவர்மா, அஸ்வதித் திருநாள், அவிட்டம் திருநாள், கௌரிலக்ஷ்மி பாய் முதலியோர் சிறந்த ரசிகர்கள். இவர்கள், வித்துவான்களையும் புலவர்களையும் ஆதரித்தார்கள். இவர்களுக்குப் பிறகு வந்த சுவாதித் திருநாளோ, (1829 — 1847) தலை சிறந்த சங்கீத ஸாஹித்திய வித்துவான். இவர் வித்துவான்களுக்கு ஏராளமான சன்மானம் தந்தார். தியாகராஜர் புகழையுங் கேட்டு மகிழ்ந்து, அவர் இசைச் செல்வத்தைப் பல வித்துவான்கள் பாடச் செவிமடுத்தார்.

தியாகராஜரின் சூழ்நிலை, அவருடைய பக்தி மார்க்கத்திற்கு நேர் விரோதமா யிருந்தது. எப்படியாவது பணம் சம்பாதித்து வயிறு நிரப்புவதே பெரும்பாலாரின் முயற்சி. ஈசுவர நம்பிக்கையில்லை. கற்றறிந்த வித்துவான்களும் செல்வரைப் புகழ்ந்து பாடிப் பிழைக்கத் தொடங்கினர். காலநிலையைத் தியாகராஜர் தெளிவாயறிந்து கலிநருலகு, தோலினேசேஸின முதலிய கீர்த்தனங்களில் முறையிட்டிருக்கிறுர். தியாகராஜரை அந்தச் சுற்றம் அறியவில்லை. கேலியும், கிண்டலும், வசையும், அலட்சியமுங் கொஞ்சமன்று. பொருமைப் புயல் ஆத்திரக் கோடை யிடியுடன் வீசி யடித்தது. இப்புயல் முத்தண்ணுக்களிட மிருந்தே கிளம்பி ஊரெல்லாம் பரவியது. "இவனென்ன மகா வித்துவானே? சும்மா இராமா, இராமா'' என்று அபயக்குரல் வைக்கிறுன். இராமன் பெயரால் பக்தி நடித்து ஊரை ஏமாற்றுகிறுன். சங்கீதத்தில் இவனுக்கென்ன தெரியும்? ஏதோ பழைய மெட்டுக்களில் வார்த்தையைத் திணித்துக் குரலைக் கொண்டு வித்தை காட்டுகிறுன். தாள மேளங்களைக் காட்டி, மகா பக்தன்போல் நடித்து, ஊரை ஏமாற்றுகிறுன். ஏதாவது வேலை வெட்டி பார்க்காமல் சும்மா இராமக் கூப்பாடு போடுகிறுன்''. இந்தமாதிரி யெல்லாம் சுற்றிலும் புஸ்வாணங்கள் பொருமைத் தீப்பற்றிக் கிளம்பின. தியாகராஜரின் செவிக்கு இவை எட்டும். அவர் காதில் படும்படியே பகைவர் கிண்டல் செய்வார்கள்.

சாது பதிற் பேசாமல் ஸ்ரீ இராமன் பாதங்களைப் பற்றி, "அப்பனே, என்னை ஏன் இந்த நாத்திகர்களிடையே வைத்தாய்? ஹரி பக்தி யில்லாதவர்களிடையே நான் இருப்பதும் உன் சம்மதமோ? ஸ்ரீ ராமா, எனக்கொரு வழிகாட்டு. சாந்தமாக உன்னையே துதித்துக்கொண்டிருக்கும் பாக்கியத்தைத் தா. தாயாதிகள் போரும் உலகோர் பொறாமையும் என் அமைதியைக் கெடுக்காமல் அருள்" என்று முறையிடுவார்.

தியாகராஜர் கீர்த்தனங்கள் எத்தனையோ உள்ளங்களுக்கு ஆறுதலளித்தன. பொறாமைக்காரர்களுக்கு மட்டும் அவர் புகழும் இசையும் சங்கட மளித்தன. தியாகராஜரின் முத்தண்ணா ஜப்யேசனுக்கு, "தம்பிக்கு பைத்தியம் பிடித்து விடாது குடும்பத்தைக் கவனிக்காமல் இந்த இராம விக்கிரகத்தைக் கட்டி அழுகிறான்" என்ற எரிச்சல் பற்றிக்கொண்டது. அத்துடன் நல்லோர் தம்பியைப் புகழ்வதைக் கேட்டுப் பொறாமையும் சேர்ந்து மனம் அக்னிஜ்வாலையானது. "அட பாட்டுத்தான் பாடுகிறானே, நாலு சபைகளிற் பாடி குடும்பத்திற்கு வரும்படி சம்பாதித்தாலும் பரவாயில்லை யென்னலாம். அதேது? சோற்றுக்குத் தாளம் போடுகிறான். உஞ்சவிருத்தி தப்பினால், வழியில்லை; சிஷ்யக் கூட்டத்திடமும் ஒன்றும் வாங்குவதில்லை; பணக்கருத்தே யில்லை; வீட்டுக் கருத்தில்லை; எப்போதும் இராமக் கூப்பாடுதான்!" என்று முத்தண்ணா, தியாகராஜர் பாட்டு எழுதி வைத்திருந்த புத்தகத்தையும் தீ வைத்துக் கொளுத்தி விட்டான். ஏராளமான கீர்த்தனங்கள் அவனால் மறைந்தன.

தியாகராஜர் உள்ளம் இந்தக் கொடுமையால் கொதித்துக் கொண்டிருந்தபோது, மற்றொரு பெருங்கொடுமை நடந்தது. அண்ணன்மார் இருவரும், தம்பியின் பைத்திய அமளிக்கு காரணம் அந்த இராமவிக்கிரகமே என்றெண்ணி அமாவாசை நிசியில் தியாகராஜர் வீட்டிற் புகுந்து இராம விக்கிரகத்தை மெல்லத் திருடிக்கொண்டு போய்க் காவேரி வெள்ளத்திற் போட்டுவிட்டு, "இனி இவன் இராமப் பித்தம் தெளியும். குடும்பக் கருத்துடன் வாழ்வான்" என்று மகிழ்ந்தனர்.

மறுநாட் காலை திருப்பள்ளியெழுச்சி காண வந்த தியாகராஜர் திகைத்து நின்றார்! ஸ்ரீ ராம விக்கிரகத்தைக் காணவில்லை! அண்ணன்மார் கொடுமையை உடனே உணர்ந்தார். உலகில் சாதுக்களுக்கு துஷ்டர்களால் வரும் துயர்களை நினைத்து விம்மினார். தமயன்மார்களை ஒன்றும் கேட்கவில்லை. கேட்டாலும் "போடா பைத்தியம்" என்பார்கள். தம் குறைகளை ஸ்ரீ ராமனிடமே முறையிட்டார் பரமபாகவதர். அந்த முறையீடு அற்புதமான கீர்த்தனங்களாக எழுந்து, இன்றைக்கும் நம் உள்ளத்தை உருக்குகிறது! "அநியாயமு ஸேயகுரா" என்ற காபி ராகப் பாட்டில் "ஹே ராமா, நீ எனக்கு அநியாயம் செய்யலாமா? அரசே, நான் உன் அடியான். எத்தனையோ பிழை செய்தவர்களை யெல்லாம் நீ காப்பாற்றினாய்; ஜடபரதர் ஆற்று வெள்ளங்கொண்ட மான் குட்டியைக் காக்கவில்லையா? கடலில் மூழ்கும் மந்திரமலையை நீ ஆமையாகவந்து தாங்கவில்லையா? தனக்குத் தீமையே செய்த துரியோதனனையும், சித்திரரதன் கட்டிய கட்டிலிருந்து விடுவிக்கத் தருமபுத்திரர் தம்பியை ஏவ

வில்லையா! ஹே ராமா, என் அண்ணன்மார் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டிய நீயும் அநியாயம் செய்யலாமா? என்னைக் காப்பது உன் பாரமே யன்றோ?'' என்று முறையிட்டார். நபோமணி ராகத்தில் ''நாயெட வஞ்சன ஸேயகுரா'' என்ற பாட்டைப் பாடி, ''இராமா, நான் மாயத்தில் மயங்கி, பெண்ணே, பொன்னே என்று திரியும் உலகாயதர்களுடன் சேர்ந்து மச்சரனுக வாழவில்லை; மற்றவர்களைப்போல் வெளிப் பகட்டுக்காக பக்தி நடிக்கவில்லை; உன்னை அந்தரங்க சுத்தியுடன் நம்பிய என்னை வஞ்சிக்காதே; தாயாதிகளின் போர் தாங்காமல், உன்பால் முறையிடுகிறேன். என்னைக் காப்பாற்றப்பா!'' என்று கதறினர். பைரவத்தில் மரியாத காதையா என்னும் பாட்டில், ''சரிசமனுன சகோதரர் முன்னே என்னை இகழ்ச்சி செய்தல் உனக்குச் சரியில்லை; ஐயா, என்னைக் காப்பாற்று!'' என்று முறையிட்டார். ரானிது ராது என்ற பாடலில் தமது ஊழ்வினையை நொந்துகொண்டார். தோலினே ஜேஸின பூஜாபலமு என்ற பாட்டில், ''ஹரிதாசர்கள் இல்லாத இந்த நாத்திகபுரியில் என்னைப்போட்டு ஒரு வழியும் காட்டாமல் இருக்கிருயே. இது நான் பூர்வஜன்மத்திற் செய்த வினைப் பயனு?'' என்று வருந்தினர்.

ஸ்ரீ ராம மூர்த்தியைக் காணுமல், பூசிக்காமல் ஒரு நொடியும் இருக்க முடியவில்லை; உயிர் துடிக்கிறது; அன்னபானமில்லாமல், உறக்கமில்லாமல், இராமசைதன்யர் இராம விரகத்தால் அலறினர்; முடிவில் அண்ணன்மார் தன்னுயிரான இராம விக்கிரகத்தை ஆற்றிலேதான் எறிந்திருக்கிருர்கள் என்பதை ஊகித்தார்; காவேரிக்கரை யோரமெல்லாம் இராம மோகங் கொண்டு முறையிட்டலைந்தார். அந்த முறையீடுகள் கருணரசமும் பக்திரசமும் சேர்ந்த அற்புதமான நாதச் சித்திரங்களாக உலகுள்ளமட்டும் விளங்கும்.

தமயன்மார்களோ, ''கத்திக்கத்தி ஒழியட்டும், பைத்தியம்'' என்று ஏளனம் செய்துகொண்டிருந்தார்கள். இச்சம்பவம் நடந்து ஓராண்டு பறந்துபோனது. நாதனைப் பிரிந்த பத்தினி போலத் தியாகராஜரும் துன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். பக்தன் முறைகளைப் பரமாத்மன் கேளாமலா இருப்பான்?

ஒருநாள் தியாகராஜர் நீண்டநேரம் பஜனை செய்து ஸ்ரீராம மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே உறங்கினர். கனவில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தோன்றி, ''அன்பா, கவலைப்படாதே! என் விக்கிரகம் ஆற்றுமணலில் புதைந்திருக்கிறது. தோண்டியெடுத்துவா'' என்று சொல்லி அந்த இடத்தையும் குறிப்பிட்டு மறைந்தார். தியாகராஜர் உடனே ஆனந்த பரவசராகி, ஓடிச் சென்று, குறித்த இடத்தில் மணலைத் தோண்டினர். முன்னினும் அதிகக் காந்தியுடன் பளபளவென்று மிளிரும் தங்க விக்கிரகம் கிடைத்தது! அதை மிகவும் அன்பார்வத்துடன் மார்போடணைத்து முத்தமிட்டு, உச்சிமேல் வைத்துக் கொண்டாடி, ''ராரா மா இண்டிதாக'' என்ற அசாவேரிக் கீர்த்தனம் பாடி, வீட்டிற்குக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்து, சோடசோபசாரமும் செய்வித்து, மறுநாள் மிகச் சிறப்பாக ஊர்வலம் நடத்தினர். அப்போது அரிய பெரிய இசைமலர்கள் அவர் வாக்கிற் பூத்தன; வஸந்தாவில் ''எட்ல தோரிகிதிவோ'' (எப்படித்தான் நீ மீண்டும்

கிடைத்தாயோ), ஆகிரியில் "சல்லரே ராமசந்துருனி பை பூல" (ஸ்ரீராமச்சந்திரன்மேல் மலர் தூவுங்கள்), ஹுஸேனியில் "ரகுவீரா ரணதீரா", எதுகுல காம்போதியில் ஸ்ரீராம ஜய ராம ச்ருங்கார ராமயனி" முதலிய கீர்த்தனங்கள் அன்று பக்தகோடிகளைப் பரவசப்படுத்தின.

ஊர்வலம் அமிர்த வர்ஷமான கானத்துடன் திரும்பி வருகிறது. பக்தர்கள் மலர் தூவி வணங்குகிறார்கள். அப்போது தியாகராஜர், "ஸ்ரீராமா, நீ மீண்டும் கிடைத்ததற்காக நன்றி. என் மனம் குளிர்ந்தது! ஆனால், என்னுயிரான உன்னை ஆற்றில் எறிந்து, நாளும் என்னை இடும்பை செய்யும் என் சகோதரர்களிடமும் தாயாதிகளிடமும் சற்றே கருணைவைத்து, அவர்களுக்கும் உன் அன்பு பெருகச் செய்யமாட்டாயா, இராமா?" என்று வேண்டினார். அந்த வேண்டுகோள் உடனே பலித்தது. ஜப்யேசனும் ராமநாதனும் ஓடிவந்து, தம்பி காலில் விழுந்து, "தியாகு, நீ தெய்வப்பிறவி. நாங்கள் தாமஸகுணத்தால் உன்னை அறியாமற் செய்த கொடுமைகளை நீயே பொறுத்தாய். பரம சாதுவாகிய உன்னை என்ன பாடு படுத்தினோம்! எங்களை நீ மன்னித்து, உன் பக்த கோடிகளுடன் சேர்த்து உபதேசம் செய்ய வேண்டும்" என்று பணிந்தனர். அவர்கள் மனைவியரும் ஸ்ரீராமனுக்கு ஆரதி எடுத்துச் சேவித்தனர். தியாகராஜர் அனைவரையும் மகிழ்ச்சியுடன் ஏற்று, எல்லாம் ஸ்ரீராமன்செயல் என்று மகிழ்ந்தார். அன்றுமுதல் அண்ணன்மாரும் பஜனையில் ஈடுபட்டனர்.

அப்பரைப் போலவே தியாகராஜரும், 'நாமார்க்கும் குடியல்லோம்; கடவுளுக்கே ஆளாவோம்' என்னுங்கொள்கையுடையவர். அவர் கீர்த்தனங்கள் முழுதும், மாசற்ற தெய்வ மாலைகளே! அதில் நரத்துதி வாடையே இல்லை. சிற்றின்ப வாடையும் கிடையாது. சிற்றின்ப வர்ணனைகள் வரக்கூடிய "நௌகா சரித்திர"த்திற் கூட, பக்திபரவசமே காண்கிறோம்! தியாகராஜர் பணத்தை மதித்ததில்லை; பணத்திற்காகப் பாடியதுமில்லை; ஸ்ரீ ராமனுக்கே தம் கலையை அவர் அர்ப்பணித்தார். அவர் புகழ் நாடெங்கும் பரவியது. திருவாங்கூர், மைசூர், சிவகங்கை, இராமனாதபுரம், எட்டையபுரம் சமஸ்தானங்களிலெல்லாம் அவர் பாடல்கள் முழங்கின. இந்த ஸமஸ்தானாதிபதிகள் அவரை அழைத்துச் சன்மானம் செய்ய ஆவலாயிருந்தனர். தஞ்சாவூரைப் பற்றிக் கேட்கவேண்டுமா? சரபோஜி ராஜர் கலாநிபுணர், கலாபிமானி, புலவர் கற்பகம். தியாகராஜரின் கீர்த்தனங்கள் அவர் சபையில் தினந்தோறும் முழங்கின! எத்தனையோ வித்துவான்கள் அவரைத் துதித்துப் பாடினர். சரபோஜிக்கு ஒரு பேராசை எழுந்தது. நாடெங்கும் புகழ் பெற்ற தியாகராஜர் வாக்கினால் தம்மைப் பாடினால் தமது புகழ் என்றென்றும் இருக்கும். அரசைவிடக் கவிதைக்கு நிலைப்பதிகம் என்று எண்ணங்கொண்டார். உடனே தியாகராஜரை அறிந்த ஒரு ராயரை அழைத்தார். பெருந்தொகை தந்து, காதில் ஏதோ ஓதினார். "காரியத்தை முடித்துவாரும். பாகவதரைக் கையோடழைத்து வாரும்," என்றனுப்பினார்.

ராயர்வாள் வந்து வணங்கிச் சமயம்பார்த்து, தியாகராஜர் முன்னே பணமூட்டையை வைத்தார். அதைப் பக்தர் தொடக்கூட இல்லை. 'வந்த செய்தியென்ன' என்று மட்டும் கேட்டார்.

ராயர்: சரபோஜி மாஹாராஜா கொடையிலே கர்ணன்; கலையிலே புதன்! பாட்டிலே துகாராம். அவர் தங்களுக்குப் பத்து வேலி நிலமும், தங்கத்திரளும் தருவார்.....

தியாக: எனக்குத் தருவானேன்?

ராயர்: தங்கள் பாட்டுங் கலையும் பக்தியும் ஒழுக்கமும் அவரை அப்படி வசப்படுத்திவிட்டன! அரசருக்கு ஒரு விருப்பம். அதைப் பூர்த்தி பண்ணினால், மேற்சொன்ன பரிசும் இங்கே பெரிய மாளிகையும் தங்களுக்கு இன்றே கிடைக்கும்!

தியாக: [பேச்சில்லை] ஸ்ரீராமா!

ராயர்: தங்கள் திருவாக்கினால் சரபோஜி மகாராஜாமீது இரண்டொரு கீர்த்தனம் பாடி, இராஜசபையில் இசைத்தாலே போதும். அவ்வளவுதான், இராஜா கனகாபிஷேகம் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்.

தியாக: ஐயா, என்ன சொன்னீர்? இராமனைப் பாடும் வாக்கால், நரனைப் பாடுவதா?

ராயர்: நரனா? அரசனல்லவா?

தியாக: இந்தக்காலம் அரசர் வாழ்வு தெரிந்ததுதானே? கொலையும் கொள்ளையும் அக்கிரமங்களும் செய்து, பொருள் குவித்து இயக்கும் மனிதர்களைப் பாடவா ஸ்ரீராமன் எனக்கு வாக்கை அளித்தான்?

ராயர்: பேசாமல் அரசனைப் பாடுங்கள். தங்கள் வறுமை தீரும். பொன்குவியும், நவநிதியும் பெருகும். சுகமா யிருக்கலாம்.

தியாக: அப்பனே, எனக்குப் பொன்வேண்டுமானால் தங்கராமனை உருக்கிச் செலவிட்டிருப்பேனே! பொன் எனக்கு மண்ணாகத் தோன்றுகிறதே! நீ சொல்லும் நிதி சுகமில்லையே. கருணா நிதியான இராமன் சந்நிதியே சுகமெனக் காண்கிறேன்! மனமே, நீ சொல்லு உண்மையாக. அரசனுடைய நிதி சுகமா, இராமஸந்நிதி சேவை சுகமா? பாலும் தயிரும் வெண்ணெயுமாகச் சாப்பிடும் செல்வர் வாழ்க்கை பெரிதா? தாசரதியான இராமனின் தியானமும் பஜனையுந் தரும் அமிர்தரசத்தை உண்ணும் பேரின்பம் பெரிதா? தெள்ளத்தெளிந்த ஞான கங்கையில் நீராடல் சுகமா? அல்லது துர்விஷயக் கேணியில் விழுதல் சுகமா? மமதை பிடித்த நரஸ்துதி சுகமா? என்னைக் காக்கும் அருட் பெருமானை இறைவனைப் பாடுதல் சுகமா? சொல், மனமே!

கல்யாணியில் "நிதி சால சுகமா" என்ற இப்பொருள் கொண்ட கீர்த்தனத்தை தியாகராஜர் ஆவேசமாகப் பாடினார். வந்த ஆள் மறுபேச்சில்லாமல் நமஸ்காரம் செய்து சென்று, அரசனிடம் நடந்ததைச் சொன்னார். அரசனுக்குச் செருக்கும் சினமும் பற்றிக்கொண்டன "நான் தஞ்சை அரசன் என் மேல் பாடக் கட்டளையிடுவது. இந்த உபாதானச் செம்பு அதை மறுத்துப் பாடுவதா? என் ஆட்சியிலிருக்கும் இந்த மனிதன் என்னை அலட்சியம் செய்வதா?" என்று சீறியெழுந்து, "எப்படியாவது தியாகராஜரை நம்முன் அழைத்து வாருங்கள்" என்று சில ஊழியர்களை அனுப்பினான். சேவகர்கள் புறப்பட்டதுமே அரசனுக்கு வயிற்றுவலி பொறுக்க முடியாமல்

வருத்தியது. மருந்து மாயம் ஒன்றாலும் அது தீரவில்லை. தியாகராஜருக்குச் செய்த குற்றமே இப்படி வந்ததென்று ஓர் உணர்ச்சி பிறந்தது. உடனே பிழை வருந்தி, தானே திருவையாறு சென்று, தியாகராஜரை வணங்கித் தனது நோயைத் தீர்த்தருள வேண்டினான் மன்னன். தியாகையர், ஸ்ரீ ராமனையே தியானித்து, "அப்பனே, எல்லாம் நின்செயல். இந்த அரசன் நோயைத் தீர்க்கவேண்டும்" என்று வேண்டினார். உடனே வயிற்றுவலி நின்றது. மன்னன், மகிழ்ச்சியும் மரியாதையும் பயபக்தியும் மிகுந்து, தியாகராஜரை வணங்கி இராமப் பிரசாதம் பெற்று அன்று பஜனையில் தியாக கீதம் கேட்டுப் பூரித்து ஊர் வந்துசேர்ந்தான். அன்றுமுதல் தியாகராஜரை அவதார புருஷராகவே அரசன் கருதினான். தியாகராஜர், தியாகத்திற்கு ராஜரே! அவர் தமது இசைச் செல்வத்தை யாருக்கும் விற்கவில்லை. எல்லாருக்கும் கொள்ளுமட்டும் அள்ளி யள்ளித் தந்தார்! போகராஜரான மன்னர் இந்தத் தியாக ராஜரை எவ்விதத்திலும் மயக்கமுடியவில்லை.

தஞ்சை மன்னன் அடிக்கடி மறைவாக வந்து தியாகராஜரின் பக்தி கானத்தைக் கேட்பதுண்டு. எப்படியாவது தியாகையர் வீட்டை அழகாகக் கட்டித்தரவேண்டும் என்று அவன் நினைத்தான்; பலிக்கவில்லை. ஒருநாள் தியாகையர் வீட்டுப் பின்புறம் ஒரு கொட்டகை போட்டால் மாணவருக்குச் சங்கீதம் சொல்லித்தரச் சௌகரியமாக இருக்கும் என்று யாருடனே பேசிக்கொண்டிருந்தார். இந்தச் செய்தி எப்படியோ அரசனுக்கு எட்டியது. வீட்டைப் பெரிதாகக் கட்டலாமென்று இரகசியமாக அவன் ஏற்பாடு செய்தான். தியாகையர் அப்போது திருவாரூர் சென்றிருந்தார். மூன்று நாளைக்குப் பிறகு வந்து பார்த்தார். தாம் நினைத்ததுபோன்று கொட்டகை அழகாக அமைந்திருந்தது. அன்றுதான் அரசனும் வீட்டை அமைப்பதாக ஆள் அனுப்பினான். தியாகையர் நினைத்த கொட்டகை பூர்த்தியாய்விட்டது என்பதைக்கண்டு ஆள் ஏமாந்து சென்றான். அக் கொட்டகையைப் போட்டவர் செல்வரன்று. ஐயம்பேட்டையிலிருந்து இசைப் பயிற்சிக்காக வந்து, வணக்கமாக அமரும் வேங்கடரமண பாகவதரே! தக்க ஆட்களை அழைத்துவந்து, கிடுகும் மூங்கிலுங் கொண்டு ஒரேநாளில் தாமும் உடனிருந்து கொட்டகையை அமைத்தார். குருபத்தினி கூலி தந்தாள். பக்தர் மறுத்துவிட்டார். இந்த அன்பருக்குத் தியாகராஜர் இராமதாரக மந்திரத்தை உபதேசித்துத் தமது கீர்த்தனங்களையும் ஏராளமாகச் சொல்லித்தந்தார்.

திருவாங்கூர் மன்னரும், பேரிசைச் செல்வருமான சுவாதித்திருநாள் மன்னர் எப்படியாவது தியாகராஜரை அழைத்து வரச் சொல்லி, வடிவேலு என்ற புகழ்பெற்ற வயலின் வித்துவானை அனுப்பினர். திவான் சுப்பராவ் இசைப்புலவர்; அவரும் ஓலை தந்தார். வடிவேலு வெகுநாள் பிரயாணம் செய்து திருவையாறு சேர்ந்து சமயம்பார்த்துக் காத்திருந்து, தியாகராயரைக் கண்டு வணங்கி மெல்லத் தன் கருத்தை வெளியிட்டார்.

வடிவேலு: திருவாங்கூர் புண்ணியநாடு. அரசர் சுவாதித்திருநாள் நீதிமன்னர். பெரிய சங்கீத சாகித்திய வித்துவான். அவரைச் சுற்றிக் கோவிந்தமாரார், சிவானந்தம், சின்

னையா, பொன்னையா, ரவிவர்மன், கூீராப்தி, மேருசாமி, பரமேச்வர பாகவதர் முதலிய மகாவித்துவான்கள் சங்கீத விருந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அடியேனும் அங்கே 'வயலின்' வாசிக்கிறேன். திவான் சுப்பராவ், இராணி ருக்மணிபாய் எல்லாரும் நல்ல ரசிகர்கள்.

தியாக: சரி, சந்தோஷம்!

வடிவேலு: அவர்கள் அத்துடன் சந்தோஷப்படவில்லை. தாங்கள் ஒருமுறைவந்து இராஜசபையில் பாடினாலே அவர்களுக்குச் சந்தோஷம். தங்கள் பாட்டைக் கன்னையா பாகவதர் பாடக்கேட்டு அரசர் மெச்சித் தங்களை அழைத்துவரச் சொன்னார்; தயவு செய்ய வேண்டும்.

தியாக: அப்பனே, அங்கே வித்துவான்கள் பாடுவது போதுமே! நான் இராமசபையில் பாடிக்கொண்டு, அவன் அருளுக்கே வாழ்கிறேன். இதுதான் எனக்குத் திருப்தியாயிருக்கிறது. நான் நரஸ்துதி பாடுவதில்லை.

வடிவேலு: சுவாமி, தாங்கள் அங்கே அரசனைப் பாட வேண்டாம்; தாங்கள் இராமன்மேல் பாடுங்கள். எப்படியாவது தங்கள் கானம் அங்கே அரங்கேற வேண்டும். தங்களுக்குச் சாம்ராஜ்யத்தில் உயர்ந்த பதவி கிடைக்கும்.

தியாகராஜர் உடனே "பதவி நீ ஸத் பக்தி" "ராம பக்தி ஸாம்ராஜ்ய" மென்ற இரண்டு உருக்கமான வைராக்கிய கீதங்களைப் பாடினார்.

தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வெகு தூரத்திலிருந்தும் ராம பக்தர்கள் பலர் தியாகராஜரைத் தரிசிக்க வந்தனர். அவர்களை அவர் நன்கு வரவேற்று இசையின்பம் பருகுவார். மலையாள நாட்டிலிருந்து கோவிந்த மாரார் என்னும் மகாவித்துவான் ஒரு சமயம் அவரைத் தேடி வந்தார். மாரார் ஆறு காலங்களிலும் பாடுவதில் நிபுணர். "ஷட்கால கோவிந்தர்" என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். அவர் வந்த தருணத்தில் தியாகராஜர் நிஷ்டையில் இருந்தார். இடையில் குறுக்கிட்டு மாராரின் வருகையை அறிவிக்கச் சீடர்கள் அஞ்சினர். சற்று நேரத்தில் நிஷ்டை கலைந்த தியாகராஜர் மாரார் காத்திருப்பதை அறிந்தார். ராம பக்தர் ஒருவரைக் காக்க வைத்ததற்காகச் சீடர்களை வெகுண்டார். வந்த அதிதியிடம் மன்னிப்புக் கேட்டார். ராம சன்னிதியில் தான் பாடவேண்டும் என்ற விருப்பத்தை மாரார் அறிவித்தார். அன்று ஏகாதசி. வழக்கம் போல பஜனை முடிந்தது. மாரார் பாடத் தொடங்கினார். அவரது தம்புரா மிகப் பெரியது; தந்திகள் கனமானவை. அவற்றினின்று "கும்" மென்றெழுந்த ஒலி, சேர்ந்திசைக்கும் பல வாத்தியங்களின் நாத வெள்ளத்தையும் மறைக்கும் வன்மை பெற்றது. அத்தகைய தம்புராவை மீட்டிக்கொண்டு பாடிய மாராரின் குரலின்நிறைவும் இனிமையும் தானென்ன! நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீ ஆகிய கனராக பஞ்சகத்தில் விஸ்தாரமாக ஆலாபனை, தானம் முதலியவை நடந்தபின் தியாகராஜருடைய வேண்டுகோளின்படி நீலாம்பரி ஆலாபனை தொடங்கி, இரவு 11-மணிமுதல் 2-மணிவரை நீடித்தது. தியாகராஜர் தேர்ந்

தெடுத்த ஒரு பல்லவியையும் மாரார் காலை 6-மணி வரை ஷட் காலங்களில் அனாயாஸமாகப் பாடினார். இந்தப் பக்தருடைய கானத்தில் தியாகராஜர் பரவசமானார். லயத்தின் பெருமையை வியந்து, 'ஷோடச காலமும் இவருக்கு எளிதே' என்று கூறிப் பாராட்டினார். அக்கால வழக்கத்தை யொட்டி அவர் தம்புரா வின் சிரத்தில் ஒரு பட்டு நூலைச்சாற்றி அவரிடம் தமக்குள்ள பெருமதிப்பை வெளியிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மாராரின் கோரிக்கையை முன்னிட்டு ஸ்வாமிகள் பாட ஆரம் பித்து "எந்த ரோமஹானுபாவுலு" என்ற ஸ்ரீராக க்ருதியைக் கவனம் செய்தார். இச் சம்பவம் நடந்தது 1838-ல்.

மாயவரம், ஆனைதாண்டவபுரம், சிதம்பரம் முதலிய ஸ்தலங்களில் வசித்துச் சிவபக்திச் செல்வராய் விளங்கி, நந்தனார் சரித்திரத்தை இயற்றிப் புகழ் படைத்த கோபால க்ருஷ்ண பாரதியார் ஸ்வாமிகளைத் தரிசிக்க ஆவல் கொண்டு திருவை யாற்றை யடைந்தார். தன்னைத் தெரிவித்துக் கொள்ளாமல் ஸ்வாமிகளின் பஜனையைக் கேட்டு அனுபவித்துக் கொண்டிருந் தார். தியாகராஜர் புதிதாக வந்தவரை உற்று நோக்கி, "எந்த ஊர்?" என்று கேட்டார். "அடியானுக்கு மாயூரம்," என்ற பதில் கணீரென்று வந்தது. தியாகராஜர், "அப்படியா? அங்கே கோபாலக்ருஷ்ண பாரதியார் என்ற சிவநேசர் இருக் கிறாராமே. அவர் ஸௌக்கியமா?" என்று விசாரித்தார். "அடியவன் தான்," என்ற மொழியைச் செவியுற்றதும் தியாக ராஜர் அளவற்ற சந்தோஷ மடைந்தார். சற்று நேரம் இரு வரும் அளவளாவிய பின்னர், "ஆபோகியில் க்ருதி அமைத்த துண்டோ?" என்று தியாகராஜர் பாரதியாரைக் கேட்டார். அவர் சற்று நேரம் மௌனமாயிருந்தார். பின்னர் சம்பாஷணை வேறு பாதையில் சென்றது. அன்றிரவு பாரதியார் பஞ்ச நதீசு வரர் ஆலயத்திற்குச் சென்று தரிசனம் செய்து மீண்டும் ஸ்வாமிகள் இல்லத்தில் தங்கினார். மறு நாட் காலையில் "சபா பதிக்கு" என்ற ஆபோகி ராகக்ருதியை ஸ்வாமிகளிடம் பாடிக் காட்டினார். அதைச் சிரத்தையுடன் அவர் கேட்டு மகிழ்ந்து, "நேற்றிரவு நான் பிரஸ்தாபித்த பொழுது யாதும் சொல்ல வில்லையே," என்று வினவினார். பாரதியார், "தங்கள் அனுக் கிரஹத்தினால் ஈசன் ஸன்னிதியில் என் கற்பனை உருவெடுத்து இப்பாமாலை மலர்ந்தது," என்று பணிவுடன் மொழிந்து, தியாக ராஜரின் பழுத்த வைராக்கியம், மனத்தாழ்மை, இறைவனிடம் ஊறிய பக்தி, முதலியவற்றைக் கருதிக் கசிந்து விடை பெற்றார்.

காமாட்சியம்மனிடம் இடையறாத அன்பு பூண்டு, மனங் கவரும் இசை மணிகளை அன்னைக்குச் சூட்டிச் சங்கீத மும் மூர்த்திகளில் ஒருவராகப் புகழ் பெற்ற சியாமா சாஸ்திரிகள் அடிக்கடி தியாகராஜரிடம் தமது கிருதிகளைப் பாடிக் காட்டுவ துண்டு. அவருடைய தவப் புதல்வரான காயக சிரேஷ்டர் ஸுப்பராய சாஸ்திரி தியாகராஜரிடம் சில காலம் இசை பயின்று வந்தார்.

தந்தை இராம பிரம்மத்தின் நண்பர் உபநிஷத் பிரஹ்ம ஸ்வாமிகள், காஞ்சீபுரம் மடாதிபதியா யிருந்தார். அவர் தியாகராஜரின் அருளிசையைக் கேட்க விரும்பித் தியாகரைக் காஞ்சீபுரத்திற்கு அழைத்தார். துறவிகளை நன்கு மதிக்கும்

தியாகர் உடனே க்ஷேத்திர யாத்திரைக்குப் புறப்பட்டார். அந்தக் காலத்தில் ரயில் இல்லையாதலால் ஒரு பல்லக்கு ஏற்பாடு செய்து, சீடர்கள் குருநாதரைச் சுமந்து சென்றனர். வழியிலுள்ள திருத்தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு சங்கீத ராஜர் வாலாஜாபேட்டைக்கு எழுந்தருளினர். அதுவே தமது அருமைச்சீடர் வேங்கடரமண பாகவதர் ஜவுளி வியாபாரம் நடத்திய ஊர். இவர் ஐயம்பேட்டையிற் பிறந்து, சங்கீதத்தில் ஆர்வங் கொண்டு, குருநாதரை அடுத்து வணக்கமுடன் கைங்கரியம் செய்து, நாதவித்தையைப் பூரணமாக அப்யசித்துப் பிறகு வியாபார நிமித்தம் தங்கிய வாலாஜாப்பேட்டையில் பெரிய பஜனைமடம் கட்டி, உருக்கமாகத் தியாககீர்த்தனங்களைப் பாடி ராமபஜனை செய்தார். இவர் குலத்தினர் வழி வழியாக ஸ்ரீ ராமபஜனையே காலக்ஷேபமா யிருக்கிறார்கள். இந்தப் பக்தர் அமைத்த பஜனைமடத்தில் தங்கி, தியாகராஜர் பல கீர்த்தனங்களைப் பாடினர். பிறகு திருப்பதியை நோக்கினர்.

பக்தர் கீழ்த்திருப்பதியைச் சேவித்து ஸ்ரீ ராமநாம லஹரியில் மூழ்கி மெய்ம்மறந்து, மலையேறி ஸ்ரீநிவாசப் பெருமாள் சேவைக்கு ஆவலாகச் சென்றார். பூஜை முடிந்த சமயமானதால் திரைபோட்டிருந்தது. பட்டரைச் சுவாமிதரிசனம் செய்ய வேண்டுமென்று கேட்டார் பரம பாகவதர். "இன்னும் ஒருமணி நேரங்கழித்தே தரிசிக்கலாம். இப்போது திரையை விலக்க முடியாது" என்று கண்டிப்பான பதில் வந்தது. மனிதரிடம் முறையிட்டுப் பயனில்லை. தியாகராஜர் "திருப்பதி வேங்கடரமணா, திரையை-பொறாமைத் திரையை, மனத்திலிருந்து விலக்க லாகாதா? மாயத்திரை விலகி உன் சுடர்வடிவைக் காணலாகாதா? நல்ல பசியுடன் உண்ணப் போகும்போது சோற்றில் ஈ விழுந்தாற்போல் இருக்கிறதே, இந்த மத்ஸரமான திரை; அதை விலக்கியருள்" என்று கௌளிபந்துவில் பாடவே, அதிசயமாகத் திரை நீக்கப்பட்டது! ஸ்ரீநிவாசப்பெருமாளை பக்தர் கண்குளிரச் சேவித்து, "வேங்கடேசனே, உன்னைச் சேவிக்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். ஸ்ரீ நாயகா-பரமானந்தா, யோகி ஹ்ருதயா, நான் முன்னே என்ன நோன்பு நோற்றேனோ! உன் தரிசனம் கிடைத்தது. உனது நாமகான சுகமும் கிடைத்தது!" என்று மத்தியமாவதியிற் பாடினர். அதைக்கேட்ட கோயிலதிகாரிகளும் மற்றோரும் தியாகராஜரின் பக்தியையும் வாக்கையும் இசையையும் வியந்து போற்றினர்கள். கோயில் மரியாதைகளுடன் தியாகராஜர் பெருமாள் சேவைசெய்து திரும்பினர்.

வழியில் புத்தூரில் ஒரு பெண் அழுங் குரல் கேட்டது. தியாகராஜர் செய்தியை விசாரித்தறிந்தார். சேஷையர் என்னும் ஒரு பிராமணர் மனைவியுடன் இரவில் அந்த ஊருக்கு வந்து தங்க இடமில்லாமல், கோயிற் சுவரிலேறிக் குதித்துக் கதவைத் திறந்தாவது உள்ளே தங்கலாம் என்று முயன்றார். இருட்டில் கீழிருப்பது தெரியாது ஓர் ஆழக்கிணற்றில் தொபுக்கென்று விழுந்தார். நாயகன் திரும்பி வராததைக்கண்டு மனைவி அலறினாள். காலையில் கிணற்றிலிருந்து பிணத்தை வெளியேற்றக் கண்டதும் மனைவி மார்பில் அடித்துக்கொண்டு விம்மி யழுதாள். தியாகராஜர் பெண்ணைச் சமாதானப்படுத்தி, தஞ்சாவூர் இராம

ராவை "லோகாவன சதுர பாஹிமாம்" என்ற பேகடகீர்த்தனமும் தில்லைஸ்தானம் இராமையங்காரை ஸஹானவில் "ஏமான திச்சேத" என்னும் பாட்டும், வேங்கடரமண பாகவதரை பிலஹரியில் "நாஜீவாதார" என்ற அரிய கீர்த்தனமும் பாடச் செய்தார். பின்னர் இறந்த ஆளின் மேல் மெல்லத் தடவிக்கொடுத்து, தாரக மந்திரம் சொல்லி முகத்தில் நீர் தெளித்தார். உடல் ஹா! என்று உயிர்த்தது, கண் திறந்தது! சேஷையர் எழுந்து நின்று சுவாமிகளை நமஸ்கரித்தார். மனைவி, 'சுவாமிகளால் கணவனுயிரும் என்னுயிரும் பிழைத்தன' என்று வணங்கி நன்றி கூறினாள்.

தியாகராஜர் பிறகு காஞ்சீபுரம் சென்று, ஸ்ரீ உபநிஷத் சுவாமிகளைப் பார்த்து ஆசிபெற்றார். காஞ்சி வரதராஜப்பெருமாளை உருக்கமாகப் பாடினார். ஏகாம்பரேசரையும் காமாக்ஷியம்மையும் வணங்கிப்பாடி, அங்கிருந்து வாலாஜாப்பேட்டைக்கு வந்தார். வேங்கடரமண பாகவதர் அமோகமாகப் பஜனை ஊர்வலம் நடத்தினர். மைசூர் வித்வான் சதாசிவராயர், தியாகராஜ சுவாமிகள் மேல் தோடியில் ஒரு கீர்த்தனம் பாடினர். பன்னிரண்டுநாள் வாலாஜாப்பேட்டையில் தங்கி, தியாகராஜர் புறப்பட்டார். வீணை குப்பையர் சென்னைக்கு வரவேண்டுமென்று அழைக்கவே, தியாகராஜர் சம்மதித்தார்.

கோவூர் சுந்தரேச முதலியார் தியாகராஜரைச் சிறப்பாக வரவேற்றார். இவர் தமிழ்ப் புலவர், சிவபக்தர், இசைமணி, ரசிகமணி, பெரியவர்களிடம் பக்தியுள்ளவர். இவர் வேண்டுகோளின்படி தியாகராஜர் சிலநாட்கள் அந்த ஊரில் தங்கி அவ்வூர் ஆலயத்தில் விளங்கும் சுந்தரேசர்மேல் "சம்போ மஹாதேவ" (பந்துவராளி), "நம்மி வச்சின" (கல்யாணி), கோரி ஸேவிம்பராரே (காகரப்பிரியா), "ஈவஸுத நீவண்டி தைவமு" (ஸஹானு) ஆகிய கீர்த்தனங்களைப் பாடினர். தியாகராஜருக்கு ராஜமரியாதைகளுடன் சிறப்புச் செய்ய வேண்டினர் முதலியார். தியாகராஜர் "நான் புவியரசனல்லேன்; நான் பாதசாரி, பக்தன், பிச்சையெடுத்துண்பவன்; எனக்கேன் தடபுடல் மரியாதைகள்? எல்லாம் இறைவனுக்கே செய்யும்" என்றார். முதலியார் திவ்யநாமபஜனை செய்துவந்தார். ஆனல் சமீபத்தில் தீப்பிடித்து அவருடைய பொருள் நஷ்டமானது. அதைக்குறித்து அவர் தியாகராஜரிடம் ஒரு பாடல் சொன்னர்:

"பாரோர் பலரைச் சபைகூட்டி, நாளும் பஜனை செய்தும்,
பேராகிய பிள்ளையார் பிடிக்கக் குரங்கா னதுபோல்,
சீரார் இராம! செயல்வேறுபட்ட இத்தீங்கினை நான்
யாரோடு சோல்வேன்? கோபால நீயருள் வாய் சிறிதே!"

தியாகராஜருக்குத் தமிழ் நன்ருக எழுதப்படிக்க வரும். வீட்டு மொழி தெலுங்காதலால் அவர் தெலுங்கிலேயே பாடினர். முதலியார் பாட்டை உடனே ஒருகீர்த்தனமாகப்புனைந்து தியாகராஜர் "எவரிதோ நே தேல்புது" (யாரோடு சொல்வேன்) என்று மானவதி இராகத்திற் பாடினர். முதலியார் மிக்க மகிழ்ந்து தியாகையருக்கு ஆயிரம் பொன்னளித்தார். ஐயர் தொடமறுத்தார். முதலியார் ஒரு பல்லக்குத் தயாரித்து, அதில் ஆயிரம் பொன்னை மெல்ல மறைத்து வைத்து, இரண்டு சீடர்களுக்கு மட்டுமே அதைத் தெரிவித்தார்.

காலை மூன்று மணிக்குத் தியாகராஜர் பல்லக்கில் திருவொற்றியூருக்குப் பயணமானார். மாணவர் சிவிகையைச் சுமந்து சென்றனர். ஒரு காட்டு வழியே சென்றபோது, கவண்கற்கள் பட் பட்டென்று வந்து விழுந்தன. "கள்ளர், கள்ளர்" என்று சீடர் கத்தினர். சுவாமிகள் "ராமா, முன்னும் பின்னும் வந்து எம்மைக் காப்பாற்று" என்று பாடிக் கொண்டே இறங்கி, "கள்வருக்குப் பயப் படுவதேன்? நம்மிடம் என்ன இருக்கிறது? மடியிலே கனமிருந்தால் அல்லவோ வழியிலே பயம்?" என்றார். குப்பையர் "சுவாமி, கோவூர் முதலியார் தந்த ஆயிரம் பொன் பல்லக்கில் உள்ளது" என்றதுமே தியாகராஜர் சட்டென்று பணத்தை எடுத்து, "இந்தாருங்கள், திருடரிடம் தாருங்கள்" என்று வீசினார். தஞ்சாவூர் இராமராவ், "சுவாமி, முதலியார் அன்புடன் தந்த பணம்" என்றார். தியாகர், "இந்தப் பணத்தாலே செருக்கும் ஆபத்தும் விளையும். எனக்கெதற்கு இது? இராமார்ப்பணமான பக்தர்கள் இதில் ஆசைவைக்க மாட்டார்களே! திருடர்களுக்குத் தாருங்கள் இதை" என்று கண்டிப்பாகச் சொன்னார். இராமராவ் "சுவாமி, இது தங்களுக்காகத் தந்ததன்று. ஸ்ரீராமநவமி, கிருஷ்ண ஜயந்தி உற்சவங்கள் நடத்தவே முதலியார் தந்தார். இது இராமபிரான் காணிக்கை. தாங்கள் வைத்திருக்க வேண்டும்," என்று சமாதானம் சொன்னார். "அப்படியானால் இந்தப் பணத்தை அவனே காத்துக் கொள்ளட்டும்; இராமா, நீயே முன்பின் துணையாக வந்து (முந்து வெனுக) விருப்பத்தைச் செய்" என்று மேலே பயணந் தொடர்ந்தார் பக்தர். பிறகு, கல் விழவில்லை; விடிந்ததும் நாகலாபுரம் திருடர்கள் ஓடிவந்து தியாகராஜர் காலில் விழுந்தனர். சுவாமிகள், ":இதோ பணம், எடுத்துச் செல்லுங்கள்" என்று மறுபடியும் பணமூட்டையைக் காட்டினார். திருடரோ, "சுவாமி, நாங்கள் பணத்திற்காகவே கல் வீசிக் கொள்ளையடிக்க வந்தோம். ஆனால் தங்கள் பல்லக்கின் முன்பின் இரண்டு சுந்தர வீரர்கள் காவல் காத்து எங்கள்மேல் கல்வீசினர். அவர்களை மீறிக் கிட்ட வரமுடியாமல் உயிர் பிழைத்துப் பின் சென்றோம். விடிந்ததுமே அவர்கள் மறைந்தனர். அந்த மகான்களை யாரென்று அறியவந்தோம். மறுபடியும் அவர்களைக் காணவேண்டும்!" என்றனர். தியாகராஜர், "எந்தபாக்யமு மாபாலகல்கிதிவி" என்ற சாரங்காராகக் கீர்த்தனம் பாடி, "அன்பர்காள், நீங்கள் எவ்வளவு புண்ணியம் செய்தீர்கள்; அந்த இருவர், இராமலட்சுமணர்களே!" என்று இன்பக் கண்ணீர் சொரிந்தார். பக்தர்களைக் காக்கும் பகவானின் கருணையை வியந்தார். திருடர்களுக்கு ஸ்ரீராம மந்திரம் உபதேசித்தார். திருடர்கள் தியாகராஜரைக் குருவாக வணங்கி இராமநாம கோஷத்துடன் சிவிகையை வழி நடத்திச் சென்றனர். சுவாமிகள் முதலியார் பணத்தை வட்டிக்குக் கொடுத்து அதிலிருந்து ஸ்ரீராம நவமி, கிருஷ்ண ஜயந்தி முதலிய உற்சவங்களை நடத்தினார்.

வீணை குப்பையர் தியாக சிஷ்யர்களில் தலைசிறந்தவர். அவர் பரம்பரை வித்துவான். அவர் தகப்பனார் சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் பெரிய பாடகர், வைணிகர். 'சாம்புடு வாயிஞ்சி சாம்புடே வினவலே' (சாம்பசிவர் வீணை வாசித்து, சிவசாம்

பனே கேட்க வேண்டும்) என்றொரு பழமொழியுண்டு. குப்பையர் வடமர், சாமவேதி, பரத்வாஜகோத்திரர், பெரிய இசைப் புலவர். தியாகராஜருடன் இருந்து கவனத்திலும் புகழ் பெற்றார். அவரை, 'திருவொற்றியூர் குப்பையர், வீணை குப்பையர் பாடல் குப்பையர், கானச் சக்கரவர்த்தி' என்றழைப்பர். அவர் மகன் தியாகையரும் சிறந்த இசைப்புலவர். சங்கீத ரத்னவளியுடன் தந்தையின் கிருதிகளையும் அவர் வெளியிட்டார். 'பல்லவி ஸ்வரகல்பவல்லி' என்ற நூலில் குப்பையரின் வர்ணங்களையும் தில்லானுக்களையும் கீர்த்தனங்களையும் வெளியிட்டார். 'வயலின்' பொன்னுசாமி, பல்லவி சீதாராமையர், கொத்தவாசல் வெங்கடராமையர் போன்ற பெரும்புலவர் குப்பையரின் மாணவர். குப்பையர் வேணுகோபால பக்தர். தமது கிருதிகளில் 'கோபால தாஸ' என்ற முத்திரை வைத்தார். இவரிடம் தியாகராஜருக்குத் தனியன்பு உண்டு.

வீணை குப்பையர் அழைப்பிற் கிணங்கி, தியாகராஜர் திருவொற்றியூர் சென்றார். அங்கே தியாகராஜ ஸ்வாமியையும் திருபுராம்பிகையையும் பாடிப் பணிந்தார். "தாரிணி தெலுசுகொண்டி'', "கன்னதல்லி'', "சுந்தரி நின்னு வர்ணிம்ப'' போன்ற கீர்த்தனங்கள் பிரசித்தமானவை. பிறகு, குப்பையர் தியாகராஜரைச் சென்னையில் தம் வீட்டிற்கு அழைத்து வந்து உபசரித்தார். அங்கே தியாகையர் பஜனை நடத்திக் கோபாலகிருஷ்ணனைப் பாடினார். நான்கு கீர்த்தனங்கள் பாடினார். பிறகு குப்பையருக்கு வீணை யளித்த கோவூர் சுந்தரேச முதலியார் தியாகையரை, பந்தர் தெரு, நான்காம் எண்ணுள்ள தமது வீட்டில் வரவேற்றுச் சிறப்பாக உபசரித்தார். இங்கிருந்து தியாகராஜர் பஜனை நடத்தி, ஏழு நாட்கள் தேவகாந்தாரி ராகத்தில் பல கீர்த்தனங்கள் பாடி, பக்த கோடிகளை மகிழ்வித்தார். குப்பையர் முயற்சியால் சென்னையில் தியாக கிருதிகள் பரவின. முத்தியால்பேட்டை இராமசாமித் தெருவில் வீடு வாங்கிக் கொண்டு, குப்பையர் சென்னையில் சங்கீத சேவை செய்து வந்தார்.

தியாகையர் க்ஷேத்ர தரிசனம் செய்துகொண்டே, திருவிடைமருதூருக்குவந்து, மஹாலிங்க ஸ்வாமியைப் பாடி வணங்கி, கோவிந்தபுரம் சென்று அங்கே போதேந்திர ஸ்வாமி மடத்தில் தங்கி, பஜனை செய்தார். சதாசிவ ப்ரம்மேந்திரரும் ஐயாவாளும் தோன்றிய திருவிசைநல்லூருக்குச் சென்றார். அங்கிருந்து நாகபட்டணம் சென்று நீலாயதாட்சியைப் பாடினார். திருச்சினாப்பள்ளியிலிருந்து ஸ்ரீரங்கம் சென்று அரங்கநாதரை, 'ஓ, ரங்கசாயி' என்ற காம்போதி கிருதியால் துதித்தார். பிறகு புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் கண்டு, இராமேசுவரம், தனுஷ்கோடி முதலிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தார். 'கோடி நதுலு' என்ற கீர்த்தனம் தனுஷ்கோடியில் பாடப் பெற்றது. அங்கேயிருந்து தியாகராஜர் மதுரைக்கு வந்து மீனம்பிகையை இசை பாடி வணங்கினார். 'மனஸானில்ப' என்ற ஆபோகிக் கீர்த்தனம் மதுரையில் எழுந்தது.

இவ்வாறு க்ஷேத்ராடனம் செய்து, தியாகராஜர் திருவையாறு வந்து சேர்ந்தார். முன்னே திருவையாறு வந்த பிறகு

ஸ்ரீரங்கம், இராமேசுவரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றதாகவும் சொல்வார்கள். எப்படியோ மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாகச் சேவித்தார் தியாகராஜர். அத்துடன் காலநிலையையும் உலகியல்புகளையும் நன்றாகக் கண்டுகொண்டார். உறவினர், நமது தியாகராஜர் பல இடங்களைச் சுற்றிப் பாட்டுக்கச்சேரி செய்து, திரளான பணம் கொண்டுவந்திருக்கிறார் என்று ஊகித்தனர். எல்லோரும், 'அப்பா, என்ன செல்வம் கொண்டுவந்தாய்?' என்று ஆவலாகக் கேட்டனர். தியாகராஜர், 'பெரிய செல்வம் கொண்டு வந்திருக்கிறேன்! இதோ கிடைத்தற்கரிய செல்வம்!' என்று திருப்பதிப் பிரசாதத்தையும், இன்னும் பல க்ஷேத்திரங்களின் பிரசாதத்தையும் உற்றார் உறவினருக்குத் தந்து, 'ஈசுவர கிருபையைவிட வேறென்ன செல்வம் வேண்டும்? அவன் பக்தவத்ஸலனாயிருக்கும் உண்மையை இந்த யாத்திரையில் கண்டுகொண்டேன். அது போதும். என் வாழ்வை இராமார்ப்பணம் செய்தேன். அவன் என்னை ரக்ஷிக்கிறான்' என்றார்.

தியாகராஜர் யாத்திரையிலிருந்து வந்ததுமுதல் தீவிரமான ஜபயோகமும், கானாஞ்ஜலியும் பஜனையும் செய்து வந்தார். தமது மாணவர்களையெல்லாம் பக்திகானப் பிரசாரர்களாகப் பயிற்றினார். அவருள் குப்பையர், வேங்கடரமணர், ராமராவ் முதலியோரை முன்பே சொன்னோம். தியாகையரின் உறவினரான மானம்பூச்சாவடி வேங்கடசுப்பையர், சிறந்த 'வயலின்' வித்வான். குப்பையருக் கடுத்தபடி இவரே தியாகராஜரிடம் பூரணமாக இசை பயின்றவர். இவர் தியாகராஜ கீர்த்தனங்களைச் சுத்தமாகக் கற்றுத் தேர்ந்து, பல பெரிய வித்வான்களை உண்டாக்கினார். மஹா வைத்திய நாத ஐயர், பெரிய வைத்தி, பட்டணம் சுப்பிரமணிய ஐயர், சரப சாஸ்திரிகள், பிடில் வேங்கட சுப்பையர், பஞ்சாபிகேசையர் முதலியோர் இவர் மாணவர்கள். இவர்கள் தியாக கிருதிகளை நாடெங்கும் பரப்பி, கந்தர்வஜோதிகளாக விளங்கினர்! வேங்கட சுப்பையரும், பட்டணம் சுப்பிரமணியரும் அரிய கீர்த்தனங்கள் பாடி, 'வேங்கடேசனுத' என்று முத்திரை யிட்டளித்தனர்.

ஸ்ரீ தியாகராஜர் இயற்றிய ஏராளமான கீர்த்தனங்களில் இப்போது சுமார் 505 உருப்படிகளே வழங்குகின்றன. 24000 கிருதிகள் பாடியதாகச் சொல்லுகிறார்கள். இவற்றைத் தவிர, திவ்யநாம கீர்த்தனங்கள், உத்ஸவ ஸம்ப்ரதாய கீர்த்தனங்கள், பிரஹலாத பக்த விஜயம், என்ற நாடகமும் நௌகா சரித்திரமும் தியாகராஜர் அருளியவை.

தியாகராஜருக்கு முன்பு சங்கீதம் கவிதையுடன் இணைந்திருந்தது. அருணாசலக் கவிராயரின் இராமாயணக் கீர்த்தனங்கள் புகழ்பெற்றபோது, தியாகையர் பதின்மூன்று வயது பையனாயிருந்தார். அக்கீர்த்தனங்களில் அமைந்த இராக தாளங்களே அக்காலத்தில் பொதுவாக வழங்கின. தீக்ஷிதர் (1775—1835) சமஸ்கிருதத்தில் அற்புதமான இசைநுணுக்கங்கள் அமையப் பாடினார். அவற்றை மிகவும் வருந்திக் கற்றே பாட முடியும். சாமா சாஸ்திரிகள் தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் அற்புதமான இசைச் செல்வத்தைத் தந்து, 1827-ஆம் ஆண்டில் காலஞ்சென்றார். அவர் ஸாஹித்யங்களும் வருந்திக்

கற்றே பாடத்தக்கன. இருவரும் அபூர்வ ராகங்களை உயிர் கொடுத்து வளர்த்தனர். தியாகராஜர், இந்த இருவருக்கும் பிறகு நீண்டகாலம் வாழ்ந்து, சங்கீதத்திற்குச் சிகர ஜோதியாக விளங்கினர். பாட்டுகளுக்கு ஸ்வரசஞ்சாரம் சங்கதி போடுதல் எல்லாம் அவர் ஏற்படுத்திய பத்ததியே. சதுர்தண்டிப் பிரகாசிகை கற்றுத்தான் அவர் இராகதாள நுட்பத்தைத் தெளிந்ததாகத் தெரிகிறது. எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களில் சமார் 47 இராகங்களையும் பல ஜன்ய ராகங்களையும் கையாண்டார். அவர் மொத்தம் சுமார் 200 இராகங்களில் பாடி யிருக்கிறார். தியாகராஜர் பிரஸித்த ராகங்களில் பலவகைப்பட்ட க்ருதிகளையும், எளிதில் கையாளக்கூடாத கடினமான ராகங்களிலும் புதிதாகத்தான் கற்பனை செய்த ராகங்களிலும் பல க்ருதிகளையும் இயற்றி யுள்ளார்.

கடைசியாக, க்ருதிகளைக் கவனம் செய்வதற்கான லக்ஷ்ய லக்ஷணங்கள் தியாகராஜரிடம் சரண் புகுந்தன என்றே கருத வேண்டும். பூஜா காலங்களிலும், பாராயணம், ஆலய வழிபாடு முதலிய சந்தர்ப்பங்களிலும், அவருடைய கற்பனை வெள்ளம் பெருக்கெடுக்கும். உடனிருக்கும் சீடர்கள் அதைக் குறிப்பாலுணர்ந்து, எழுத்தாணியும் ஓலையும், அல்லது மாம்பலகையும் மாக்கல் துண்டும் எடுத்து, அவரவர்கள் தேர்ச்சிக் கெட்டிய வரை குறித்துக்கொள்ளுவதில் கண்ணும் கருத்துமா யிருப்பர். பிறகு கூடிச் சிந்தனைசெய்து தெளிவுடன் பாடம் செய்து குருநாதரிடம் பாடிக் காட்டி, அவருடைய ஆமோதிப்பைப் பெறுவார்கள். இப்படித் தாதுவும் மாதுவும் தனிமுயற்சி, க்லிஷ்ட கற்பனை சிறிதுமின்றி, அருள் வாக்காக அமைந்த விநோதமே தியாகராஜரின் பெருமை.

தியாகராஜ கீர்த்தனங்களில் தெலுங்கு, ஸமுஸ்கிருதம் கலந்து மணிப்பிரவாளமாக வரும். ஆந்திர பாகவதம், ராமதாஸரின் வாக் விசேஷங்கள், புரந்தரதாஸரின் ஸாஹித்யம் முதலியவை எளிதில் நினைவுக்கு வருமாறு அமைந்தது தியாகராஜரின் எழில் நிறைந்த அருள்வாக்கு. ஆயினும் அது இலக்கியமன்று; கவியின் கண்ணால் அதனை நோக்கி யாப்பணிவைத் தளக்கக்கூடாது. பல இடங்களில் வசனத்தையும் அவர் உயர்ந்த இசைத் திறமையுடன் கையாண்டிருக்கிறார். தியாகராஜர் வார்த்தை கடுமையன்று; அவர் நோக்கம் கவிதையன்று; இசை! இசையில் நரஸ்துதியும் ஆபாசமும் கலக்காமல், சும்மா சிற்றின்பங்களையே போட்டுப் புரட்டாமல், அவர் உள்ளார்ந்த இராமபக்தி பரவசத்தில் ஊறிய உணர்ச்சியையே இயல்பான சொல்லிசையால் விளக்கினர். அவர் தெலுங்கு, மிக எளிதாக மனதில் படுகிறது; சொல்லச் சொல்லச் சொல்லுக்குள் மறைந்த உணர்ச்சி வேகமும், உணர்ச்சிக்கேற்ற இசைப் பண்பும், தியாகையரிடம் காணலாம்.

தியாகராஜர் இறுதிநாட்களை முற்றிலும் ஜபதபங்களிலேயே கழித்தார்; சீடர்கள் பாடுவதைச் செவிமடுத்தார்; ஸ்ரீமத் பாகவதத்தைத் தினமும் பாராயணம் பண்ணி வந்தார். அவரது தருமபத்தினியும் நாயகனைப்போலவே தெய்வ பக்தியில் ஈடுபட்டிருந்தாள். இருவரும் இல்லறந் தாண்டிய வானப்பிரஸ்தாசிரமத்தைக் கைக்கொண்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

1845-ஆம் ஆண்டு அந்த அம்மையார் தருமசம்வர்த்தினி தரிசனம் பெற்றார். ஒரு வாரத்திற்கெல்லாம் தெய்வீக நாயகனை வணங்கி, அவரது பாடல்களைச் செவிமடுத்து, அனாயாசமாக உடலை உதறி, நித்திய பத்தினியாக, மஞ்சளும் குங்குமமும் மலர் முகமுங் குலுங்கச் சென்றாள். உயிர்த்துணைவி பிரிவாற்றாது, "தொலிஜன்மமுன ஜேயுதுடுகு" (முற்பிறப்பில் எய்திய என் தீவினைப்பயனை அறிந்தேன்) என்ற பிலஹரி ராகக் கீர்த்தனம் பாடியருளினார். "கேப்பைப் பயிருடன் அருகும் தழைத்தது போல், பத்தினியாகிய கேப்பையுடன் அருகம்புல்லாகிய நானும் தழைத்தேன். சிருஷ்டித்த பரமாத்மா கேப்பையைக் கொய்து சென்றான். அருகம் புல்லான நான் தனியுற்றேன். இது என் முற்பிறப்பின் தீமைப்பயனே" என்று இக் கீர்த்தனத்தில் தியாகராஜர் முறையிடுகிறார்.

மனைவி காலஞ்சென்ற பிறகு, தியாகராஜர் மனம் வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டது. அவர் பற்றற்ற மனத் துறவியானார். பரவசமாகப் பஜனை செய்து, தம்மையும் அழைத்துக்கொள்ளும்படி இறைவனுக்கு முறையிட்டார். கனவில் இறைவன் வந்து அழைத்துவிட்டான். 'நான் இன்னும் பத்து மாதங்களில் உடலை உதறிச் சேல்வேன்; ஸ்ரீராமன் என்னை அழைத்துவிட்டான். என் அருமை யன்பர்காள், இன்னும் அறுபதாண்டுகள் கழித்தே எனது கீர்த்தனங்களுக்குச் சரியான பிரசாரமும், பெருமையும் ஏற்படும். நீங்கள் நான் குறித்தபடியே பாடி, சங்கீதத்தால் பக்தியைப் பரப்புங்கள். பாட்டின் நோக்கம் பக்தியே. கானத்தைக்கொண்டு ஞானத்தைப் பரப்புங்கள்.' பிறர் பொறாமையால் செய்யும் இடர்களைப் பாராட்டாதீர்கள்' என்றார். ஏகாதசி யன்று கிரிபை நெலகோன்ன என்ற சகானாராகக் கீர்த்தனம் பாடி, 'அன்பர்காள், இன்னும் நான்கு நாட்களில் ஒரு விசேடம் நடக்கும். இன்றே நான் சந்நியாசம் வாங்கிக்கொள்வேன்,' என்றார். உடனே ஆபத் சந்நியாசம் வாங்கிக்கொண்டு, தியாகராஜ ஸ்வாமிகளானார்! நான்காம் நாள், 'இன்றுதான் ஸ்ரீராமன் என்னை ஆட்கொள்ளும் ஸுதினம். எல்லாரும் ஆசாரமாகப் பஜனைக்கு வந்து பாடுங்கள்' என்றார். திரளான பக்தர்கள் வந்து கூடினார்கள். கலி 4948, பராபவ ஆண்டு, பகுள பஞ்சமி சுபதினம் பஜனை அமோகமாக நடக்கிறது. 'பக்தர்காள், பாடுங்கள் ராம நாமம்! ஸ்ரீராம், ஜயராம், ஜயராம்!' என்றார் மகான். 'பரிதாபமு—கனியாடின—பலுகுலு—மரசிதிவோ' என்ற மனோகரி ராகப் பாட்டை ரூபகதாளத்தில் கம்பீரமாகப் பாடினார்! 'ஸ்ரீராமா, என் பரிதாப வாழ்வைப் பார்த்திரங்கி என்னைக் கரையேற்றுவதாகச் சொன்னதை மறந்தாயா? இது சமயம் அப்பனே, என்னைக் கருணைவைத்து ஆட்கொள்!' என்றார். இராம நாமம் கடல்போல முழங்கியது. திடீரென்று சுவாமிகள் கபாலம் வெடித்தது! ஒரு ஜோதி கிளம்பியது. உடல் விழுந்தது! தியாகராஜன் என்னும் நாமத்துடன் நரரூபமாக வாழ்ந்த நாதஜோதி ஸ்ரீராமபாதம் சேர்ந்தது. 6—1—1847 தியாகராஜ தினம். பஞ்சமி திதியில் பிரிந்த ஆவி, திருத்தலங்களைச் சுற்றிக்கொண்டு ஏகாதசி யன்றுதான் முத்தியடையும் என்று சுவாமிகள் அருளியிருந்தார். ஆதலால் ஏகாதசியே தியாக சமாதி தினமாகக் கொண்டாடப்படுகிறது.

சங்கீத உலகமெல்லாம் இசையரசரான தியாகராஜ சுவாமிகளுக்கு முடிவணங்கியது. தியாகாமிர்த கானங்களைப் பாடிக் கொண்டே சிஷ்யர்கள் குருவின் திருமேனியை அலங்கரித்துக் காவேரிக்கரையில் சமாதி வைத்து, மேலே பிருந்தாவனமும் கட்டினர். சரியாக அறுபதாண்டுகள் கழித்து, 1907-ஆம் ஆண்டு முதல், தியாகராஜ கீர்த்தனங்களுக்குத் தமிழகத்தில் எராளமான இசையரங்குகள் எற்பட்டன. 1925-ம் ஆண்டு பங்களூர் நாகரத்தினம் அம்மாள் தியாக சமாதியில் அழகிய கோயில் கட்டி ஆராதனைக்காக ஸ்ரீராமுடு பாகவதரையும் நியமித்தார். இன்று தியாகரராஜ ஸ்வாமிகள் ஆராதனை தினம் ஒரு தூயகலைத் திருவிழாவாக விளங்குகிறது! நாளாக நாளாக அதன் சிறப்பு அதிகமாகி வருகிறது. தென்னிந்திய வித்துவான்களுடன் வட இந்தியரும் தியாகராஜரை வணக்கமுடன் மதித்து, அத் திருநாளுக்கு வருகிறார்கள். வானொலி வந்த பிறகு, நாடெல்லாம் தியாகராஜ கீர்த்தனங்கள் முழங்குகின்றன. கலையினால் உலகம் நம்மை இப்போது அறிகிறது.



நாதோபாஸகரும், சுருதிலய ஸோதரரும், கர்ணாடக
ஸங்கீதத்திற்குப் புதியதோர் அழகினைக் கற்பித்தவருமாகிய
மஹாவித்துவான்
கோனேரிராஜபுரம் வைத்தியநாதையர் அவர்கள்.

నాదోపాసకులు, శ్రుతిలయసహోదరులు, కర్ణాటక సంగీతమునకు
నూతన శోభను కల్పించినవారులైన మహావిద్వాన్, కోనేరిరాజపురం,
వైద్యనాథ అయ్యరుగారు (1878-1920).

ராகலக்ஷணம்

௧ 'க்ருதிமணிமாலை' முதலாவது இரண்டாவது பாகங்களில் உள்ள க்ருதிகளின் ராகங்கள் நூறு. இவற்றின் லக்ஷண அம்சங்கள் இங்கே சுருக்கமாகக் காணப்படும். விஸ்தாரமான ஆராய்ச்சியும், ஒய்வற்ற கட்சிச் சண்டைகளும் ஆங்காங்கு நடைபெறுவதை அனைவரும் அறிவர். கலையின் வைசால்யத்தை நோக்குங்கால் அபிப்பிராய பேதம் சகஜமென்பது விளங்கும். ஆயினும் க்ருதிகளின் ஸ்வரூபம் மறையாமல் காப்பதொன்றே இந்நூலின் லக்ஷ்யமாகையால், சர்ச்சையை விலக்கிப் பொதுவாக ஏற்கக்கூடிய முக்கிய அம்சங்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளன.

1. அடாண. தீர சங்கராபண ஜன்யம், ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபநிஸ்—ஸ்நிதாபம காரிஸ. பெரும்பாலும் லக்ஷ்யத்தையும் அனுபவத்தையும் ஆதாரமாகக் கொண்டே இந்த ராகத்தின் ஸ்வரூபத்தை நிர்ணயிக்க முடியும். காந்தாரம், தைவதம், நிஷாதம், இம்மூன்று ஸ்வரங்களும் உபயோகப் படுகிற வகை பல வாகும். மேலும் பதநிஸ, காமரிஸ, ஸ்நிதநிஸ், முதலிய ஸஞ்சாரிகளும் வழககத்திலிருப்பதினால் முடிவற்ற வாதத்திற்கு இடந்தரும் ராகம். தேசீய பாஷாங்கராகம். எப்பொழுதும் பாடக்கூடியது.

2. ஆஹிரி. ஹனுமதோடி ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். ஸரிஸ்மகம பதநிஸ்—ஸ்நிதாப மகரிஸ. முற்பகலில் பாடக்கூடாத ராகம் என்பதற்கு ருசிகரமான பல வரலாறுகளுண்டு. பிராசீன முறையில் மிகவும் போற்றப்பட்ட ரக்திராகங்களில் ஒன்று.

3. ஆரபி. தீர சங்கராபரணத்தின் ஜன்யம். ஸரிமபதஸ் ஸநிதபமகரிஸ. ஔடவ ஸம்பூர்ணம். கனராகங்களில் ஒன்று. ரிஷபம் ஜீவ ந்யாஸ ஸ்வரமாகிறது. உபாங்க ராகம். சாயாலக ராகங்களில் ஒன்று. தைவதம் சாயாஸ்வரம். எப்பொழுதும் கானம் செய்ய யோக்கியமானது.

4. ஆனந்த பைரவி. 20-ஆவது மேள கர்த்தாவாகிய நடபைரவி ஜன்யம். ஷாடவவக்ர ஸம்பூர்ணம். பாஷாங்க ரக்தி ராகம். சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், கைசிகி நிஷாதம் ஜீவ ஸ்வரங்கள். ஆயினும் ஸஞ்சார விசேஷங்களில் அந்தர காந்தாரமும் காகலி நிஷாதமும், அவரோஹண சஞ்சாரத்தில் பஞ்சஸ்ருதி தைவதமும் ஸம்ப்ரதாயமாகும். மந்த்ரஸ்தாயி நிஷாதத்திற்குக்கீழ் ஸஞ்சாரம் காணப்படவில்லை. பரம மங்களகரமான ராகமாக பூர்விகர்களால் கருதப்பட்டதும் எப்பொழுதும் கானம் செய்யக் கூடியதுமான ராகம்.

5. ஆபோகி. கரஹரப்ரியா ஜன்யம். ஔடவ ஔடவம். ரக்தி ராகம். பஞ்சம நிஷாத ஸ்வரங்கள் வர்ஜம். உபாங்க ராகம். ஸாதாரண காந்தார, சதுஸ்ருதி தைவத ஸ்வரங்கள் ஜீவ ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

6. ஈசமனோஹரி. ஹரிகாம்போஜி ஜன்யம். ஸம்பூர்ண வக்ர ஸம்பூர்ணம். ஸரிகமபதநிஸ் — ஸ்நிதபமரீமகரிஸ. உபாங்கம், எப்பொழுதும் பாடக்கூடியது.

7. உசேனி. நடபைரவி ஜன்யம். பாஷாங்க ரக்தி ராகம். இதன் ஸஞ்சாரக்ரமங்கள் பலவிதமாக வ்யவஹரிக்கப் படுகின்

றன. ஸம்பூர்ணமாகக்கொண்டு தீர்க்கமான மத்யம ஸ்வரமும் ஆரோஹணத்தில் கைசிகி நிஷாதமும் மிக்க ரஞ்சனையுடன் கூடிய ந்யாஸ ஸ்வரங்களாகின்றனவென்பது ஒரு மதம். ஸகரி கம பநிதநீஸ—ஸ்நிஸ் பதம பமகரிஸ' என்னும் வக்ர ஸம்பூர்ண ரீதியில் ஆரோஹணத்தில் சதுஸ்ருதி தைவதமும் அவரோஹணத் தில் சுத்த தைவதமும் ப்ரயோக விதி யென்பது பிறிதோர் மதம் முடிவற்ற விவாதத்திற்கு இடம் தருமென்ற அச்சத்தினாலும், இது போன்ற விஷயங்களில் அபிப்பிராய பேதமென்பது இல் லாம லொழியாதென்ற அனுபவத்தினாலும் இந்த ராகத்தின் விவரணம் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. எப்பொழுதும் பாடத்தகுந்தது.

8. யதுகுல காம்போஜி. ஹரி காம்போஜி ஜன்யம். ஸரிம பதஸ்—ஸ்நிதப மகரிஸ. ஔடவ ஸம்பூர்ண, பாஷாங்க, ரக்தி ராகம். சாயாலக ராகங்களில் ஒன்று. சுத்த மத்யம சதுர்ச்ருதி தைவத ஸ்வரங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடக்கூடியது.

9. கரஹரப்ரிய. நான்காவதான வேதசக்ரத்தின் நான்கா வது ராகமான 22 ஆவது மேளகர்த்தா. சதுர்ச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம். ஸர்வஸ்வரகமக வரிக ரக்தி ராகம். எப்பொழுதும் கானம் செய்யத் தகுந்தது. அநேக ஜன்ய ராகங் களுக்கு ஜனக ராகமாக விளங்குவது.

10. சர்னாடக பிஹாக். ஹரிகாம்போஜியில் பிறந்த "நே னெந்து வெதகுதுரா" என்ற க்ருதி பிற்காலத்தில் இந்தக் கர்னா டக பிஹாக் ராகத்திற் பிறந்ததென்றாயிற்று. ஆரோஹணம் ஸம் பூர்ணம். அவரோஹணம்: ஸ்நிதநி பதமகரிகஸ. உபாங்கம்.

11. கனகாங்கி. இந்து என்ற முதல் சக்ரத்தின் முதல் ராகம். சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்ச மம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம். எப்பொழுதும் பாடத்தகுந் தது. தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் கனகாம்பரி என வழங்குகிறது.

12. கலாவதி. 16-ஆவது கர்த்தாவான சக்ரவாகத்தின் கிளைராகம். நிஷாதவர்ஜம். ஔடவ வக்ர ஷாடவம். ஸரிமபத— ஸ்தபமக ஸரிஸ. உபாங்கம்.

13. கமலா மனோஹரி. 15-ஆவது மேளமாகிய மாயா மாளவ கௌள ராகத்தின் ஜன்யம். 33-வது ராகாங்கராகமான காங்கேய பூஷணி, 27-வது கர்த்தாவான ஸரஸாங்கி இவற்றின் ஜன்யமாகவும் சொல்லுவதுண்டு. ரிஷபவர்ஜம். ஔடவ ஷாட வம். ஸகமபநிஸ் — ஸ்நிதபமகஸ. உபாங்கம். எப்பொழுதும் பாடக்கூடியது.

14. கன்னட. தீர சங்கராபரண ஜன்யம். ஸமகம பத நிஸ். ஸ்தாபம கமரிஸ. வக்ர ஔடவ, வக்ர ஷாடவ, உபாங்க ரக்தி ராகம். எப்பொழுதும் பாடக்கூடியது.

15. கம்பீரவாணி. 30-வது மேளமான நாகானந்தினி யின் ஜன்யம். சதுர்ச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்ய மம், ஷட்ச்ருதி தைவதம், காகலி நிஷாதம். வக்ரஷாடவ வக்ர ஸம்பூர்ணம். ஸகபம பதநிஸ்—ஸ்தபமக ரிகரிஸ.

16. கண்ட. நடபைரவி ஜன்யம். ஸகரிகம பதபநிஸ் ஸ்நிதப மகரிஸ. கண்டாரவம் எனப்படுவது. உபாங்கம். தைவத க்ரஹம். ரக்தி ராகம். மாலையில் பாடக்கூடிய ராகம். ரஸமான வக்ர ப்ரயோகங்களுடன் ப்ரகாசிக்கும்.

குறிப்பு:—கண்ட, கன்னட, ஹுஸேனி முதலிய ராகங்கள் தற்காலம் மறைந்து வருகின்றன.

17. கல்யாண வஸந்தம். கீரவாணியில் ஜன்யம். ஸகமதநிஸ - ஸநிதபமகரிஸ. உபாங்கம். எப்பொழுதும் பாடக்கூடியது.

18. கானமூர்த்தி. 3-ஆவது மேளகர்த்தா ராகம். சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம். தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் கானஸாமவராளி என அழைக்கப்படுகிறது. எப்பொழுதும் பாடக்கூடியது. 72 மேளகர்த்தா முறைக்குமுன் வழங்கிவந்த 19 மேளங்களில் இது இரண்டாவது மேளமாகும். ஸாமவேதத்திலிருந்து ஜனித்த ராகங்களுள் ஒன்று.

19. காங்கேய பூஷணி. 33-ஆவது மேளகர்த்தா ராகம். ருதுசக்ரத்தின் 3-ஆவது ராகம். தீக்ஷிதர் ஸம்பிரதாயத்தில் கங்காதரங்கிணி என வழங்குகிறது. ஷட்ச்ருதி ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

20. காபி. கரஹப்ரிய ஜன்யம். ஔடவ வக்ர ஸம்பூர்ணம். ஆரோஹணத்தில் காந்தார தைவத ஸ்வரங்கள் வர்ஜம். ஸரிமபநிஸ் — ஸ்நிதபமகரிஸ தேசீயரக்தி ராகம். பாஷாங்கம். கானடாவைப்போன்று இந்த ராகமும் தற்காலம் த்வாதச ஸ்வரங்களுடனும் பற்பல ஸஞ்சாரங்களுடனும் விளங்குகிறது. எப்பொழுதும் கானம் செய்யத் தகுந்தது.

21. காம்போஜி. ஹரிகாம்போஜியில் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஆரோஹணத்தில் நிஷாதவர்ஜம். பாஷாங்கம். ஸர்வஸ்வர கமகவரிக ராகம். 'ஸநிபதஸ்' என்ற ஸஞ்சாரத்தில் காகலி நிஷாதப்ரயோகம் ஸம்ப்ரதாயம். சுத்த மத்யம கைசிகி நிஷாத ஸ்வரங்கள் ஜீவ ஸ்வரங்கள். ப்ரதி ஸ்வரமும் மிக்க ரஞ்சனையுடன் கூடிய ப்ரஸித்திபெற்ற ரக்திராகம். கானம் செய்வதற்கு காலவரையறை கிடையாது.

22. கானட. கரஹப்ரிய ஜன்யம். ஸரிகம பதநிஸ — ஸ்நிபம கமரிஸ என்பதே கர்நாடக ஸம்பிரதாயத்தைத் தழுவிய க்ரமம். ஆனால் தற்காலம் த்வாதச ஸ்வரங்களும் சேர்ந்து ஔத்தர ஸஞ்சாரங்களும் கூடி சிற்சில களைகளை மாத்திரம் ப்ரதானமாகக் கொண்டு இந்த ராகம் விளங்குகிறது. எப்பொழுதும் பாடத் தகுந்தது.

23. கிரணவளி. கீரவாணியில் ஜன்யம். ஸம்பூர்ண ஷாடவம். ஸரிகமபதநிஸ் — ஸ்தபமகரிஸ. அவரோஹணத்தில் நிஷாதம் வர்ஜம். எப்பொழுதும் பாடலாம்.

24. கீரவாணி. 21-ஆவது மேள ராகம். நான்காவது வேத சக்ரத்தின் மூன்றாவது ராகம். சதுர்ச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம்.

25. குந்தலவராளி. ஹரிகாம்போஜி ஜன்யம். வக்ர ஔடவ ஔடவ ராகம். ஸமபதநிதஸ் — ஸ்நிதபமஸ. உபாங்கம். எப்பொழுதும் பாடலாம்.

26. கேதாரகௌளை. ஹரிகாம்போஜி ஜன்யம். உபாங்கம். ஸரிமபநிஸ் — ஸ்நிதபமகரிஸ. 'ரீமகாம ரீகரிஸ' என்னும் பிரயோகம் ரஞ்சனையுள்ளது. ஔடவ ஷாடவ ராகம்.

27. கேதாரம். தீர சங்கராபரண ஜன்யம். ஔடவ ஷாடவ ராகம். ஸமகமபநிஸ் — ஸ்நிபமகரிஸ. நிஷாதமும் காந்தாரமும் ஜீவ ஸ்வரங்கள். த்விதீய கனபஞ்சக ராகங்களில் ஒன்று. எப்பொழுதும் பாடலாம்.

28. கேஸரி. 25-ஆவது மேளமாகிய மார ரஞ்சனியில் ஜன்யம். உபயவக்ர ஸம்பூர்ண ராகம். ஸரிகம பமதப நிதஸ் ஸ்தநித பமகரிஸ. உபாங்கம்.

29. கோகிலத்வனி. 28-வது மேளமாகிய ஹரிகாம்போஜியில் ஜன்யம். ஸரிகம தநிதஸ் ஸ்நிதநி பமகரிஸ. உபய வக்ர ஷாடவ ஸம்பூர்ணராகம். உபாங்க ராகம்.

30. கோலாஹலம். தீரசங்கராபரண ஜன்யம். ஸபம கம பதநிஸ்—ஸ்நிதப மகரிஸ. உபாங்கம்.

31. கௌளிபந்து. மாளவ கௌளையின் ஜன்யம். ஸரிம பநிஸ்—ஸ்நிதப மகரிஸ. மத்யம நிஷாதங்கள், உபாங்கம். எப்பொழுதும் பாடக்கூடியது.

32. சங்கராபரணம். 29-வது மேளராகம். ஐந்தாவதான பாண சக்ரத்தின் ஐந்தாவது ராகம். சதுர்ச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுர்ச்ருதி தைவதம் காகலி நிஷாதம். கடபயாதி ஸங்க்யைக்காக தீர என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்க்கப் பட்டுள்ளன.

3?. ஸஹான. 28-வது மேளத்தில் ஜன்யம், வக்ர ஸம்பூர்ணம், பாஷாங்கம். வக்ர ஸஞ்சாரங்கள் ராக ரஞ்ஜனையைக் கொடுக்கும். ஸாதாரண காந்தாரம் விசேஷமாக ப்ரயோகப்படுவதுபற்றி இதன் ஜனக ராகம் கரஹரப்ரிய என்பர் ஒரு சாரார். ஆரோஹணம் ஸரிகமபம தாநிஸ் அவரோஹணம் ஸ்நிதபம காம ரீகரிஸ. லக்ஷ்ய அனுபவ முறையில் நோக்குங்கால் ஸ்வரங்களின் தீர்க கதியிலிருந்து இந்த ராகம் ஹரிகாம்போஜியைத் தழுவியே விளங்குவது புலப்படும். எப்பொழுதும் பாடலாம்.

34. சாருகேசி. 26-வது மேள ராகம். ஐந்தாவது பாண சக்ரத்தின் இரண்டாவது ராகம். சதுர்ச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம்.

35 சாயா நாட. 34-வது மேளமான வாகதீச்வரி ஜன்யம். ஸரிகமபப பஸ் — ஸநித நிபமரிஸ. ஷட்ச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சதுர்சருதி தைவதம், கைசிகி நிஷாதம். உபாங்கம். எப்பொழுதும் பாடக்கூடியது.

36. சாயாதரங்கிணி. ஹரிகாம்போஜியில் ஜன்யம். ஸரிகம பதநிஸ் — ஸநிதநி பமகரிஸ. ஸம்பூர்ண வக்ர, ஸம்பூர்ண ராகம்.

37. சாமா. தீர சங்கராபரண ஜன்யம். ஸரிமபதஸ் — ஸதபமகரீஸ. ஔடவ ஷாடவ ராகம். ரிஷபம், மத்யமம், தைவதம் ஜீவ ஸ்வரங்கள்.

38. சுத்ததேசி. நடபைரவி ஜன்யம். ஸரிமபதநிஸ் — ஸ்நிதபமகரிஸ. உபாங்கம். எப்பொழுதும் பாடத்தகுந்தது.

39. சுத்தஸாவேரி. ஹரிகாம்போஜி ஜன்யம். உபாங்கம். ஔடவம். ஸரிமபதஸ் — ஸ்தபமரிஸ.

40. சுத்த ஸீமந்தினி. ஹனுமதோடி ஜன்யம். நிஷாத வர்ஜ உபாங்க ஷாடவம். ஸரிகமபதஸ் — ஸ்தபமகரிஸ.

41. சுத்த தன்யாசி. நடபைரவி ஜன்யம். ஔடவ உபாங்கம். ஸகமபநிஸ் — ஸ்நிபமகஸ. உதயரவி சந்த்ரிகை என்ற மற்றொரு பெயருண்டு.

42. ஜனரஞ்ஜனி. தீர சங்கராபரணத்தில் ஜன்யம். ஸரிகம பதபநிஸ — ஸதபம ரிகமரிஸ. உபய வக்ர, ஸம்பூர்ண ஷாடவம். உபாங்கம்.

43. ஜயமனோஹரி. கரஹரப்ரிய ஜன்யம். ஸரிகமதஸ் — ஸ்நிதமரிகரிஸ. உபாங்கம்.

44. ஜகன்மோகினி. மாளவகௌளை ஜன்யம். ஸகமப நிஸ் — ஸ்நிபமகரிஸ. ஔடவ ஷாடவம், உபாங்கம்.

45. தர்பார். கரஹரப்ரிய ஜன்யம். ஸரிமபதநிஸ் ஸ்நிதபம ரிககரிஸ. ஷாடவ வக்ர ஸம்பூர்ணம். காந்தார நிஷாதங்கள் ஜீவ ஸ்வரங்கள். தேசீயராகம், பாஷாங்கம், பெரும்பாலும் லக்ஷ்ய முறையே ஏற்பட்டுள்ளது. எப்பொழுதும் பாடத் தகுந்தது.

46. தேவகாந்தாரி. தீர சங்கராபரண ஜன்யம். பாஷாங்க தேசீயராகம். ஸரிகரிமபதநிஸ் — ஸ்நிதபமகரிஸ. ரிஷப தைவதங்கள் சாயா ஸ்வரங்கள். தநீதபா என்பது போன்ற ப்ரயோகங்களில் கைசிகி நிஷாதமும், தாரஸ்தாயியில் ஸரிகம என்ற பிரயோகமும் ஸம்பிரதாயம். காகலிநிஷாதம் தீர்க்கமாகத் தோன்றுவதில்லை. முற்பகல் ராகங்களில் மிகவும் ரஞ்சனையுள்ளதென்பது அனுபவ ஸித்தம்.

47. தேவக்ரிய. நடபைரவியின் ஜன்யமான இந்த ராகத்தின் க்ருதியின் மூலப்பாடம் மறைந்து, சுத்த தைவதமே காணப்படவில்லை. பஹனீயர்களிடம் பாடங்கேட்டு, ஸம்பிரதாயத்திற்கே ஒரு தீப ஸ்தம்பம்போன்று விளங்கிய ஸ்ரீமதி வீணை தனம்மாளின் பாடத்தை அனுசரித்து இந்த ராகம் கரஹரப்ரியாவின் கிளையாக, ஸரிகமநிபதநிஸ் — ஸ்நிதமகரிஸ என்ற கிரமமுள்ளது. அதிகாலை ராகம். தீக்ஷிதர் ஸம்பிரதாயத்தில் இந்தப் பெயருடன் விளங்குவது சுத்த ஸாவேரி.

48. தேவமனோஹரி. ஹரிகாம்போஜி ஜன்யம். ஸரிமபதநிஸ்—ஸநிதநிபமரிஸ. ஷாடவ, வக்ர ஷாடவ ராகம். உபாங்கம். எம்பொழுதும் பாடத் தகுந்தது.

49. தோடி. 8-ஆவது மேள ராகமாகும். இரண்டாவது நேத்ர சக்ரத்தின் இரண்டாவது ராகமாகும். சுத்த ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகிநிஷாதம். கடபயாதி ஸங்க்யைக்காக 'ஹனு' என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்க்கப்பட்டன. ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி ராகம். எப்பொழுதும் பாடத் தகுந்தது.

74. மானவதி. முதலாவதான இந்து சக்ரத்தின் ஐந்தாவது ராகம். சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுர்ச்ருதி தைவதம், காகலி நிஷாதம்.

75. மாளவஸ்ரீ. கரஹரப்ரிய ஜன்யம். ஸகமபநிஸ் — ஸ்நிதபமகஸ. உபாங்கம். இந்த ராகம் பழைய நூல்களில் கூறப்படும் லக்ஷணங்களின்படி பிரசாரத்திலில்லை. காலஞ் சென்ற மஹா வித்துவான் காஞ்சிபுரம் நாயனாபிள்ளை யவர்களுடைய பாடம் இந்த க்ருதி.

76. மாயாமாளவகௌளை. அக்னி சக்ரத்தின் மூன்றாவது ராகம். 15-ஆவது மேள கர்த்தா. ஸம்பூர்ண ஸம்பூர்ணம். சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம். பூர்வாசாரியர்கள் ஸகல சுபப்ரதமென்று கொண்டாடி ச்ருதிகளின் ஸங்க்யை அமைப்பினால் விசேஷமாக மதித்து வித்தியாரம்பத்திற்கு எடுத்துக்கொண்டார்கள். எண்ணிறந்த ஜன்ய ராகங்களுக்குத் தாய்போன்று விளங்கும் ராகம். பாடுவதற்குக் காலவரையறை இல்லாதது.

77. மாளவி. ஹரிகாம்போஜி ஜன்யம். ஸரிகமபநிபத நிஸ் — ஸ்நிதநீபமகமரிஸ. வக்ர ஸம்பூர்ணம். உபாங்கம். எப்பொழுதும் பாடத் தகுந்தது.

78. முகாரி. 20 ஆவது மேளமாகிய நடபைரவியில் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபநிதஸ் — ஸநிதபமகரிஸ. ஆரோஹணத்தில் காந்தாரமும், நிஷாதமும் வர்ஜமென்றிருந்தாலும் வக்ரமாக பிரயோகிக்கப்படுகின்றன. பாஷாங்க ரக்தி ராகம். ஜனக ராகத்தை அனுசரித்து ஆரோஹணத்திலும், அவரோஹணத்திலும் சில சஞ்சார விசேஷங்களில் சதுர்ச்ருதி தைவதம் உபயோகப்படுகின்றது.

79. ரத்னாங்கி. 72-ஆவது மேள கர்த்தாக்களில் முதலாவதான இந்து சக்ரத்தின் இரண்டாவது ராகம். சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம். வெங்கடமகி ஸம்பிரதாயத்தில் இதற்கு பேனத்யுதி என்று பெயர்.

80. ரஸாளி. 4-ஆவது கர்த்தாவான வனஸ்பதி ஜன்யம். ஸரிமபதநிஸ் — ஸ்தாபமரிஸ. காந்தார வர்ஜம். உபாங்கம். எப்பொழுதும் பாடக்கூடியது.

81. ரீதிகௌள- நடபைரவி ஜன்யம். வக்ர ஷாடவ வக்ர ஸம்பூர்ணம். ஸகரிகமநிதநிஸ் — ஸநிதமகமபமகரிஸ. பாஷாங்கம். கனராகம். மந்த்ர ஸ்தாயி நிஷாதம், காந்தார, மத்யம, நிஷாதங்கள், ஜீவ ந்யாஸ ஸ்வரங்கள். ஆரோஹணத்தில் கமநிநிஸ் என்ற ஒரு பிரயோகம் ரஞ்சனையுள்ளது. சுத்த தைவதம் அல்ப பிரயோகம். கரஹரப்ரியாவின் ஜன்யமாகவும் ஒரு மதம். தீக்ஷிதர் சம்பிரதாயத்தில் இது நாரீரிதிகௌள என்ற 22-ஆவது ராகங்க ராகமே. மாலை ராகம்.

82. ரேவகுப்தி. 15-ஆவது மேளமாகிய மாயாமாளவ கௌளையில் ஜன்யம். ஸரிகபதஸ் — ஸ்தபகரிஸ. ஔடவ ஔடவம். உபாங்கம். காலை ராகம்.

83. வகுளாபாணம். 14-ஆவது மேளகர்த்தா. அக்னி சக்ரத்தின் இரண்டாவது ராகம். சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

84. வனஸ்பதி. 72-ஆவது மேள கர்த்தாவில் முதலாவதான இந்த சக்ரத்தில் நான்காவது ராகம். சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுர்ச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

85. வஸந்த- 17-ஆவது கர்த்தாவான ஸூர்யகாந்த ஜன்யம். சுத்த தைவதத்துடன் 15-ஆவது மேளத்தின் ஜன்யமான லலித என்னும் ராகத்தையும் இதையும் பரிவர்த்தனையாக்கிக் குழப்புவது சாதாரணம். பஞ்சம வர்ஜம். ஸரிகமதநிஸ் — ஸ்நிதமகரிஸ. காலை ராகம்.

86. வஸந்த பைரவி. 14-வது மேளமான வகுளாபரண ஜன்யம். ஸரிகமதநிஸ் — ஸ்நிதமபமகரிஸ. உபாங்கம்.

87. வாகதீச்வரி. 34 - வது மேள ராகம். ருதுசக்ரத்தில் நான்காவது ராகம். ஷட்ச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுர்ச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

88. வீரவஸந்தம். 24-ஆவது மேளமான வருணப்ரியா ஜன்யம். சதுர்ச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், ஷட்ச்ருதி தைவதம், காகலி நிஷாதம். உபாங்கம். எப்பொழுதும் பாடத் தகுந்தது.

89. ஸாளக பைரவி. கரஹரப்ரிய ஜன்யம். ஸரிமபதஸ் — ஸ்நிதபமகரிஸ. உபாங்கம். இரவு இரண்டாம் ஜாமராகம்.

90. ஸாவேரி. மாயாமாளவகௌள ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபதஸ்—ஸ்நிதபமகரிஸ. அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம் சாயா ஸ்வரங்கள். காந்தார நிஷாதங்கள் ஜனக ராகத்திற் கேற்பட்டதில் சற்றுக் குறைந்தே ஸ்புரிப்பது அனுபவத்தில் காணலாம். ‘ஸநிஸநிதா ஸரிமகாரி’ என்ற ப்ரயோகங்களில் காகலி நிஷாதமும் அந்தர காந்தாரமும் பதநிபமகரிஸ என்னுமிடத்தில் கைசிகி நிஷாத, ஸாதாரண காந்தாரங்களும் காணலாம். ஆகவே இதை பாஷாங்கமாக வ்யவஹரிப்பர். ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி ராகம். பகல் இரண்டாம் ஜாமத்தில் பாடத் தகுந்தது.

91. ஸ்வரபூஷணி. கரஹரப்ரிய ஜன்யம். ஸகமபதஸ்—ஸ்நிதபமரிஸ. உபாங்கம்.

92. ஸிந்துராமக்ரிய. மாயா மாளவ கௌளை ஜன்யம். ஸகமபதபநிஸ் ஸ்நிபதபமகஸ. வக்ர ஷாடவ ராகம்.

93. ஸூரடி. 28-வது மேளத்தில் ஜன்யம் ஸரிமபநிஸ்—ஸ்நிதபமகபமரிஸ. ஔடவ வக்ர ஸம்பூர்ணம். ஆரோஹணத்தில் காந்தார தைவத ஸ்வரங்கள் வர்ஜம். ஆனாலும் பநித நிஸ் என்ற ப்ரயோகம் ஸாதாரணமாய் வழக்கம். பாஷாங்க தேசீய ராகம். ரிஷப, மத்யம, நிஷாதங்கள் தீர்க்கம் பெற்று, சாயா ஸ்வரங்களாக விளங்குகின்றன. பகல் இரண்டாம் ஜாமத்தில் பாடத் தகுந்தது.

94. ஸூர்ய காந்தம். 17 - ஆவது மேள கர்த்தா ராகமாகும். அக்னி சக்ரத்தில் ஐந்தாவது ராகம். சுத்த ரிஷபம்

அந்தர காந்தாரம், சுத்த மத்யம், பஞ்சமம், சதுர்ச்ருதி தைவதம், காகலி நிஷாதம்.

95. ஸௌராஷ்ட்ரம். மாளவகௌள ஜன்யம். ஸரிகம பமதநிஸ்—ஸ்நிதபமகரிஸ. சதுர்ச்ருதி, (பஞ்சச்ருதி) தைவதம், கைசிகி நிஷாதம் உபயோகப்படுத்தினால் இதைப் பாஷாங்க மாகக் கொள்ளுவதுடன் நிற்காமல், 16, 17, மேளங்களின் ஜன்யமாகவும் கருதுவதுண்டு. ஆனால் நியாஸ, அம்சஸ்வரங் களைக் கணக்கிட்டு 15-வது மேள ஜன்யமாகவே கொள்ளுவது பொருந்தும். ஸர்வஸ்வர, கமக, ரக்தி, பாஷாங்க, தேசீயராகம்.

96. ஹரிகாம்போஜி. 28-வது மேளராகம். ஐந்தாவதான பாண சக்ரத்தில் நான்காவது ராகம். சதுர்ச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுர்ச்ருதி தைவ தம், கைசிகி நிஷாதம். அநேக ஜன்ய ராகங்களுக்குத் தாயாக விளங்குகிறது. தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் ஹரிகேதார கௌளை என வழங்குவது 28-ஆவது கர்த்தாவாகும். ஜன்ய ராகமான கேதார கௌளைக்கு கடபயாதி ஸங்க்யைக்காக ஹரி என்ற இரண்டு எழுத்துக்களை சேர்த்து ஹரி கேதார கௌளை என வழங்கி வருகிறது.

97. ஹம்ஸத்வனி. 29-ஆவது மேளமாகிய தீர சங்கரா பரண ஜன்யம். ஔடவ ராகம். மத்யம தைவத ஸ்வரங்கள் வர்ஜம். உபாங்கம். காந்தார நிஷாதங்கள் ஜீவ ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடத்தகுந்தது. இந்தராகம் முத்துஸ்வாமி தீக்ஷி தரின் தகப்பனாரான ராமஸ்வாமி தீக்ஷிதர் கற்பனை செய்தது.

98. ஹிந்தோளம். நடபைரவி ஜன்யம். ஸ்கமதநிஸ்ஸ்நித மகஸ. தைவத நிஷாதங்கள் சாயா ஸ்வரங்கள். சதுர்ச்ருதி தைவதமே பிரயோகித்துப்பாடும் ஸம்பிரதாயமும் நீண்ட கால மாகவுள்ளது. தேசீய உபாங்க ராகம்.

99. ஹிந்தோள வஸந்த. நட பைரவி ஜன்யம். ஸகமபத நிதஸ் — ஸ்நிதபமதமகஸ. உபாங்கம். எப்பொழுதும் பாடக் கூடியது.

100. ஸ்ரீமணி. 2-வது மேளமான ரத்னாங்கி ஜன்யம். ஸரிகபதஸ் — ஸநிதபகரிஸ. ஔடவ, ஷாடவ, உபாங்கராகம்.

தியாகராஜரின் தொகுதி க்ருதிகள்

ப்ரத்தியேகமான விஷயங்களைக் குறித்து இயற்றப் பட்ட க்ருதித் தொடர்கள் பல உள. இவைகளில் ஐந்து, அல்லது ஒன்பது க்ருதிகள் உண்டு. இத்தகைய தொகுதிகளில் புகழ் பெற்றவை தியாகராஜஸ்வாமியின் கனராக பஞ்சரத்னமும், கோவூர் பஞ்சரத்னமும், முத்து ஸ்வாமி தீக்ஷிதரின் நவக்ரஹ, நவாவரண, பஞ்சலிங்கக்ருதிகள், சியாமா சாஸ்திரிகள் மதுரை மீனாக்ஷியம்மன்மீது இயற்றிய நவரத்னமாலிகை, வீணை குப்பையரின் காளஹஸ் தீச, வெங்கடேச பஞ்சரத்னங்கள், கார்வேட்நகர் கோவிந்தஸாமி அய்யாவின் பஞ்சரத்ன வர்ணங்கள், க்ஷேத்ரக்ஞரின் விஜயராகவ பஞ்ரத்ன பதங்கள் முதலியனவாம்.

இவற்றுள் தியாகராஜஸ்வாமியின் தொகுதிக்ருதிகள் சிகரம் போன்று விளங்குகின்றன என்பது மிகையாகாது. குறிப்பிட்ட சூழ் நிலையில் நேர்ந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதனால் இந்த உருப்படிகள் உணர்ச்சி ததும்பும் இயல் புள்ளன.

நாட்டை, கௌளராளி, ஆரபி, ஸ்ரீ, வராளி ஆகிய ஐந்து ராகங்களில் அமைந்துள்ள கனராக பஞ்சரத்னம் ஸாகித்திய லாவண்ணியம், பாவ புஷ்டி, கற்பனைத்திறன், லயச் சிறப்பு, நடை யழகு, எதுகை மோனைகளுடன் சிறந்து விளங்கும் சொற்றொடர்களின் மூலம் நெஞ்சை யள்ளும் கருத்து, முதலிய பல விசேஷ அம்சங்கள் உள்ளது. நீண்ட காலமாகத் திருவையாற்றில் நடந்து வரும் ஆண்டு விழாக்களில் ஆராதனைகள் இந்தத் தொகுதியுடன் ஆரம்பிப்பதே இதன் பெருமைக்குச் சான்றாகும். ஸ்வாமிகளின் ஜீவதசையின் மத்திய பாகத்தில் இது பிறந்தது. எளிய ஸாகித்தியப் புனைதலே இவருக்குச் சாத்திய மென்றும், இவர் ராக ஆலாபனை, தானம், பல்லவி, முதலிய உன்னதமான இசைப் பகுதிகளில் பரிமிதமான தேர்ச்சியே பெற்றவரெனவும் தவருகப் பலர் எண்ணினர்கள். மேலும் ஸ்வாமிகளின் மாணக்கர்களிற் சிலர் இசைப் பயிற்சிக்குப் பயன்படுவதான வகையில் தானவர்ணங்கள் இயற்றி அருளுமாறு இவரை வேண்டினர். இசையரசரும் கவியரசருமான ஸ்வாமிகள் அங்ஙனமே தானவர்ணத்தின் சுவையே மிகுந்த இந்த க்ருதித் தொகுதியை இயற்றலானர். லாகவமும் விஸ்தாரமும் தனதாகக் கொண்ட சதுஸ்ர ஜாதி அடதாளத்தில் இவ்வைந்து ரத்னங்களும் இழைக்கப்பட்டன. ராகரஸங்களில் பற்றுள்ளவர்களுக்கு, ஆனந்த பரவசம், உள் நோக்கம், கருணை, பிறருடைய சிறப்பை அறிவதன் மூலம் ஜனிக்கும் மனத்தாழ்மை, இறைவனின் பெருமை, அவனுடைய அனந்த கல்யாண குணங்களைப் பல வகையிலும் அறிந்து அனுபவிக்கும் பாக்கியம், முதலிய ஆழ்ந்த கருத்துக்கள் ராகஸஞ்சார விசேஷங்களின் மூலமும், பதச் சேர்க்கையின் மூலமும், சுருங்கச் சொல்லின், தாது மாதுவின் பரம ஐக்கியத்தின் மூலமே, மனதைக்கொள்ளை கொள்ளுவதனல், இந்த க்ருதிகள் இணையற்றவைகளாகத் தோன்றும்.

நாட்டை, ஆரபி, ஸ்ரீராக ரத்னங்களில் சரணங்கள் பல உள. அவை காலக் கிரமத்தில் ஸ்வாமிகளே இயற்றிச் சேர்த்

தவை. ஆரபி க்ருதியில் "ஸமயானிகி" என்று தொடங்கும் உபபல்லவி தானவர்ணத்தின் "எத்துக்கடை"யை நினைவூட்டுகிறது. கடைசிச் சரணம் 18வது நூற்றாண்டில் வழங்கிய தானவர்ணத்தின் முக்கிய அம்சமான (கோடா) அனுபந்தத்தை ஒத்தது.

ஸ்வாமிகளின் மற்றொரு க்ருதித் தொடர் சங்கராக ரத்ன மாலிகை என்பது. அது நூறு க்ருதிகள் அடங்கியது. அதன் இறுதியில் "ராகரத்னமாலிகசே," "ஏலாவதாரமு,", "அபராத முலனு," முதலிய கீர்த்தனங்கள் அவதரித்தன. மேலும், கோவூர், திருவொற்றியூர், நாகபட்டினம், திருவரங்கம் ஆகிய தலங்களில் கோயில் கொண்ட மூர்த்திகளின் துதியாகப் பிறந்த பஞ்ச ரத்னங்களும் என்றும் ஒளியுடன் பிரகாசிக்கின்றன. சொல்லொணாப் பெருமை வாய்ந்த இந்த க்ருதி ரத்னங்கள் இசையன்பர் உள்ளத்தை என்றும் அலங்கரிக்குமாறு இவற்றைச் சிரத்தையுடன் கற்றும், கற்பித்தும், அழியா வகை செய்து, கலைவாணியின் திருவருளைப் பெறுவோமாக!



கர்ணாடக ஸங்கீத லக்ஷண லக்ஷ்ய ஸம்ப்ரதாயத்தில் ஐயமறத் தேர்ந்து காயக
சிரேஷ்டராக விளங்கிய ஸ்ரீமான் சிமிழி ஸுந்தரமய்யர் (1876—1927)

కర్ణాటక సంగీత లక్షణ లక్ష్య సంప్రదాయములో ఈడులేని పాణ్డిత్యములో వెలసిన
ఘనవిద్వాన్ శ్రీ శిమిళి సుందరమయ్యరుగారు (1876—1927)

கீர்த்தனங்களின் கருத்துரை

ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமியின் ஸாஹித்யம் ஆழ்ந்த கருத்துடையது. வேத புராண இதிஹாஸங்களின் ஸாரமான அம்சங்களையும், யோக ரகசியங்களையும் ஸூக்ஷ்மமாகக் குறிப்பது. ஆகையால் அதன் ரஸானுபவத்திற்கு ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, இவற்றிலும், பழைய நூல்களிலும் திடமான தேர்ச்சி இன்றியமையாதது. நூலின் விரிவுக்கஞ்சிப் பதவுரை கூட ஸாத்தியமில்லாமல், வெளிப்படையான கருத்து மாத்திரம் கீழே தரப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீஹரி, ரகுவர, ஸீதாபதி, ராஜீவநேத்ர, நீரஜநயன, த்யாகராஜனுத, என்பன போன்ற ஸம்போதனங்கள் ஸ்பஷ்டமாயிருப்பதால் அவைகளை விளக்குவது அவசியமில்லை யென்று கருதி, அத்தகைய பதங்களுக்கும் பொருள் கூறவில்லை.

1. ஸ்வாமிகி. இதை இயற்றியவர் ஸ்ரீதியாகராஜ ஸ்வாமிகளின் *அத்தை குமாரரும், ஸ்வாமிகளின் பிரதான சிஷ்யர்களி லொருவருமான மகர் நோன்புச்சாவடி வெங்கடஸுப்பய்யர் அவர்கள். இவர் ஸம்ஸ்க்ருதமும் தெலுங்கும் நன்குக் கற்றவர். பிடில் வாத்தியத்திலும் தேர்ச்சியுள்ளவர். ஸரஸ்வதி, ப்ரவாள ஜ்யோதி, குதூகலம், முதலிய அபூர்வ ராகங்களில் க்ருதிகளைக் கவனம் செய்துள்ளார். பிரதாப சிந்தாமணி, ஆபோகி, விஜயஸ்ரீ, பூர்ண சந்த்ரிகா, இந்த நான்கு ராகங்களில், தேசாதி தாளத்தில் அமைந்து, "சிவ பூபதே" என்று தொடங்கும் சதுர்ஸ்தாயி ராகமாலிகை, நாட்டை, தோடி, பைரவி, காம்போஜி, கல்யாணி, அடாணா, மத்யமாவதி, நாயகி, ஸுரடி, இவற்றில் ஆதிதாளத்தில், "கருணிஞ்சுமு லோகாதார" என்று தொடங்கும் நவரத்ன ராகமாலிகை, மலயமாருதத்தில் "ஜன்மமெந்துகு", "தன்யுடெவ்வடோ", என்ற இரு க்ருதிகள், குதூகலராகத்தில் 'ஆவரகுதா' என்ற க்ருதி, ஹம்ஸத்வனியில் 'ஜலஜாக்ஷ' என்ற தானவர்ணம், முதலியவை, மகா பக்த சிரோமணியான இந்தப் பெரியார் கவனம் செய்தவை. மகா வைத்தினாதய்யர், பட்டணம் ஸுப்ரமணிய அய்யர், ஸ்வாமிகளின் பேரனை பஞ்சாபகேச ஐயர், வேணுகானம் சரப சாஸ்திரிகள், பிடில் வெங்கோபா ராவ், லாவணி வெங்கடராவ், சிவராமக்ருஷ்ணய்யர், வீணை தர்மண்ணா, தர்ம தீக்ஷிதலு, முதலியோர் இவருடைய சிஷ்யர்கள். த்யாகராஜ ஸ்வாமிகள் முக்தியடைந்து சுமார் நாற்பது வருஷம் வரையில் இவர் வாழ்ந்துவந்தார். இவரும் பட்டணம் ஸுப்ரமணிய அய்யரும் தங்களுடைய கவனங்களுக்கு 'வெங்கடேச" என்ற முத்திரையை மேற்கொண்டனர்.

ஸ்வரம், ராகம், ஆகிய அம்ருதக் கடலைப் பொங்கி எழச் செய்யும் சந்திரன் போன்று அவதரித்து, உலகோரனைவரும் மகிழ்ந்து போற்றத்தகும் உன்னதமான புகழ்படைத்து, இசை கற்றவர் நெறியிழந்தனரே என்று இரங்கி, அன்னாருக்கு உய்யும் வழியில் ஊக்கம் வளரும்படி கீர்த்தனங்களைக் கவனம் செய்து, பிறர் பொருள், மனையாள் முதலியவற்றை இச்சிக்காது, புவியரசரை நாடி முகமன் கூறாது, உத்தம ஸங்கீதமே

முக்தியளிக்கும் என்றுணர்ந்து, பரமாத்மாவான ஸ்ரீராமனை வழிபட்டு, தன்னுடைய உத்தம கானத்தினால் வெங்கடேசுவரனை மெய்மறக்கச் செய்து, அவனை ஏற்றுக்கொண்டு, அவனது உள்ளக்கோயிலில் அமர்ந்த, ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிக்கு இணையாவாரெவர்?

2. அகோராதனி. வேதம், சாஸ்திரம், உபனிஷத் முதலியவைகளைக் கற்றுணர்ந்து, உண்மையான மோக்ஷ ஸாதனத்தைக் கடைப்பிடித்து, இவைகளின் மூலம் ஏற்பட்ட பண்பாட்டினால் உன் அடியவனாகவே வாழ்ந்து வரும் என்னிடத்தில் குற்றங்குறைகளைக் கணக்கிட்டால் நான் எவ்விதம் பொறுப்பேன்? எந்தத் தெய்வத்தின் ப்ரதிகூலமாகக் கொள்வேன்? என்மீது கருணைக்கண் வைப்பாய்.

3. எவரிதோ. என் மனதிலுள்ள துக்கத்தை எவருடன் சொல்லுவேன்? நல்லோரைக்கூடி எப்பொழுதும் உன்னை வழிபடவேண்டுமென்று விருப்பம். ஆனால், "பிள்ளையார் பிடிக்கக் குரங்கானது" என்ற பழமொழியைப் போலாகிற்று. நற்குணங்கள் நிறைந்தவனே, மாயையாகிற மேகத்தைச் சிதறடிக்கும் புயற்காற்றை ஒத்தவனே. க்ருஷ்ணபகவானைப் பற்றிய இந்த க்ருதி பிறந்த வரலாறு சரித்திரத்தில் காணப்படும். குணமய — ஆமய — அம்புத — ஸமீர — என்றொரு பாடம் உண்டு. ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய த்ரிகுணங்களும் நோயைப் போன்று பீடிப்பவைகளே யாதலால், அவற்றை அகற்றி இன்பமூட்டும் வள்ளல் ஸ்ரீ க்ருஷ்ணபகவான் என்ற கருத்தை ஸ்வாமிகள் வெளியிடுகிறார்.

4. எந்துகு தயராது. உனக்கு என்மீது ஏன் தயவில்லை? உனது வைபவத்தில் என்னை மறந்தாயோ? அல்லது என்னைக் காக்க மனமில்லாது இவ்விடம் விட்டகன்றனையோ? ஒப்பற்ற ஸம்ஸார ஸாகரத்தின் அவஸ்தை பொறுக்காமல் திகிலடைந்து, தாமரை இலை நீர்த்துளிபோல் நான் தத்தளிக்கையில், அதைக் கண்டும்; மேன்மேலும் உலக இன்பமாகிற சமுத்திரத்தில் உழலுவோருடன் இணங்க இசையாது என் உடல் வாடிக் குன்றியதைக் கண்ணுற்றும்; என்மீது தயைபுரிய ஏனிந்தத் தாமதம்? அதற்குத் தருணமிது வல்லவே. உன்னையல்லால் எனக்குக் கதி ஏது சொல்லுவாய். நீரதாபசரீர, நிருபமசூர, நீரஜதளநயன, நிர்மலாபகன, தீனசரண்ய, தாரகசரித—இவை போன்ற எண்ணிறந்த விளிவேற்றுமைப் பிரயோகங்கள் ஸந்தர்ப்பத்திற் கேற்ப, சொற்சுவை, பொருட்சுவை நிறைந்திருத்தல் ஸ்வாமிகளின் இணையற்ற அருள்வாக்கின் சிறந்த அம்சங்களிலொன்றாகும். அவற்றிற் குரிய மனோநிலை, பகவத்பக்தி, ஆசாரசீலம், முதலிய ஸாதனங்களுடன் அவைகளைச் சிந்தித்து அகங்கரைந்து, பாடி அனுபவிக்கும் நற்பேறு பெற்றவர் பாக்கியந்தா னென்ன!

5. ஏமிஜேஸிதே. ஸ்ரீ ராமனுடைய அனுக்ரஹம் பெறாதவர்கள் உலகில் எதைச் சாதித்தும் பயனென்ன? துராசைகள், அறியாமையினா லேற்படும் புத்தி ப்ரம்சம், இவற்றுக் காளாகி, ஸ்ரீ ராமன் தன் கல்யாண குணங்களின் மூலம் வெளிக்காட்டிய அறநெறியின் தத்துவத்தை உணராமல், விமரிசையான உறைவிடம், அணிகலம் நிறைந்த மனையாள், போகங்களை அனுபவித்தல் முதலிய அற்பப் பெருமைகளில் ஈடுபட்டும், அல்லது யாகம் முதலியவைகளைச் செய்தும், ஸந்தான வ்ருத்தியின் மூலமோ, அன்னிய குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனை தத்தெடுத்துக் கொண்டு அதன் மூலமோ தான் ஈடேறப் போவதாக ப்ரமை கொண்டும், தமது மாளிகைகளையும், அவற்றில் ஜ்வலிக்கும் மனோஹரமான விளக்குகளையும் கண்டு த்ருப்தியடைந்தும், ராஜ்யபரிபாலனம் செய்து ஸமுதாயத்தோரால் கொண்டாடப்பட்டும், நெய் முதலிய ஆகாரவகைகள் நிறைந்த ஸந்தர்ப்பணைகள் செய்தும், ஆசானாகவும், காண்பவர்களுக்கெல்லாம் பெரியவனாகவும் தோன்றிப் பிறர் கேட்

கவே போதித்தும்—இவ்வாறெல்லாம் சிறந்ததாகத் தோன்றும் வாழ்வை நடத்துபவர், கமலக்கண்ணனும் ஸகல ஸம்பத்துக்களைக் கொடுக்கவல்லானும், ஒப்பாரு மிக்காரு மொழிந்தவனாகப் போற்றத்தகுந்த பரவஸ்துவுமான ஸ்ரீ ராமபிரானின் தயவைப் பெறாவிடில் பாக்யசாலிகளாவதெப்படி?

6. கருணஜூடவம்ம. தாமரையின் விரோதியாகக் கவிஞர் கற்பனை செய்யும் சந்திரனுடைய பிறையைத் தலையில் சூடிய பரமசிவனின் மனைவியான அம்பிகையே, என்னைக் கடாக்ஷிப்பாய். புவியில் இணையற்று விளங்கும் பஞ்சநதம் என்ற திருவையாற்றில் அமர்ந்து அறம் வளர்ப்பவளே, ஜகமனைத்திற்கும் ஆதாரம் நீயே என்று நான் உறுதியாக நம்பியிருக்கிறேனே தவிர, நான் எத்தகையவனோ, எனதுள்ளம் எப்படியோ என்று நீ நினைப்பது தகாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் மீது குற்றஞ்சாட்டுவது போதுமே. உனது க்ருபைக்கு நான் பாத்திரமாவேன். மதங்கொண்டு அறியாமற் செய்த என் தீவினையகற்றுபவள் நீ என நம்பி, உனது பாதகமலங்களில் இடையறாத பக்தி இருக்கும்படி நீயே எனக்கு அருள் புரிவாயென்று நான் வேண்டியது உதாரகுணம் நிறைந்த உனக்குத் தோன்றாததும், வேறு கதியில்லாமல் எப்பொழுதும் உன்னிடமே முறையிடுவது உன் காதுகளில் விழாததும் ஏன்? பராசக்தியும், ஆனந்தம் நிறைந்தவளாயும் விளங்கும் உன்னையல்லால் தாமரை இலை நீர்த்துளியெனத் தத்தளிக்கும் என்னைக் காப்பவரெவர்? என்னிடம் அன்பொழிந்து என்னைக் கைவிடுதல் கூடாதென்ற என் முறை கேளாய். (கடைசிச் சரணத்தில் ஸ்ரீ ராமன், பரமசிவன், பார்வதியம்மை, மூவரிடமும் ஒருங்கே தன் முறையீட்டை வெளியிடுதல் கவனிக்கத்தக்கது.)

7. கோடிநதுலு. மனமே, தனுஷ்கோடி ஒன்றேகோடிப் புண்ணிய நதிகளின் மகிமை வாய்ந்தது. எனவே நீ சுற்றித் திரிவதேன்? சியாமஸுந்தரனை மேன்மேலும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றோருக்கு இது ஸுலபம். இறைவனின் பாதத்திலிருந்து ப்ரவஹித்த கங்கையே காவேரியாக உருவெடுத்து, ஸ்ரீ ரங்கநாதனைக் கண்டு மகிழ்ந்தாளன்றோ? முகோல்லாஸத்துடன் விளங்கும் ஸ்ரீ ராமபிரானைப் போற்றித் தொழும் தியாகராஜனின் முறை கேளாய், சஞ்சலமுற்றுத் திரியும் மனமே. (தனுஷ்கோடி என்பது கோதண்டதரனையே குறிப்பதாகவும் கொள்ளலாம்.)

8. கதிநீவேகானி. நீயே கதி எனக் கோரிவந்தேன், அன்னையே. என்னை அசட்டை செய்யலாமா? உண்மையாக உன்னை வழிபடுவோருக்கு வேண்டுவன குறைவறத் தந்தருளும் உனது பாதங்களை உறுதியாக நம்பினேன். இனியேனும் என்னைக் காப்பாய். தபஸ்தீர்த்த மெனப்படும் லால்குடியில் அமர்ந்து ஆனந்தமாகக் காட்சியளிக்கும் அன்னையே, உனது மஹிமையைப் புகலப் பிரமனுக்கும் இயலுமோ? புவியில் உனக்கு நிகரெவர்? நான் உன்னைச்சேர்ந்தவனன்றோ? இன்னல்களைந்து கோருவதளிக்கும் தெய்வம் நீயே என்ற உறுதியுடன் ஐயாறு நாயகர்களான மூர்த்திகள் ஒன்றுகூடி உன்னையல்லவோ நோக்கி நின்றனர்? இந்தத் திருத்தலத்தில் வாழ்பவர் என்ன புண்ணியம் செய்தனரோ? தேவர்கள் மேருமலையின் மீது அமைத்த ஸ்ரீபுரம் என்ற நகரத்தில் சிந்தாமணி என்ற இடத்தில் வாஸம் செய்யும் அம்பிகையே, நீயே சரண் என்று உன் க்ருபையை நாடி நிற்கிறேன். வேறெவரும் எனக்குற்ற துணையாகமாட்டார் என்பதை நான் திடமாக அறிவேன். உனது மஹிமைகள் உன்னதமான கோபுரங்களைப் போன்று விளங்குபவை. என்னிடம் இந்தத் தாமதம் வேண்டாம். மூலதெய்வமான உனது கடாக்ஷத்தினாலன்றோ என் சித்தம் உன்னிடமே உறுதிகொண்டது? உன்னைத் தரிசித்த

பிறகு நான் உலகோரிடம் பொருள்வேண்டி யிரப்பது உன் மஹிமைக்குத் தகாது. ஆகையால் நீயே எனக்குக் கதி.

9. நீ வண்டி தைவமு. ஷண்முகனே, உன்னைப்போன்ற தெய்வம் நான் கண்டிலேன். உள்ளத்தில் விளங்கும் உன்னை அறிவது எளிதல்லவே. கைலையின் கண் உன்னை யொத்த சிறுவர்களுடன் விளையாடுகையில், ஓங்காரத்தின் பொருள் நானே என்ற ப்ரம்மாவை அச்சுறுத்தி, நவவரர்களில் ஒருவனை கிங்கரனுக்கு மும்முறை உத்தரவிட்டு (ஸ்காந்த புராணம்) தேவர்கள், விஷ்ணு, ருத்ரன், முதலியோர் கேட்டு மெச்சுகையில், நீயே படைத்தலாம் தொழிலை ப்ரம்மாவுக்கு இட்டனையன்றோ? ஹரி, ஹரன், திக்பாலகர்கள், ஸூர்யன், சந்த்ரன், வித்யாதரர்கள் என்ற தேவகணங்கள், ஜகமுழுதும் விளங்கும் மாபெரும் வீரர்கள், அனைவரும் ஒருங்கே உன்னைத் தஞ்சமடைந்தபொழுது, அவர்களுடைய துயரங்கண்டு பொறுக்காமல், சூரபத்மாஸுர துரோகிகளை யடக்கிப் புகழ்படைத்தவனே, கோடி மன்மதனின் அழகு, சந்திரனை யொத்த முகம் படைத்த உனது நகத்தின் நுனிக்குச் சமமாகுமா? உனது அழகிய உருவத்தை என்றும் என் உள்ளத்தில் அமர்த்திய குமரக்கடவுளே, கருணைவள்ளலே, தாமரைக் கண்ணனே, உத்தமக் கலையறியும் நான் வணங்கும் தெய்வமே, அடுத்தவருக்கு நலம் செய்பவனே.

10. முன்னுராவண. முன்னொருகால், ராவணனுடைய ஹிம்ஸை பொறுக்காமல் விபீஷணன் முறையிடவும், "ராவணனே சரணம் என்று வந்தால் அவனையும் மன்னிப்பேன்" என்று பகர்ந்து உன் குலத்தோரின் உயர்ந்த கீர்த்தியை நினைத்துப் புகழ்ந்த அம்மொழிகளை மறந்தாயோ? முன்பு ஸூர்ய புத்ரனை வாலி உன் பாணங்களால் மடியும்போது உன்னிடம் மன்றாட, அதைக்கேட்டு மனமிரங்கி அவன் மனக் குறையைத் தீர்த்து அவனுக்கு நற்பேறும், அவனது புத்திரனுக்கு யுவராஜ பட்டாபிஷேகமும் கிடைக்கும்படி செய்தவனே. முன்பு, இரண்யகசிபு துன்புறுத்திய ப்ரஹ்லாதன் "முரஹரி" எனவும், பரிவுடன் அவனைக் காத்து ஸுகமளித்தவனே. உன் பழைய பெருமையைப் பற்றி நான் கேட்டிருக்கிறேனே தவிர, இப்பொழுது என் வினை களைந்து என்னைக் காப்பாய். பாம்பின் மீதுறைபவனே, கருடனை வாஹனமாகக் கொண்டவனே, ஸூர்யகுலமான ஸமுத்திரத்திற்குச் சந்த்ரன் போன்றவனே, ப்ரம்மாவே துதிக்கும் பெருமை வாய்ந்தவனே, ராமசந்த்ரனே.

11. ஸுகலு பதிவேலுன்ன. மனமே, பதினாயிரம் ரூபாய் கையிலிருந்தும், ஒரு கையளவு நொய்தானே உயிர்வாழத் தேவை? ஆயிரம் சேலைகளிருந்தும் கட்டிக்கொள்ளுவது ஒன்றுதானே? உலகெலாம் ஆளுபவரும் மூன்று முழம் தரையில தானே படுக்கமுடியும்? நூறுவகைத் தின்பண்டங்களிலிருந்தும் ஒரு வாய் கொள்ளக்கூடியது தானே உட்செல்லும்? ஏரி நிறைந்திருந்தும் பாத்திரம் கொள்ளக்கூடியதுதானே எடுக்கமுடியும்? ஆகையால் போதுமென்ற திருப்திச் செல்வத்தையே வளர்த்து, இன்பமே உருக்கொண்ட ஸ்ரீராமனை மறவாமலிரு.

12. ஏபனிகோ. நான் எந்தப் பணியின் பொருட்டுப் பிறந்தேனென்று நீ சிந்திக்கவேண்டாம். அது நீ யறியாததா? வால்மீகி போன்ற முனிவர்களும், மற்றும் பல மனிதர்களும் உன்னைப் புகழ்ந்திருக்கின்றனர். அதன்மூலம் என் ஆவல் தீருமா? மேலோராகிய உத்தம பக்தர்கள் ஒப்புவார்களா? உன்னைப்பாடிப் பரகதியடையவன்றோ நான் பிறந்தது?

13. மாபால. எங்களிடம் (தோன்றி) விளங்கி, எங்களை ரட்சிக்கக் கூடாதா? உனதடிகளில் ஏராளமான பக்தியை யீந்து அதன்மூலம் எங்களை ஈடேற்றும் சக்தியும் உன்னிடமே யுள்ளதன்றோ? என் துயரம் நீக்குவது உனக்கு எம்மாத்திரம்?

கருணைக்கடலான லக்ஷ்மியின் நாயகனே, பாப சித்தர்களான இம்மனிதர்களின் துயரங் கண்டு நான் என்ன செய்வேன்? காக்க உனக்கேனிந்தப் பாராமுகம்? ஆத்திரத்தினால் பதறி உன்னை நொந்தேன். உன் கிருபைக்கு எல்லையுண்டோ? உன்னையன்றி எனக்கு வேறுகதி ஏது? (வித்ருத சாபபாண, ஆபத்பாந்தவ, ஸாகேதநகரீச, ஸுஜனமானுபிமான பாலன, நாரத ஸுகானலோல, நாகாதிபவினுத, நாகாரிரத, ஸுராகஹர, ஸுரநாககபன—இவைபோன்ற விளிவேற்றுமைப் பதங்கள் நிறைந்த ஸ்வாமிகளின் வாங்மாதுரியமும், பாவபுஷ்டியும் பாவுகர்களின் இருதயத்தைக் கொள்ளை கொண்டு போவன.)

14. ஸாரி வெடலின. கரை புரண்டுவரும் இந்தக் காவேரி நதியைத் தரிசியுங்கள். மனிதரிடையே காணும் தாரதம்மியங்களைப் பாராமல், போகுமிடந்தோறும் அனைவருக்கும் நல்வாழ்வை வழங்கி, ஒவ்வோரிடத்தில் வேகமாகவும், பிறிதோரிடம் அலையும் சுழலும் மிகுந்து பயங்கரமான ஓசையுடனும், மற்றோரிடத்தில் கருணை நிறைந்ததுபோல் அமைதியுடனும், விளங்கி, குயில்கள் விநோதமாகக் கூவும் சப்தம் நிறைந்து, ஸ்ரீ ரங்கநாதனைத் தரிசிப்பதுபோல ஸ்ரீரங்கத்தின் வழியே பெருக்கெடுத்து, பதினான்கு உலகங்களையும் உய்விப்பவனான ப்ரணதார்த்திஹரன் விளங்கும் பஞ்சநத க்ஷேத்திரத்தின் வழியே பாய்ந்து, அம் மூர்த்தியைத் தரிசித்து, மக்களும் தேவரும் இரு கரைகளிலும் கூடி ராஜராஜேசுவரி என்று துதித்து மலர்கொண்டு பூஜித்துக் கொண்டாடும்படி—இப்படி அழகாகச் செல்லும் காவேரி யென்ற கன்யகாமணியைத் தரிசியுங்கள். இயற்கை யன்னையின் வனப்பில் ஸ்வாமிகள் ஈடுபட்டு ஆனந்த பரவசராய்க் கண்டருளிய க்ருதிகள் பலவற்றில் இது ஒன்று. (“முரிபெமு” வென்று தொடங்கும் முகாரி க்ருதியைக் கவனிக்க.)

15. ராரா மாயிண்டி தாக. எனது வீடுவரையில் வருவாயாக. உன்னை வேண்டி வணங்குகிறேன். என்னை ரட்சிப்பாய். எனது துயரம் பொறுக்கவில்லை. என் கோரிக்கை நிறைவேறுமல், உன் வழி தேடி மயங்குகிறேன். நல்லோரைக் காப்பவனே, இன்றேனும் வாஹனரூடனாய்ப் புறப்பட்டு வாராய். அதிகாலையில் எழுப்பி, நலம் தரும் புத்தி புகட்டி ரட்சிப்பாய். உன் அழகிய முகத்தைப் பார்த்தபடியே அருகில் நின்று தினந்தோறும் பூஜிக்கிறேன். நீயே எனக்குக்கதி என்றறிந்து என்னைக் காக்கக் கருணையுடன் வாராயோ? நான் உன் கையில் அகப்பட்ட வஸ்து என்பதை இனியேனும் மறவாதே. (காவேரியி லகப்பட்ட ஸ்ரீராம விக்ரஹம் ஸ்வாமிகள் தேடி வாடுவதைக் கண்டு மேலே மிதந்து நர்த்தனமாடி வந்ததாகவும், அதைக்கண்டு ஸ்வாமிகளும் பரவசமாக இந்த க்ருதியை அருளியதாகவும் ரஸமான ஒரு வதந்தி யுண்டு.)

16. த்யானமே. மனதே, (ராம) த்யானமே சிறந்த கங்காஸ்நானமாகும். வானத்திலிருந்து புரண்டுவரும் கங்காஜலமாயினும், அதில் முழுகி முழுகி உள்ளிருக்கும் வஞ்சனை, துரோகம், கர்வம், இறுமாப்பு, முதலிய அழுக்குகளை யழிக்க முடியுமா? பிறர் பொருளையும் மனையாளையும் நிந்தித்தல், பரநிந்தை, பிறரைத் துன்புறுத்தல், முதலியவற்றை ஒழித்து, மனிதனுசப் புவியில் விளங்கியும் அவன் ஸ்ரீமந் நாராயணனே என்று த்யாகராஜன் அறிந்த ஸ்ரீராமனை த்யானம் செய்தலே சிறந்த கங்காஸ்நானத்தின் பலனைத் தரவல்லது.

17. நீசித்தமு. உனது சித்தம் பரிசுத்தம் நிறைந்து சஞ்சலமொழிந்தது என்றறிந்தே நான் உன்னையே நம்பினேன். என் உள்ளம் கபடம் நிறைந்து நிலையற்றிருக்கிறதென்று என்னைக் கைவிடாதே. வண்டல் நிறைந்த தண்ணீரைச் சுத்திகரிக்கும் தேற்றாங் கொட்டை, கொடுக்கினால் கொட்டி வளர்க்கும் வண்டு, உயிரொளி வழங்கும் கதிரவன், உயிர்த்தோழன்,

இகபரங்களுக்கு வழிகாட்டி, இவை யனைத்தின் அம்சங்களும் பொருந்திய குரு நீயே என்று உன்னையே நம்பினேன்.

18. சங்கீதக்ஞானமு. மனமே, இறைவனிடம் பக்தி யில்லாத ஸங்கீதக்ஞானம் நல்வழி யடையுமா? ப்ருங்கி, நடராஜர், வாயு புத்ரனான ஆஞ்சனேயர், அகஸ்தியர், மதங்கர், நாரதர், முதலியோர் கடைத்தேறும் உபாயமாகக் கொண்டதல்லவா நமது இசை முறை? நியாயம், அனியாயம் என்ற பகுத்தறிவு, ஜகமெல்லாம் மாயையி லகப்பட்டிருப்பதை உணர்ந்திருத்தல், சரீரத்திற்கு இயற்கையான அறுவகைத் தீய குணங்களையும் வெல்லும் உபாயம்,—இவை உண்மையான ஸங்கீத க்ஞானத்தினால் த்யாகராஜனுக்கு உண்டானவை. (பக்தியில்லாத இசையறிவு இவற்றைத் தராதென்று கருத்து.)

19. ஸரிவாரலோன. என்னைப் போன்றவர்களிடையில் என்னை இழிவு படுத்தியது போதுமே. பிறர் மனையில் கைக் கொள்ளும் பூஜையினால் உன் மனம் குளிர்ந்ததோ? தாறு மாறாகப் பேசுபவர்களிடையே நான் தத்தளிப்பதைப் பார்ப்பது உனக்குத் தகுமா? பக்தர்களின் கஷ்டங்களை யெல்லாம் நீ நீக்கவில்லையா?

20. ஏராமுனி. எந்த ராமனை நம்பி, நான் எப்படிப் பட்ட புஷ்பங்களால் பூஜித்தேனோ அவனன்றோ அவ்வப்போது தனது பக்த சிரேஷ்டர்களின் எதிரிகளின் கொட்டத்தை அடக்குகிறவன்? (வனத்தில்) தனித்திருக்கையில், காகாஸுரனால் நேர்ந்த வேதனையைப் பொறுத்துக்கொண்டு, ஸீதா தேவி தன் கரங்களைத் தட்டித் தூங்கச் செய்துகொண்டிருக்கும் போது, காகாஸுரனின் தீவினையை யறிந்து, அடங்காத கோபங்கொண்டு ஒரு அம்பெய்து, அவ்வஸுரனை ஒற்றைக் கண்ணனாக்கிய ஸாகேதபதியன்றோ யான் பூஜிக்கும் ராமன்? ஸுக்ரீவனை மனைவி மக்களிடமிருந்து பிரித்து விரட்டி, அவனுடைய பத்தினியான ருமாதேவியைத் தானடைய எத்தனித்த வாலியைக் கொன்றவனன்றோ ராமன்? விபீஷணன் ராவணனுடைய வசை மொழி கேட்டுத் தட்சணமே தஞ்சமென்று கதறவும், அக் கொடியவனை மாய்த்ததும், தீமை யகற்றி வாழும் அடியேனைக் காப்பவனும் ராமபிரானே யல்லவோ?

21. துளஸீதளமுலசே. துளஸித் தளங்கொண்டு ஸந்தோஷமாகப் பூஜிப்பேன். ஐயன் தாளினை இடைவிடாது போற்றுவேன். தாமரை, புன்னை, சண்பகம், பாதிரி, மருவு, அலரி, மல்லிகை, இவைபோன்ற நறுமணங் கமழும் உயர்ந்த மலர்களால் தர்மாத்மனும், அயோத்தியில் விளங்குபவனுமான ஸ்ரீராமனைப் பூஜிப்பேன். ஸ்வாமிகளும் சிஷ்யர்களும் சேர்ந்து இந்த க்ருதியைப் பாடி அர்ச்சனை செய்யும்பொழுது சரணத்தில் தோன்றும் புஷ்பங்கள் முறையே ஸ்வாமிகளின் திருக்கரங்களில் விளங்கும் அற்புதத்தைக் கண்ணுற்று அடியார்கள் இன்புறுவார்களாம்.

22. சோபில்லு. மனமே, அழகுடன் விளங்கும் ஸப்த ஸ்வர தேவதைகளை பக்தி சிரத்தையுடன் தியானித்து வழி படுவாய். நாபி, ஹ்ருதயம், கழுத்து, நாக்கு, மூக்கு, முதலிய இடங்களிலிருந்து உற்பத்தியாகி இனிய கானமாக உருவெடுக்கும் ஏழு ஸ்வரங்களையும் தேவர்களாக அறிந்து வணக்கம் செய். புவியில் ருக், ஸாமம், முதலிய வேதங்கள், மகிமை வாய்ந்த காயத்ரிமந்த்ரம், தேவர்கள், நரோத்தமர்கள்,—இவைபோன்ற ஸத்துவம் மிகுந்த இடங்களில் விளங்கும் ஸப்த ஸ்வரங்களான தேவர்களை தியானித்து வணங்குவாய்.

23. தெரதீயக. திருப்பதியில் விளங்கும் வெங்கடரமண ஸ்வாமியே, என்னுள்ளத்தில் காணும் மத்ஸரமாகிற திரையை விலக்கக்கூடாதா? அது அறம், பொருள், வீடு, ஆகிய புருஷார்த்தங்களை விரட்டியடிக்கிறதே. நன்றாக உணவருந்துகையில் ஈ பறந்து விழுந்தவாறு, கடவுளைச் சிந்திக்கும்

பொழுது மனம் கேவலமான இடங்களில் சுற்றித் திரிவது போல, இரைதேடும் மீன் தூண்டிலில் சிக்கியவாறு, நன்ருகப் பிரகாசிக்கும் விளக்கின் காந்தியை ஏதோ குறுக்கிட்டு மறைப்பதுபோல, வேடன் வீசிய வலை யென்றறியாமல் மிருகங்கள் அதனுள் அகப்பட்டுக்கொள்ளுவதுபோல உள்ள, மத்ஸரமான இத்திரை என்னுள்ளத்தினின்றும் நீங்குமாக: சிறிதும் தாமதியாமல் உன் சித்தமேகதி யென்று தொடர்ந்தேன்.

34. தரிதாபுலேக. (உன்னையல்லால்) வேறு கதியில்லை யென்றறிந்து வேண்டிக்கொண்டும் உன் தயவு வாராததேன்? பெருஞ் செல்வமிருந்தால் மனமிரங்கிக் காப்பாற்றுவாயோ? அன்ருெரு நாள் ப்ரஹ்லாதனை (தேவர்களின் விரோதியான இரணியனின் புதல்வன்)க் கருணையுடன் நோக்கி ரட்சித்தாய். எனினும், நான் அன்பு பூண்டு உனதடி பற்றினல் வரமளிக்கத் தோன்றுமா?

25. பலமுகுலமு. எத்தகைய பலமும், குலமும் என்ன பயன்? ஸ்ரீராமனிடம் ஊறிய பக்தியே உறுதியான பலமாகும். உயர்ந்த ஸகல வித்திகளும் தானுகவே பின் தொடரும் ராம பக்தியே பலமே தவிர, சரீர பலம் பயன் தருமா? நீர்க் காக்கை, மீன், முதலியவை எப்பொழுதும் வேளை தவருமல் நீராடுகின்றன வென்று கொள்ளுதல் பொருந்துமா? அரைக் கண்மூடி நிற்கும் கொக்கு தெய்வத்யானம் செய்வதாகுமா? இலை தழைகளை மேயும் ஆடு சிறந்த உபவாஸத்தை மேற்கொண்டதாகுமா? விசித்திரமான இறக்கைகளுடன் பறக்கும் பறவைகள் வானத்தில் ஸஞ்சரிக்கும் ஸூரிய சந்திரர்களுக்கு ஒப்பாகுமா? துறவிபோலவும், மௌனி போலவும் பல வேஷந்தரித்து சிறு குகைகளைப்போன்ற பொந்துகளிலிருந்து வழிப்போக்கர்களை யாசித்து வாழும் நீசர்கள் நற்குண நிறைந்த மௌனிகளாவார்களா? காட்டில் திரியும் குரங்குகள் வானப்ரஸ்தம் மேற்கொண்ட ஞானிகளெனத் தகுமா? ஜங்கமர் என்ற கூட்டத்தினர் வாய்திறவாதிருந்தால், மௌன விரதம் பூண்ட ஞானிகளாவார்களா? ஆடையுடுக்காத சிறு குழந்தை திகம்பரசாமியாகுமா? தியாகராஜன் வேண்டுவதை யளிப்பவனை ஸ்ரீராமனிடம் செலுத்தும் உண்மையான பக்தி ஸகல ஜனங்களுக்கும் எளிதில் செல்லும் நாணயம்போல மதிக்கத்தக்கதாகும்.

26. எடுலப்ரோதுவோ. எவரும் அறியாத தனிப் பரம்பொருளே, என்னை எப்படிக் காப்பாயோ தெரியவில்லை. அம்மம்ம, எனது வரலாறு கேட்கச் சகியாதபடி அவ்வளவு கோரமானது. பட்டி மாட்டைப்போல கண்ட இடமெல்லாம் திரிந்து, பிறர் பொருளைத் தின்று கொழுத்து, உலோபித் தனத்தைப் பிறவிக் குணமாக அடைந்தவர்களை என் வயிறு நிரப்ப வேண்டிப் புகழ்ந்து, தீயரோடிணங்கி, செய்யத்தகாதன செய்து, இப்படி உழலும் என்னை நீ தயவுடன் காப்பாற்றுவது எப்படியோ நானறியேன்.

27. என்னடு ஜூடுதுனோ? ஸூரிய குலத்திற்குத் திலகம் போன்றவனே, உன்னை எப்பொழுது காண்பேனே? பூர்ண சந்த்ரனை யொத்த உன் அழகிய முகத்தை எப்பொழுது காண்பேனே. பூமியின் மகளான ஸீதாதேவி, லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், வானர ஸேனையின் தளகர்த்தனை ஸுக்ரீவன், மேன்மை பொருந்திய ஆஞ்சனேயர், முதலியோர் ஒருவரோடொருவர் உன் புகழ்பேசி, உன்னை விருப்புடன் அழைக்குங்கால் உன்னை எப்பொழுது காண்பேனே?

28. எந்த முத்தோ. எவ்வளவு அழகு, ஸொகுஸு, எவரால் வர்ணிக்க முடியும்? எத்தகையவரேனும் பெண்ணாசையிற் சிக்கிய சித்த மடைகின்றனரே. மாமியார் மீது கண் வைத்துச் சபலத்திற்காளாகி, ஊராருக்குப் பக்தன்போல நடித்து, பால்வைத்த பாண்டம் அதன் ருசி யறியாததுபோல,

ஸகலத்தையும் படைத்தாட்டும் வல்லமை வாய்ந்த உன் அழகென்ன, ஸொகுஸென்ன ?

29. முத்துமோமு. அழகுமிகும் திருமுகம் எப்படி விளங்கியதோ! முனிகள் கண்டு எவ்விதம் மோகங் கொண்டனரோ! கண்டு களிக்கும் காலத்தை எதிர்நோக்கி உள்ளம் உருகியவாறு இருந்த (சரபங்கர், சபரி முதலியோர்) வர்களுக்கெதிரில் ஸ்ரீராமபிரான் தோன்றியபொழுது அவனது திருமுகம் எப்படிப் பிரகாசித்ததோ! தூய மனத்தினரான நரோத்தமர்கள் செய்த நல்ல பூஜையின் பயனே, முற்பிறவித் தவப்பயனே, நீருண்ட மேகம் போன்று விளங்கும் ராகவனுடைய இயற்கையான நற்குணங்களின் விலாஸந்தானே, குபேரனுடைய தோழனான பரமசிவன் வணங்கும் பரதெய்வமும், தியாகராஜன் போற்றும் மூர்த்தியுமான ஸ்ரீராமனின் திருமுகம் எப்படிப் பிரகாசித்ததோ !

30. ராரா நன்னு. வந்தென்னைக் காப்பாய். என்னைப் பரிகாசம் செய்வதேன் ? நீருண்ட மேகத்தை யொத்த திருமேனி யுடையவனே, என்னிடம் குற்றம் பாராட்டாமல் என்னை ஆதரிப்பாய். ஸம்ஸாரமென்ற காட்டில் தடுமாறியலையும் எனக்கு பாவனம் நிறைந்த உனது நாமமே மீளும் வழியாகும் ! ஸீதாப் பிராட்டியின் இருதயமாகிற தாமரையை மலரச் செய்யும் ஸூரியனன்றோ நீ? அன்பர்களுக்குப் பாரிஜாதம் போன்று கோருவதளிக்கும் பெரு நிதியே! தாமரையின் தோழனான ஸூரிய குலத்தில் தோன்றியவனே, அயனையும் படைத்த மூலப் பொருளே, நினைப்பதளிக்கும் வள்ளலாக அயோத்தியி லமர்ந்தவனே, என்னிடம் அசட்டையேன்? பூமியின் மருமகனே, சந்திர பிம்பம் போன்று விளங்கும் முகத்தையுடையவனே, இந்திரனால் வணங்கப்பட்டவனே, பிறப் பொழிந்தவனே, உனது மகிமை யறிந்தே உன்னை வேண்டுகிறேன்.

31. ஸீதம்ம. மனமே, ஸீதா தேவி என தன்னை. ஸ்ரீராமன் என் பிதா. ஆஞ்சனேயர், லக்ஷ்மணன், கருடாழ்வான், சத்துருக்னன், பிரம்மா, பரதன், முதலியோர் என் உடன் பிறந்தவர்கள். பரமசிவன், வசிஷ்டர், பராசர முனிவர், நாரதர், சௌனகர், சுகர், இந்திரன், கௌதமர், விநயகர், முருகக்கடவுள், ஸனக ஸனந்தனர் முதலியோரும், புவியில் உண்மையான பகவத் பக்தர்கள் எவருளரோ, அவர்கள் யாவரும் எனது உறவினராவர்.

32. மரியாதகாதய்ய. முறையல்ல, ஐயனே. காவாததேன்? உன்னைப்போன்ற கருணாநிதிக்கு, என்னைப் பிறர் நடுவில் இகழ்ச்சிக்குட் படுத்துவது முறையல்லவே. தன்னைச் சேர்ந்தவர்கள், அன்னியர்கள், என்ற பேத நோக்கு, மகிமை வாய்ந்த ராமனுக்கே உண்டு என்று பிரஸித்தமல்லவா? குபேரனுடைய தோழனான பரமசிவன் துதிக்கும் தேவனே, உன்னை விட்டகலாத என்னை நீ காவாதிருப்பது தகுமா ?

33. கல்குண. வாயு புத்திரனான ஆஞ்சநேய ஸ்வாமியே, ஸ்ரீராமனின் திருவடித் தாமரைகளின் தரிசனம் எனக்குக் கிடைக்குமா ? மேன்மேலும் தரிசித்துப் பேரானந்தங் கொண்டு விளங்கும் பக்த சிரேஷ்டரே, எனக்கும் அப்பாக்கியம் கிடைக்குமா ? விடியு முன்னரே உமது திருக்கரங்களினால் பரிசுத்தமான நீராட்டம் செய்விக்கப்பட்டு, ஸ்ரீரங்கநாதனுக்கு நிவேதித்த போக்கியமான ஆகார வகைகளைப் பிராட்டியின் கைகளினின்றும் பெற்று உட்கொண்டு, ஸாத்வீகமான புராணங்களைப் படிக்கும்படி உமக்கு ஏவல் புரியும் ஸாகேத பதியும் அனைத்தையும் வாழ்விப்பவனுமான ஸ்ரீ காந்தனை நன்றாகத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா? ஸ்வாமிகளுக்கு ஆஞ்சனேயரிடம் உள்ள பக்திப் பெருக்கை வெளியிடும் க்ருதிகள் பல. புருஷகாரத்திற்குச் சிறிய திருவடியைப் பிரார்த்திக்கும் க்ருதி இது.

34. உபசாரமு ஜேஸேவாரு. ஸ்ரீராமா, உன்னை உபசரித்துத் தொண்டு செய்பவர்கள் இருக்கின்றார்களென்று என்னை மறவாதே. உன் கிருபையைக்கோரி உன் புகழ் பேசிக்கொண்டிருக்கிறேன். வாயிலில் நின்று ஹனுமான் ஜா க்கிரதையாகப் பாதுகாக்கிறாரென்றும், உனது தம்பிமார்கள் சுற்றிலும் நின்று வருகிறார்களென்றும், தனித்திருக்கையில் பிராட்டி யுண்டு என்றும், இங்கிலையில் பிறர் எதற்கென்றும், எண்ணி, என்னை மறவாதே.

35. உபசாரமுலனு. கோடி மின்னல்களின் காந்தியையுடைய ஆடையுடன் பிரகாசிப்பவனே. எனது பூஜையைத் தயவுடன் அங்கீகரிப்பாய். (உனது தெய்வத் தன்மையை மறைத்து) வஞ்சகமாக நடத்தும் நாடகத்திற்கு ஸ⁻¹த்திரக் காரணயிருந்து, வேண்டுவன தந்தருளுபவனே. ஏராளமான நவரத்னங்களிழைத்த தங்கக்குடை உனக்கே தருமன்றோ? மின்னற் கொடியைப்போல ஒளி மிகும் உயர் மாற்றுத் தங்கப் பிடிகளுடன், சரத்கால சந்திரனைப்போல பிரகாசிக்கும் இரண்டு சாமரங்களும் உனக்கே தரும். ஜாதி மல்லிகை, சண்பகம், மருவு, குண்டு மல்லிகை, வெட்டி வேர், வாஸனை ஸாமான்கள், காந்தியுள்ள விசிறி, இவை யனைத்தும் உனக்கே தகுமய்யனே.

36. நம்மினவாரினி. உன்னை நம்பினோரை மறப்பது நியாயமா? மன்மதன் தந்தையே, நற்குணங்கள் நிறைந்தவனே. இளம் பிராய முதல், உன் சித்தப்படி நடந்து, எண்ணிக்கையிலடங்காத பணிவிடைகளை உனக்குச் செய்ய எண்ணி, உன்னைப் பூஜித்து, உன்னிடம் ஆசைமிகுந்து, உன்னை உள்ளத்தில் வைத்து, எவ்வளவோ உள்ளம் பூரித்துப் புகழ்ந்து, எவ்வளவு போகங்கள் அனுபவிக்கையிலும் புத்தியை உன்னிடமே செலுத்தி, — இவ்விதமாக உன்னை நம்பினோரை மறத்தல் நியாயமா?

37. ரக்ஷபெட்டரே. மார்பில் லக்ஷ்மியுடன் (ஹ்ருதயத்தில் அமர்ந்த) விளங்கும் பரம புருஷனை ஸ்ரீராமனுக்கு வெற்றியை முன்னிட்டு திருஷ்டி கழித்து ரக்ஷை கட்டுவோமே. ஸீதா தேவியின் கைபிடித்து மணக் கோலத்துடன் காட்சியளிக்கும் துரை, ஆஞ்சனேயருடைய பக்தியில் ஈடுபட்டு அவருக்கு வசமான துரை, இந்திரன் முதலிட்டவர்களைக் காக்க க்ஷத்ரிய குலதிலகமா யவதரித்த துரை, ஸங்கீதத்தில் அளவிறந்த அன்புகொண்ட நான் துதிபாடும் துரை — இத்தகைய மேன்மை வாய்ந்த உத்தமனுக்கு மங்கள முண்டாகும்படி ரக்ஷை கட்டுவோம். கருடாரூடனைக் காட்சியளித்த எம்பெருமானுக்கும் பல்லாண்டு கூறிய ஆழ்வாரின் உள்ளப் பெருக்கே ஸ்வாமிகளின் அனுபவ விசேஷம்.

38. லலிதே ஸ்ரீப்ரவ்ருத்தே: லலிதாம்பிகையே, ப்ரவ்ருத்த ஸ்ரீமதி என்றழைக்கப்பட்டு, அழகும் அறிவும் நிதியெனப்படைத்து, தபஸ்தீர்த்த நகரம் என்ற லால்குடி க்ஷேத்திரத்தில் விளங்குபவளே. நான் அறியாப் பாலகனன்றோ? அறிவாவது உனது செல்வமன்றோ? பிடிவாதம் உனக்குத் தகுமா? இனிய மொழி பகர்வாய். என்னைக் காப்பவர் உலகில் இல்லை யென்பதைக் கண்டும் காணாததுபோல் இந்தப் பராமுகமா? இங்குள்ளவர்களை வேண்டி நிற்கவில்லை. நீயே கதி என்று உனக்கு ஆட்பட்டேன். என் மனத்தில் கோயில் கொண்டவளே. உனது ஸகோதரனை ராமபிரானின் அருளுக்கு நான் பாத்திரனாவேன். உன்னையே உறுதியாகச் சரண் புகுந்தேன், அன்னையே.

39. நீகே தெலியக போதே. உலகத்தைத் தாங்கும் உனக்கு என்னுள் கொழுந்து விட்டெரியும் துக்கம் தெரியாமற் போனால் நான் என்ன செய்வேன்? எங்கெங்கே பார்த்தாலும், எப்புறம் பேசினாலும், எங்கெங்கே பூஜை செய்தாலும், அங்கங்கே உன்னையே காண்கிறேன். உனது

மலர்த்தாளடி பணிந்து உன்னையே தியானித்திருப்ப தெதற்கு?

40. சேர ராவ தேமி. என்னிடம் வாராததேன், என் ஐயனே? இனி இந்த உதாஸீனம் தகாது. தாய்தந்தையரில்லாமல் நாயகனையே தொடர்ந்த பெண்போல பன்முறை வேண்டியும் காவாயா? உன்னிடம் அன்பு மிகுந்து, உன் திருமுகத்தை தியானித்து உள்ளுருகி நிற்பதைக்கண்டும் நீ என்னிடம் வாராததேன்?

41. நீதய கல்குடே. உனதருள் பெறுவதே பாக்கியமென்று உண்மையாகத்தோன்றுததேன்? ஸூரியகுலத்திற்கு அணிகலம் போன்றவனே, அறிவில்லாத மனைவி மக்களுடன் நாள்தோறும் உழன்று, ஸம்ஸார ஸாகரத்தை நீந்திக்கடக்க இயலாது, பயத்தினால் கைசோர்வடைந்து, புவியரசர்களை நாடி அலுப்புற்று, இன்பமென்பதறியாது, உனது பற்பல மாயைகளில் அகப்பட்டுத் துயருறுகிறவனுக்கு இந்தத் தொல்லைகளெல்லாம் நன்கு தெரிந்தும், உனது தயை பெறுவதே பாக்கியமென்பது தோன்றுததேன்? ஊணுறக்கமின்றி, கஞ்சர்களைச் சூழ்ந்து, தனது எண்ணம் நிறைவேறாமல் சோர்வடைந்து உடல் நலிந்து, போக பாக்யங்களை முன்னிட்டுப் பல தெய்வங்களையும் பெரியோரையும் தேடியலைந்து, வகையறியாமல், உலக வாழ்வின் இன்பம் இத்தகையதென்று அறிந்தும், உனது கிருபை பெறுவதே பேறென்று தோன்றுததேன்? அனுபல்லவியும் கடைசிச் சரணமும் விசதமான ஸம்போதனங்களடங்கியவை.

42. படலிக தீர. களைப்புத் தீரும்படி பள்ளியமர்வாய். எல்லையற்ற இன்னல்களனைத்தையும் வேருடன் களைந்தாயன்றோ? பிரம்மாவின் துயரங்கண்டு, ஸூரியகுல மன்னனாயவதரித்து, ஸீதாதேவியுடன் கானகஞ்சென்று, மாயமானைக் கொன்று, ராவணனுடைய கொட்டத்தை அடக்கி, பொன்னிலங்கையை விபீஷணனுக்கீந்து, நல்லோரைக் காத்து-இப்படிப் பல கஷ்டமான காரியங்களைச் சாதித்து, அதனாலேற்பட்ட களைப்பு நீங்கும்படி, என் இருதயத்தில் வந்து அமர்வாயாக.

43. ரகுனந்தன. பார்வதி, ஆஞ்சனேயர், நாரதமுனிவர் முதலியோருடைய உள்ளமான தாமரைத் தண்டில் வசிப்பவனாயினும், என்னுடைய மனதில் வந்திருந்து களிப்பாய். உன்னை உள்ளத்திருத்தி அன்புடன் தியானிக்கும் நல்ல பக்தர்கள் உத்தமரிலும் உத்தமராவர் என்று நான் நினைத்துப் பூஜிக்கவில்லையா? என் தத்தளிப்பைத் தீர்க்க நீயே ஸாதனம். இனிச்சகியேன்.

44. ஸாமஜ வரகமன. மத்தகஜம் போன்ற நடையுடையவனே, நல்லோரின் மனமாகிற தாமரையை மலரச் செய்யும் ஸூரியன் போன்றவனே, அழியாத புகழ்படைத்தவனே, ஸாமவேதத்தினின்றும் உண்டான அம்ருதமயமான ஸங்கீதத்தில் மேன்மையான பாண்டித்தியம் பெற்றவனே, நற்குணங்கள் பொருந்தியவனே, கிருபைக்குப் பாத்திரம் போன்றவனே, என்னைக்காப்பாய். உபனிஷத்துகளுக்குத் தாயான ஓங்காரத்தினின்றும் எழுந்த ஸப்த ஸ்வரங்களின் இன்னிசையாகிற மலைமீது விளங்கும் தீபம்போன்றவனே, யாதவகுல ரக்ஷகனே, புல்லாங்குழலின் மதுர கீதத்தில் பிரியமுடையவனே.

45. ராரா ஸீதாரமணி மனோஹர. ஸீதாதேவியின் உள்ளத்தைக் கவர்ந்தவனே, எதிரில் வந்து ஒரு முத்தந் தருவாய். பொன்மயமான ஆடையை உனக்குச் சுற்றி, உன்னை நன்றாக அலங்கரித்து, உன் நெற்றியில் கஸ்தூரி திலகமிட்டு, உயர்ந்த முத்துமாலைகளைச் சூட்டி, உன் துதிபாடி மகிழ்வேன். உன்மீது அன்பு கொள்ளுவதே யோகமாகும்.

46. இன்னாள்ளு. இதுகாறும் என்னைக் காத்துவந்தும் இந்தக் கேலி ஏன்! என்னைத் திடமாகக் காப்பாய். அறியாப்

பாலகனுன என் பரிதாப நிலையைக் கண்டு, "பொறுத்துக் கொள்", என்று எனக்குத் தைரியம் சொல்லி, என் துயரம் தீர உனது லீலா விநோதங்களைத் தெரியப்படுத்தி வந்த உனக்கு இந்தச் சித்தம் என்று கடைக்கண் ஜாடையினுல் காண்பித்து என்னைக் கேலி பண்ணுவதேன்? போகுமிடந்தோறும் என்னைப் பின்தொடர்வேனென்று முன்பு என்னிடம் சொல்லியிருக்க, இப்பொழுது எங்கு சென்றாய்? ஸௌந்தரியம், ஸத்தியம், இவை வாய்ந்தமை பற்றி அனைவரையும் போல என்னையும் ஆதரிப்பாய். சொன்ன சொல் தவருமல் ஆபத்தில் உதவும் உறவினன் நீயே யன்றே? ஜாடைமாடையாக நான் உன்னை வேண்டவில்லையே. ஒப்பற்ற துணை உன்னையல்லால் எவருளர்? ஒவ்வோருருவங் கொண்டு ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்றவைகளை நடத்துபவனே, என்னிடம் உனக்கு இரக்கம் சிறிதுமில்லையா?

47. காரவிம்ப ராதா. என்னைப் பெருமைப்படுத்தி என்னருகில் வரக்கூடாதா? என்மேல் வர்மமா? வரதனுகிய உனக்கு என்னிடம் பெயருக்கேனும் இரக்கமில்லையா? என்னிடம் வரமாட்டாயா? உன்னை யொத்தவர்கள் உன்னிடம் என்னைக் குறித்துப் பேசவில்லையா? அதைக் கேட்டும் கருணை வராதா? பதில் கூடப் பேசாயா? மும்முறையும் உன்னை நம்பவில்லையா? பாலகனுடைய மொழிகள் பெற்றேருக்கு விளையாட்டன்றே? நான் உன் புகழ் பாடுவதைக் கேட்டு உனதழகிய வாய்திறந்து என்னவென்று உரையாமல் வாளாவிருக்கிருயே. விலைமாதரின் அழகு எத்தகையதேனும் குணவதியான பத்தினியை விட்டகலார் நல்லோர். உனக்கு ஏனிந்தப் பராக்கு?

48. தலசினந்தனே. உன்னை நினைத்தவுடனே எனது மெய் சிலிர்த்தது. (தாமரையின் விரோதியான சந்திரனைச் சிரத்திலணியும்) சிவனுர், ப்ரஹ்மா முதலியோரன்புடன் செய்யும் பூஜைகளை ஏற்ற உன்னை நான் தியானித்த க்ஷணமேபுளகாங்கிதனுனேன். உன்னை உரலோடு கட்டும் லீலைகள், த்ரிகுணுதீதமான உன் மகிமை, கோடி மன்மதர்களின் ஸௌதரியத்தையும் ஈடற்றதாகச் செய்யும் உன் தெய்வத்தன்மை வாய்ந்த பேரழகு, வாழ்வின் துயரத்தைத் தீர்க்கும் உன் சக்தி தேவர் போற்றும் உன் வரலாறு, வேதங்களின் ஸாரமாக விளங்கும் உன் பெயர், இவற்றைச் சிந்தித்தபொழுதே மெய் சிலிர்த்தேன். அனிலஜஸுலப, பாத விஜித முனி தருணிசாப தாஜாநாத-முதலியவை லலிதமான ஸம்போதனங்கள்.

49. ஸங்கீத சாஸ்த்ர. மனமே, ஸங்கீத சாஸ்திரத்தில் ஏற்படும் நுண்ணறிவு ஸாரூப்யமென்ற மேலான பதவியைத் தரவல்லது. ச்ருங்காரம் முதலிய ஸகல ரஸங்களுடைய ஸாரமும் நிறைந்த ராமபிரானின் சுபசரிதமாகிற ஆனந்தக் கடலோடு கூடின ஸங்கீத சாஸ்திரஞானம், அன்பு, பக்தி, நல்லோரிடம் பற்றுதல், லக்ஷ்மிகடாக்ஷம், தமசமாதி குணங்கள் நிறைந்த உயர்நெறி, புகழ், பொருள் இவையனைத்தையும் தரும்.

50. க்ஷீணமை திருக. மனமே, ஒவ்வொரு பிறவியிலும் சேகரித்த நற்பயனெல்லாம் அழிந்து, மறுபடியும் ஜன்மமெடுக்கும்படி செய்யும் விதிகளைத் தேடித்திரியாமல் தவிர்ப்பாயாக. ஸம்ஸ்க்ருதத்திலுள்ள நாடக, அலங்கார, வேத, புராண நூல்களின் அறிவு, யாகம், ஜபதபங்கள் முதலிய நற்கருமங்களைச் செய்தல், இவற்றின் பயன் யாவும் பிறவியுடன் அகலும். ஜகமுழுவதற்கும் நாயகனுக விளங்கும் ஸ்ரீ ராமனைத் தியானித்து வழிபடு. எத்துணை தாழ்ந்த அர்ப்பணத்தையும் இறைவன் தலையினுல் தாங்குவதுபோல் அன்புடன் ஏற்றுத் தன் திருவுள்ளத்தில் வைத்து, நிச்சயமான நல்ல பதவியைத் தருவான்.

51. எந்த நேர்சின. கற்றதும் கண்டறிந்ததும் எவ்வளவாயினும், எவ்வளவு பெரியவராயினும், மாதருக்கடிமைகளா

கின்றனரே. கடவுளின் சித்தத்திற்குகந்தது ஸனாதனமான தர்மமார்க்கம். இதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், பிறரை ஹிம்ஸித்து, பிறர் மனையாளையும் பொருளையும் அடைய முயன்று, பிறர்மீது வீண்பழி சுமர்த்தி, அவரது ஜீவனத்தை யிகழ்ந்து பொய்பேசி இவ்விதம் உழலுபவர்கள் கற்றதும் கண்டதும் பயனென்ன?

52. கனுலுதாகனி. மனமோஹன, ஆனந்தகன, சகோர நயன, குந்தரதன, சந்த்ரவதன, ஸௌந்தராங்க, என்றெல்லாம் வர்ணிக்கும்படியான திருமேனியுடன் விளங்குபவனே, உன்னைக் காணப்பெறாத அன்னிய மங்கையரின் உள்ளம் எத்தகையதோ? கண்டு உன் வசப்பட்ட பெண்டிர்மீது குற்றம் சொல்லுவது எப்படித்தகும்? பயங்கரமான பூதகணங்களின் தலைவனான ருத்ரமூர்த்தியைப் பிக்ஷாடன உருவத்தில் கண்ட தாருகாவன ரிஷிபத்தினிகள் மோஹவலையி லகப்பட்டுப் புவியில் அனைவருக்கும் வீண்பழியை உண்டாக்கினரே.

53. நாதலோலுடை. மனமே, அழிவற்ற பேரின்பத்தைத் தருவதும் ஸப்த ஸ்வரங்களால் சித்தரிக்கப்படும் ராகங்கள் அடங்கியதுமான நாத வித்தையில் ஈடுபட்டு ப்ரம்மானந்தமடைவாய். விஷ்ணு, பரமசிவன், ப்ரம்மா, இந்திரன், குமரக் கடவுள், விநாயகர், முனிசிரேஷ்டர்கள் முதலியோர் இந்த நாதோபாஸனையையே கொண்டாடுகின்றனரே.

54. எடி யோசனலு. என்ன யோசனைகள் செய்கின்றாய்! (உன்னை) எதிர்த்துப் பேசுவார் எவருமில்லையே. வாய்மொழி தவறலாகாது. கோடிக்கணக்கான தெய்வங்களில் நீ சிறந்தவனாவாய். சௌரியம் மிகுந்தவர்களுக்குள் நீ பின் வாங்காதவனென்றும், இரண்டு விதமாகப் பேசுபவன் அல்லவென்றும், அனைத்தையும் காப்பவனென்றும், நாரதர், வஸிஷ்டர், வாமதேவர், அகஸ்தியர், வால்மீகி, முதலிய தபஸிகள் உன்னைப் போற்றித் துதிக்க, என் விஷயமாக மட்டும் என்ன யோசனைகள் செய்து தயங்குகிறாய்? பரமாத்மாவின் குக்ஷியில் மார்க்கண்டேயர் கண்ட காட்சி, கீதாசாரியன் அர்ஜுனனுக்குத் தெரிவித்த விசுவரூபம், கண்ணன் கனிவாய் திறந்ததும் அதனுள் யசோதை கண்ட உண்மை, முதலிய பல புராண கட்டங்களை ஸ்வாமிகள் பலகாலும் சிந்தித்து, லோகநாதனுடைய மாட்சிமையை "ப்ரோவபாரமா", 'எடியோசனலு'', "நீவண்டி தைவமு,'' முதலிய பல க்ருதிகளில் குறிப்பிடுகிறார்.

55. பராகுநீகேலரா. உனக்கேனிந்தப் பராமுகம்? சராசரங்கள் அனைத்திலும் விளங்குகிற பரம்பொருளாகிய நீ என் விஷயமாக மாத்திரம் ஏன் இந்தப் பராக்குடனிருக்கிறாய்? சபரியைப் போல உண்டு மிகுந்ததை உனக்கென வைத்தேனா? குஹனைப்போலச் சருகுகளைப் பரப்பி அதன்மீது உறங்கும்படி சொன்னேனா? என்மீது ஏனிந்தப் பராக்கு?

56. பக்கல நிலபடி. சந்திரனைப் பழிக்கும் முகத்துடன் விளங்கும் ஸீதாப் பிராட்டியும், லக்ஷ்மணனும் உன்னிரு பக்கங்களில் நின்று உனக்குத் தொண்டு புரியும் அழகிய காட்சியை மனமிரங்கி எனக்குத் தெரியப்படுத்தலாகாதா? தலைவணங்கிக் கரங்குவித்து, உடல் முழுதும் தரையில்பட உனக்குத் தெண்டனிட்டு, நாவினால்பாடி மனத்தினால் சிந்தித்து மெய் மறந்திருக்கிறேன்.

57. மித்ரி பாக்யமே. அழகிய ரத்தினங்களிழைத்த ஆதிசேஷனென்ற படுக்கையின்மீது ஸீதாகாந்தனைப் பள்ளியமரச் செய்து டோலை ஸேவிக்கும் லக்ஷ்மணனுடைய பாக்கியமே பாக்கிய மெனத்தகும். ("தம் மன்யே ராகவம் தைவம் நாராயணம் அனாமயம்'' என்ற ராவணனுடைய வாக்குமூலமும், லக்ஷ்மணனாக அவதரித்த ஆதிசேஷனே ஸ்ரீராமனை சேஷதல்பத்தில் அமர்த்தி ஸேவிக்கிறபடி, ஸ்வாமிகளின் அனுபவ ஸாரமான பரத்துவ விளக்கமும் புலனாகின்றன.) தும்புரு நாரதர் முதலியோரும், பக்த கோஷ்டிகளும் மனோரம்யமான

பல ராகங்களை ஆலாபனை செய்கையில், அதைச் செவியுற்று, மெய்சிலிர்த்து, அந்த நாதமே கோதண்டதரனாக அவதரித்த தத்துவத்தின் ரகசியத்தை உணர்ந்த லக்ஷ்மணன், ராம பிரானைப் பாடித் துதித்து மஞ்சத்தை ஆட்டி ஸேவை புரியும் பாக்கியமன்றோ பாக்கியம்!

58. ராம நீஸமான மெவரு. மருக்கொழுந்தைப் போன்ற எழில்நிறையும் ஸீதா தேவியின் பக்தி யென்ற கூட்டில் வளரும் பைங்கிளியான ராகவனே, உனக்கு நிகரெவருளர்? தித்திக்கும் தேன் மொழி பகரும் தம்பிமாருடன் என் குல தெய்வமா யவதரித்த இன்சொல் வள்ளலே, உனக்கு நிகராவா ரெவர்?

59. புவினிதாஸுடனே. உனதடியானென்று பாசாங்கு செய்து, பேராசையினால் தூண்டப்பட்டு, பொய்பேசி, அறிவிலிகளை வேண்டித் திரிந்து, நெறி தவறிப் பிழைக்க முயன்றேனோ? ஸுகம், கஷ்டம், எதுவரினும் மனம் சலித்தேனோ? பிறர் முன்னிலையில் என்னைப் பாலில் அமிழ்த்தினாலும், நீரில் அமிழ்த்தினாலும், உனது பாதமே எனக்குக் கதி. வழக்கத்திலிருந்த பழமொழிகள் அனேகம் ஸ்வாமிகளின் ஸாஹித்யத்தில் இடம் பெற்றதை அங்கங்கே காணலாம். "பாலமுஞ்சின நீடமுஞ்சின" என்பது அவற்றிலொன்று.

60. ஸோகஸுகா. ம்ருதங்கம், தாளத்திற்கேற்ற ஸுநாதமான ஜாலர் போன்ற இசைக் கருவி, முதலியவைகளை நன்றாக் ஜதைசேர்த்து அதன் மூலம் ஏற்படும் ஸங்கீதத்தில் நீ மயங்கும்படி செய்கிற வல்லான் எவனோ? வேதங்களுக்குச் சிரமாக விளங்கும் உபனிஷத்துகளின் கருத்தை யொட்டி, பரப்ருஹ்ம ஸ்வரூபத்தை விளக்கிப் போற்றும் வகையில், உண்மை ஒலிக்கும் வாக்விசேஷங்களுடனும், ச்ருதிலயப் பொருத்தமான ஸுஸ்வர மார்க்கம் தவறாமலும், இலக்கண முறை குன்றாமலும், உத்தமமான பக்தி மிகுந்தும், திராக்ஷா பாகமாக எளிதில் இன்ப மூட்டும் தன்மையதாய், ச்ருங்காரம் முதலிய நவரஸங்களும் பொருந்தி, இயற்றப்பட்ட க்ருதிகளின் மூலம் உன்னைப் பூஜித்து ஈடேறும் வழி எனக்கு ஸாத்தியமா?

61. நீபக்தி பாக்ய ஸுதாநிதி. தேவர்களாகவும், உயர் குலத்தோராகவும் பிறந்தும், உன்னிடம் ஊறிய பக்தி என்ற ஆனந்த மயமான அம்ருதக் கடலில் எப்பொழுதும் நீந்தி அனுபவிக்காத பிறவி யாருக்குச் சுமையே. நாத உருவே, வேதங்களில் காணும் கர்மங்களினால் நானாவிதக் கஷ்டங்கள் நேருகின்றன. கர்மகாண்டத்தைப் பின்பற்றிய ஒழுக்கம் மாறிமாறிப் பிறக்கும்படி செய்யும். உன்னிடம் கொண்ட பக்தியோ பிறப்பை யொழித்து முக்தியளிக்கும். "த்யாகராஜ நாத" என்ற பதம் இந்த க்ருதியிலும், "ஸீதாநாத" என்பது "ஸ்ரீரகுவராப்ரமேய" என்ற க்ருதியிலும் அபூர்வமாகக் காணப்படுகின்றன,

62. எவருன்னாரு. ஜகதீசனான பஞ்நதீசனே, என்னைக் காக்க எவருளர்? இவ்வளவு தாமதமேனையா? விளங்கத் தெரிவிப்பாய். உன்னை மனமாரத் தியானிக்கும் வண்ணம், என் மனம் சலியாது நிலைத்திருக்கும் ரகசியத்தைத் தெரிவிப்பாய். நான் உன்னைச் சேர்ந்தவன் என்பதை மதித்துத் திடசித்தத்தை எனக்களிப்பாய்.

63. ஏதி நீ பாஹுபல. உனது புஜபல பராக்கிரமம் எங்கே? அதை வெளிக்காட்டியது எப்போதைக் கெப்போது? உனது மெய்யடியார்க்குக் காண ஆவல் பிறந்துளதே. உனது கைகளேந்திய கோதண்டமும் அம்புகளும் பசி கொள்ள வில்லையா? அவை குருதி யருந்திப் பல நாட்களாகவில்லையா? நல்லோர் படுந்துயர் கேட்டு உனக்கு ஆத்திரம் எழவில்லையா? உனதடியார் முறையிடுகையில், உன் யோகநித்திரையை நீத்து உன் திருமுகத்தைக் காண்பிக்கலாதா? கடையவர்களுக்கு மதி மேன்மேலும் கேடடைந்து வருவதை நீ அறியாயோ?

அச்சமின்றித் திரியும் அன்னாரை அடக்குவாய். இந்தப் பராமுகம் போதும்.

64. நித்யரூப. என்றும் அழியாமல் இருந்து வரும் மூலப் பொருளே, எவருடைய பாண்டித்தியம் எதை நடத்த வல்லது? என்றும் மாறாது நிலைத்திருப்பதான உனதாக்ஞையை மீறத் திறமையுண்டா? இராப்பகலாக ஸூரியன் பொன்மயமான மேரு மலையைச் சுற்றவில்லையா? அளவிடக் கூடாத பாரந்தாங்கும் பூமியைச் சேஷன் சுமக்காமல் முடியுமா? காசிபதியான பரமேசுவரன் அங்குள்ள பக்தர்களுக்குக் காதில் ராம தாரக மந்த்ரத்தை உபதேசிக்காமலிருக்க முடியுமா? உன்னைத்தவிர எவருடைய திறமை போற்றத் தகும்? ஸகல அருமை பெருமைகளுக்கும் உறைவிடமான உனக்கு முன் எவருடைய ஸாமர்த்தியம் நிற்கும்? ராமபிரானே முழுமுதற் பொருளான பரதெய்வம் என்பதை விளக்கும் க்ருதிகளில் இது ஒன்று.

65. ராம ரகுகுல ஜலநிதி ஸோம. ப்ராஹ்மாவுக்கும் உன் மகிமைகளை அறிய முடியுமா? விபீஷணன் உன்னைத் தஞ்சமென்ற க்ஷணமே, அவன், தேவர், முனிவர், மனிதர், அனைவருக்கும் பரம விரோதியான தசமுகனின் தம்பியாயிற்றே என்று சிறிதும் எண்ணாமல், உன் மரபின் பெருமையைப் பாராட்டி, அவனை இலங்கை அரசனாகப் பட்டாபிஷேகம் செய்தாயன்றோ? பார்வதி, பரமசிவன், சத்துருக்னன், லக்ஷ்மணன், ஜானகி, ஆஞ்சனேயர், ஸுக்ரீவன், விபீஷணன், பரதன், ஆகிய ஒன்பது பெயர்களும் உன்னுடைய நிஜஸ்வரூப மறியாமல் உன்னை வேண்டவும், நீ அவர்களுக்கு ஞானக்கண்ணளித்தாயன்றோ? கலியுகத்திலகப்பட்ட மனிதர்கள் நற்கதியடைய, நெற்றிக்கண் படைத்த பரமசிவன் அவர்களுடைய காதுகளில் ஸ்ரீராம தாரகமந்த்ரத்தை உபதேசிக்கும்படி செய்தாயன்றோ? இப்படிப்பட்ட உன் பெருமையை அறிவது இயலுமா? காசிக்ஷேத்திரத்தில் இறப்பவர்களுடைய காதுகளில் பரமசிவன் ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை உபதேசிப்பதாகவும், அப்பொழுது இறந்தவர்களுடைய காது மடல்களும் விரிந்து மந்த்ரத்தைச் செவிமடுக்கிற பாவனை நன்கு விளங்கும் மென்பதும் நம்பிக்கை.

முகஜித ஸுதாகர, ஸுரபூஜிதபத, ஜலஜாருண சரண, அஸுரஜலதாசுக முதலியவை அழகிய ஸம்போதனங்கள்.

66. முந்துவெனுக. முன்னும் பின்னும் இருபக்கமும் துணையாகவாராய். உனது அழகை வேறெங்கும் காணேன். மாட்சிமை மிகுந்த ஸூரியகுலமான ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்றவனே, கோதண்டந்தாங்கிய திருக்கரத்துடன், அருகேயிருந்து தொண்டுபுரியும் லக்ஷ்மணனுடன், வந்து செவ்வனே ரட்சிப்பாய். ஓங்காரஸ்தன, முரகரஹர, கஜரக்ஷக முதலியவை ஸ்பஷ்டமான ஸம்போதனங்களே.

67. யோசன. என்னைக் காத்தருள இன்னும் யோசனையா? (த்யுதி விஜித விரோசன) கணக்கற்ற ஸூரியர்களின் காந்தியையும் வெல்லக்கூடிய தேஜோமயமான அப்ராக்ருத திவ்யமங்கள ரூபமுள்ளவனே, ரகசியமறியாமல், உன்னையல்லால் மற்றொருவரை இரப்பேனென்று உனக்குத் தோன்றியதா? உன் விமரிசைகளெல்லாம் என்னை ஏமாற்றுவதற்காகவா? வனஸஞ்சாரியான ஸுக்ரீவனுக்குப் பட்டம் சூட்டி, பக்தர்கள் புடைசூழ, ஸகல துரிதங்களையும் போக்குபவனாக விளங்கும் நீ என்னைக் காக்கத் தயங்குவதா?

68. ராமாபிராம. மனதை இன்புறச் செய்யும் தாரக நாமம் படைத்தவனே, கஜேந்திரனின் விரோதியான முதலையை அழித்தவனே, அயோத்தியை உறைவிடமாகக் கொண்டவனே, உன்னால் நான் மனச்சோர்வுற்றேன். உன் மனதில் இரக்கம் பிறக்கவில்லை. மன்றாடிப் பலனென்ன? என் மனமென்ற நங்கை உன்மீது காதல்கொண்டாள். எனி

னும், நீ அவளைக் கைப்பிடித்து அவள் முறை கேட்டு, அவளைக் காப்பதில்லை. வேண்டி வேண்டி உன்னையண்டி நிற்கையில், உன்னோக்கம் வேறுபட்டுள்ளது. பிரம்மாவின் எழுத்து எதுவோ? அழகிய மஞ்சத்தை உன்பொருட்டுத் தயாரித்தேன். கூடி இன்புறாமல் தொந்தரவு செய்கிறாய். நீயே கதி என்று நான் நம்பியிருக்கையில் மேலும் கீழும் பார்ப்பதேன்? உனக்கே தயை பிறந்து என்னைக் காத்தல் வேண்டும்.

69. தயலேனி. உன் தயை பெறாத பிழைப்பு என்ன பயன் பெற்றதாகும்? நூறு வயது வாழ்ந்தும், தரணியெலாம் கட்டி ஆண்டும், உன் தயை யொழிந்த ஜீவனம் எதற்கு? பூஜை, ஜபம் முதலியவை நடத்தும் வேளையில் அன்புடன் என் முன் விளங்கி, (அர்ஜுனனுக்குக் கீதாசாரியன் செய்தது போல) உலக ரகசியங்களைத் தெரியப்படுத்தி, மனதைத் தெளியவைத்தனையே. நீடூழிகாலம் அரசுசெலுத்திய தசரதர் ராமானுக்ரஹம் பெறாது உயிர் நீத்ததையும், கைகேயி அபகரித்துக் கொடுத்த ராஜ்ஜியத்தை பரதாழ்வான் ஏற்க மறுத்துப் பாதுகையைச் சிரமேந்தி ராமன் வருவதை நோக்கி நந்திக்கிராமத்தில் எளிய வாழ்வு மேற்கொண்டதையும் சிந்தித்து, ஸ்வாமிகள் இந்த க்ருதியைச் செய்தருளினார் என்பது ரஸமான கற்பனை.

70. நீபஜனகான. பரமசிவன், பிரம்மா, தேவேந்திரன், முதலியோர் வணங்கும் பரதெய்வமே, உன்னை பஜித்து, உன் துதியே பாடி, இன்புறும் ரஸிகர்களான அடியார்களைப் புவியெங்கும் கண்டிலேன். ஸகுணம், நிர்குணம், ஆறுசமயங்கள், அணிமாதி ஸித்திகள், இவைகளின் உண்மையை நீ எனக்கு விளக்கவும், நான் அறிந்து தெளிந்தேன். ஆயினும் இந்த அறிவு பயன்தர நல்லோரிணக்கம் தேவையன்றோ?

71. ஸனாதன. அநாதியாக இருந்து வருபவனே, நீல மேகம் போன்ற சரீரமுடையவனே, நான் உன்னைச் சேர்ந்தவனென்ற அபிமானம் தெய்வமான உனக்கு உண்டாகாததேனோ? வாழையடி வாழையாகச் சக்கரவர்த்திகள் உதித்த ஸூரிய குலமான ஸமுத்திரத்திற்குச் சந்திரன் போன்ற நீ என்னைக் கருணையுடன் கண்ணெடுத்துப் பாராயோ?

72. கமலாப்தகுல. தாமரைக்கு மித்திரனான ஸூரியனின் குலமாகிற பாற்கடலுக்குச் சந்திரனை யொத்தவனே, என்னைக் காப்பாய். முன் உனதடியார்களைக் காப்பாற்றின தனைத்தையும் வெகுவாகக் கேழ்வியுற்று உனது பாதங்களைப் பற்றியவனானேன். என்மீதிரங்கி எனக்கு அபயமளிப்பாய். பல்லவியும் அநுபல்லவியும் அழகிய ஸம்போதனங்களடங்கியவை.

73. நாடிமாட. அன்றைய வார்த்தையை மறந்தாயோ? எனது வாலிபத்தில் ஒரு ஸமயம், பெண்களின் அழகிய நர்ட்டியத்தைப் பார்த்துக்கொண்டு கொலு வீற்றிருந்த நீ, நான் உனது பாதங்களையே தரிசித்துக்கொண்டிருந்ததைக் கண்ணுற்று, என்னை மறைக்கும் பரதாழ்வானின் கைச்சாமரத்தையும் நிறுத்தி, "இந்த பாக்கியமெல்லாம் உன்னுடையதாயிருக்கையில், ஏனிந்தக் கவலை? உனக்கு ஸகலத்தையும் கொடுப்பவன் நானே," என்று பரிவுடன் மொழிந்ததை மறந்தாயோ? ஸ்வாமிகள் ராமபிரானை நேரில் ஸேவித்து,பலவகையில் அவனது விபூதிகளை அநுபவித்த ரகசியங்கள் அடங்கிய க்ருதிகளில் இது ஒன்று. பட்டி விடுவராது, ஆதய ஸ்ரீரகுவர, ஸௌமித்ரி பாக்யமே, பலுகு கண்ட சக்கரெனு, சின்ன நாடே, ராமாபிராம, பரிதாபமுகனி, தயலேனிப்ராதுகு, கொலுவையுன்னாடே (தேவகாந்தாரி), முதலியவை இந்த வகுப்பைச் சேர்ந்தவை.

74. ராகஸுதாரஸ. மனமே, ராகமென்ற அம்ருத ரஸத்தைப் பருகித் தெளிவுறுவாய். பலவிதமான கஷ்டங்களுக்கிடந்தரும் யாகம், யோகம், இவற்றை மேற்கொண்டு

அடையும் ஸித்திகளை எளிதில் தரவல்லதான நாதோபாஸனை செய். ஆத்மாவிடமிருந்து பிறந்து, நாதத்தையே உடலாகக் கொண்டு, ஓங்காரமாகப் பரிணமித்து, ஸப்த ஸ்வரங்களால் அலங்கரிக்கப்படும் கானமே ஸதா சிவாகாரமாயுள்ளது என்ற உண்மையை அறிந்தவர்கள் ஜீவன் முக்தர்கள் என்பதை நான் அறிவேன். நாதவித்தையின் உயர்வை விளக்கும் க்ருதிகளில் இது ஒன்று. உ. ம் :—மோக்ஷமுகலதா, வீதாவர, விதுலகு, வராகலயக்ஞுலு, ஸ்வரராகஸுதா, நாதஸுதா.

75. பட்டிவிடுவராது. என்னைக் கைப்பிடித்துக் கரை சேர்ப்பாய். நான் பிறந்த அன்றே எனக்கு உன்னிடம் உண்மையான பக்தியைக் கழுத்தில் கட்டுவதுபோல உறுதியாக அனுக்ரகித்து, என் கௌரவம் கெடாமல் என்னைக் காத்து, அழியுந்தன்மை யுடையது, அழியாமல் என்றென்றுமிருப்பது, இவற்றை எனக்குப் போதித்து, செய்யத் தகுந்தவை, தகாதவை என்ற பகுத்தறிவையும் புகட்டி, தனித்த முழுமுதற்பொருள் நீயே என்பதைச் சுட்டிக்காட்டி, உனதடியாளுகிய என் கையைப்பிடித்து நழுவவிடாமல் காப்பாய்.

76. வரதராஜ. வரதராஜனே, உன்னைத் தரிசிக்க வந்து வணங்குகிறேன். தேவர், முனிவர், புவியில் நல்லோர், முதலியவர்கள் உன்னைச் சூழ்ந்து வலம் வந்து உன் அர்ச்சையின் முன்னழகையும் பின்னழகையும் கண்டு உள்ளம் பூரித்துத் தரிசிக்கிறார்கள். நீ வீற்றிருக்கும் ஹஸ்திகிரியே வைகுண்டமென்பர். அதை வர்ணிக்கவும் முடியாதென்பர். நீ தேவர் கணங்களாகிற நக்ஷத்திரக் கூட்டங்களின் மத்தியில் பிரகாசிக்கும் ராமச்சந்திரனன்றோ? (தாரகலலோ) தேவர்களுடைய கண்களின் கருவிழிகளில் பிரகாசிக்கும் அம்புலி என்றும் ஒரு கற்பனையுண்டு. தண்டகாரண்ணியத்தில் முனிகளின் பர்ண சாலைகளை நோக்கி வரும் கோதண்டதாரனை ராமபிரானைச் சந்திரனுக்கு ஒப்பிட்டு, பார்ப்போர் மனதைக் குளிரச் செய்யும் தன்மை ராகவனுக்கிருந்ததையும் சுட்டிக் காண்பிப்பது வால்மீகி பகவானின் கவிநயம்.

77. அடிகிஸுகமு. ஜகத்காரணனாகவும், ஆதி புருஷனாகவும் உள்ளவனே, உன்னை வேண்டி எவர் நலம் பெற்றனர்? எல்லையற்று, இருள் மயமாகப் பரவிநிற்கும் பாபத்தைச் சிதறடிக்கும் கதிரவனைப்போன்றவனே, உன்னையே கதி என நம்பின ஸீதாதேவி கானகமடைந்து சொல்லொணுத்துயரனுபவிக்க நேரிட்டது. அரக்கி தன் விருப்பத்திற்கு இணங்கும்படி உன்னை வேண்ட, மூக்கிழந்து பரிதவித்தாள். உனது நிஜரூபமறிய வேண்டின நாரத முனியைப் பெண்ணாகவும், அறுபது குழந்தைகளுக்குத் தாயாகவும் செய்து அவஸ்தைக்குள்ளாக்கினாய். அக்ஞாதவாசம் செய்து வந்த பாண்டவர்களிடம் துர்வாசர் அன்னம் கேட்க, அவருடைய பசிமந்தப்படச் செய்தனையன்றோ? குழந்தையின் வேடிக்கை பார்த்து அகமகிழவேண்டுமென்று தேவகி கோரவும், யசோதை அந்தப் பாக்கியம் பெற்றனளே. கோபிமாரனைவரும் உன்னிடம் இச்சைகொண்டு உன்னைத் தொடர்ந்ததன் விளைவாகத் தத்தம் ஆடவரை விட்டு நீங்கியதல்லாமல் தம் ஆசையும் நிறைவேறாமல் காட்டில் மதிமயங்கித் துயருற்றனர். உனக்கே தயை பிறந்து என்னைக் காப்பாற்றுவாயோ, அல்லது மாட்டாயோ? உன் போக்கின் உண்மை வெளியாயிற்று. இஃதென்ன மாயமோ?

78. ராமஸமயமு. இது தருணம், ரக்ஷிப்பாய், என்னைக் காக்கும் தெய்வமே. எப்பொழுதும் மறவாமல் நியமத்துடன் உனது நாம ஸங்கீர்த்தனம் செய்யும் மஹாத்மாக்களுக்குக் கோரியதளித்து, ஜிதேந்திரியர்களான ஞானிகளை ஸம்ரக்ஷிப்பவனே, ஆகமங்களின் உட்கருத்தாக மறைந்திருப்பவனே, (அந்தக, அந்தக, ஹித) காலனை வென்ற பரமசிவனுக்கு நலம் செய்பவனே, அழிவில்லாதவனே, (யாந்த பாந்த நிசாந்த)

முக்காலங்களிலும் விளங்குபவனே, உனக்கு என்மீது ஏன் ஸந்தேகம்? இவ்வுலகில் வேறு நோக்கமில்லாமல் காப்பதையே உன் பாரமாகக் கொண்டவன் என்று உன்னை வழிபட்டேன். என் முறைகேட்டு என்னைக் காக்க இதுவே தருணம். தனுஜ கணபீம, நவகனச்சாயம, பாகவத அந்தரங்கசர, அந்தாஹித, ஸாமந்தராஜனுத, ஸத்பக்த ஜீவானந்தகர, அரிஹர, நந்தகாயுத, வரமந்தரதர, இபாராஜவந்தன, பூஜாநாயக, ஸூராஜ—இவை மனோஹரமான ஸம்போதனங்கள்.

79. விநாயகுனிவலே. விநாயகரைப் போலவே நீ எம்மை ரட்சிப்பாய். உன்னையல்லாமல் தெய்வமெது, அன்னையே? திக்கற்றவர்களை ரட்சிபவளும், நல்லோரின் துரிதங்களைப் போக்கடிப்பவளும், நலஞ் செய்பவளுமான தாயல்லவோ நீ? நல்லோர் தீயோர் அனைவருக்கும் கோருவதளிக்கும் வள்ளலாக நீ இருக்கையில், தேவர்களும் மனிதரும் இன்னலுறுவது தகாது. தயவுடன் கண்பாராய். ஜனங்களின் நன்மையின் பொருட்டு நீ கருணாமூர்த்தியாக அவதரிக்க வேண்டுமென்று உன்னை ப்ரம்மாவே வேண்டிக்கொள்ள, அதற்கிணங்க நீ இங்கு காட்சியளிப்பதனால், இனித்தாமதிப்பதைப் பொறுக்கமாட்டேன். சீக்கிரம் தயை புரிந்து, எனக்கு வாக்களித்து, என்னைக் காப்பாய்.

× 80. அலகலல்ல. அரக்கனான மாரீசனுடைய மதத்தையடக்கும்போது ராமனுடைய முகத்தில் சிறிதேனும் விகாரம் தோன்றவில்லை. அழகே மிகுந்திருந்தது. முனியின் கண்ஜாடையறிந்து சிவதனுஸை முறித்த பொழுது சிறிது நிமிர்ந்த முகத்தில் சரிந்துவந்த சுருண்ட மயிர்களை ராமன் தலையசைத்து ஒதுக்கிய காட்சியும் அழகு மிகுந்தது. இந்த இரண்டையும் கண்ணுற்ற விசுவாமித்திரர் எப்படி ஆனந்தமடைந்திருப்பாரோ? வால்மீகியின் அவதாரமான ஸ்வாமிகள் தம்முடைய

ஞானக்கண்ணினால் ஸேவித்து அனுபவித்த பரம ரஸமான கட்டங்களில் ஒன்றைச் சித்தரிக்கும் க்ருதி இது.

81. ஏமனிபோகடுது. ஸ்ரீராமா, உன்னை என்னென்று புகழுவேன், அப்பனே! திருமிகும் ஸூரிய வம்சத்திற்குத் திலகமாயவதரித்தவனே, புவியிலவதரித்து, என் போன்றவர்களின் உள்ளம் குளிரும்படி செய்பவனே, பரமசிவனுக்குத் தமோ குணத்தையும் ப்ரம்மாவுக்கு ரஜோ குணத்தையுந்தந்து, இந்திரனையும் கர்வம் நிறைந்தவனாக்கி, இப்படி ஸர்வ வல்லமையும் பொருந்திய பரமாத்மாவாகிய உன்னை நான் என்னென்று போற்றுவேன்?

82. நன்னுகன்னதல்லி. என்னைப் பெற்ற தாயே, தர்மஸம்வர்த்தனியே, என் தவப்பயனாக எனக்குக் காட்சியளித்தருளுபவளே, ஸ்ரீமந் நாராயணனுக்கு ஸஹோதரியானவளே, என்னைக் காப்பாற்று என்று நான் முறையிட உன் மனம் ஏன் இரங்கவில்லை? நீயே காப்பதில்லையேல், வேறெவருண்டு? வரங்களளிப்பவள் நீயன்றோ?

83. ஆடமோடிகலதே. என்னுடன் உரையாட மோடி செய்வதுண்டோ? தோழன் நீயே என்று பக்தியுடன் உன் பாதங்களைப் பற்றியுள்ளேன். கலைகளனைத்தையும் அறிந்து, சங்கரனின் அம்சம் பெற்று, கருணை நிறைந்து, விளங்கும் ஆஞ்சநேயர் உன்னை முதலில் ரிச்யமூக பர்வதத்தில் ஸந்தித்து வணங்கியபோது, பூர்வ வரலாறுகளைப் பேசும்படி லக்ஷ்மணனுக்கு உத்தரவிட்டாய். ஸுக்ரீவனுடைய மந்திரியான ஹனுமாரிடம் அந்த முறை ஸரியேயன்றி, உன்னையே கதி என்று நம்பிய என்னை உதாசீனம் செய்வது தகுமா? ஆகையினால் என்னுடன் பேசுவதற்கு மோடி செய்யலாமா?

84. உண்டேதி ராமுடு. மனமே, இரண்டற நிற்கும் பரம்பொருள் ராமன் ஒருவனே. இதையறியாமல் வீணில் கெட்டலையாதே. எண்ணுதற்கரிய கிரணங்களையுடைய ஸூரிய

மண்டலத்தின் நடுவில் ஜோதி மயமாகக் காணப்படும் திவ்ய புருஷன் ஸ்ரீராமனே. ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற முக் குணங்களுக்கும் அதீதனாக, மாயையினால் கட்டுப்படாத மங்கள ஸ்வரூபன் அவனே. இந்தரஜித் வதத்தின் போது லக்ஷ்மணன் தன் அஸ்திரத்தை நோக்கி, "ராமன் தர்மாத்மாவாக இருப்பது உண்மையெனில் ராவணனுடைய குமாரனை இந்த்ரஜித்தைக் கொல்லக் கடவாய்," என்று ஜபித்து, ராமபிரான் தர்மஸ்வரூபன் என்பதை நிரூபித்தார். அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபிப்பவன் ராமனே. தியாகராஜனுடைய மனதுக் கிசைந்தவனும் அந்த ராமனே.

85. எந்தரானி தனகு. எனக்கு எது வரினும், எது போயினும், உனதருகாமையை விடேன். பரமசிவனே உன் பக்கத்தில் ஹனுமாராக நின்று உனக்குப் பணி செய்யவில்லையா? சிவனுக்கு ஆபரணமாக விளங்கும் சேஷனே லக்ஷ்மணனாக விளங்கவில்லையா? சிஷ்டரும் முனிசிரேஷ்டருமான வசிஷ்டர் உனக்கு நல்லுரை யுணர்த்தும் அரிய ஆசானாக இருந்தாரன்றோ? தேவர்கள் உன் பொருட்டு வானரங்களாகப் பிறந்து உனக்குத் தொண்டு செய்யவில்லையா? (வேத வர்ணனீய—எவரிகை) நீ ஆகமங்கள் போற்றும் சற்குணங்கள் யாவும் பொருந்தியவன் என்றும், வேதவாக்யங்களின் ஆழ்ந்த கருத்தே நீ யாவாய் என்றும் உணர்ந்து நான் உன் துதி பாடவில்லையா?

86. எந்துகு நிர்த்தய. சந்த்ர பிம்பம் போன்ற திருமுகமுடையவனே, ஸூரிய வம்சத்தில் தோன்றிய அரசர்களிடையே தேவலோகத்துச் சந்தன விருட்சம் போன்று அனுகினவர்களின் மனோபீஷ்டங்களை நிறைவேற்றுபவனே, நான் உன்னருகாமையை விட்டு இந்தக் கர்ம பூமியில் பரதேசியாக வாழும்படி நேரிட்டிருக்கிறது. ஆகையால் என் துரிதங்களை யகற்றுவாய். பரிமளம் கமழும் திருமேனியுடையவனே, உன்னிடம் உண்மையான பக்தி யுடையவர்களையும், போலிப் பக்தர்களையும் ஸமமாக நோக்குவதேன்? அணிற்பிள்ளையின் பக்தியைக் கண்ணுற்று நீ மிகவும் ஸந்தோஷப்படவில்லையா? இப்புவியில் நீயே கதி என்றிருக்கையில், என் மீது உனக்குத் தயை யில்லாமற் போனதேன்?

87. தினமணி வம்ச திலக. ஸூரிய வம்சத்திற்குத் திலகம் போன்று அத்துணை அழகு வாய்ந்தவனே, எளியோருக்குப் புகலிடமே, என் கோரிக்கையை நன்றாக மனதில் ஏற்று, என்னை அன்புடன் காப்பாய். அதுவே போதும். அது உனக்குத் தகும். பரமசிவன் வணங்கும் பர தெய்வமே, நீயே எனக்கு அனைத்தும் என்று நம்பியிருக்கும் என்னைக் காப்பாற்றாமலிருக்கையில் நீ செருக்குக் கொள்ளுவதேன்? என்னை ஆதரிப்பவர் எவர்? நிர்விகாரகுண, நிர்மல, கரத்ருத பர்வத— என்பன ஸ்பஷ்டமான ஸம்போதனங்கள். கோவர்த்தன கிரியைத் தூக்கிய திருக்கரங்களுக்கு என்னைக் கை தூக்குவது பெரிதாகுமோ என்ற கருத்தும் எளிதில் விளங்குவது.

88. எவரிமாட. எவருடைய பேச்சைக் கேட்டாயோ? வரமாட்டாயோ, அல்லது இங்கு இல்லையோ? அம்மம்ம, ரிஷிகளுடைய வாக்கிலும், மனிதர்களின் நூல்களிலும், இந்த அதிசயத்தை நான் காணவில்லை. நீ அடியார்களுக்கு வசப்படுகின்றவன் என்பது மெய்யன்றோ? பரம பாகவதர்களான நாரதர், வியாஸர், பராசரர், மார்க்கண்டேயர் முதலிய பெரியோர்களின் கூட்டங்கள் உன தம்சமே என்பதையும் உண்மை யென்றே நம்பியிருந்தேன். அபாரமான மகிமை வாய்ந்த பர தெய்வம் நீ என்றும் உவகையுடன் சிந்தித்திருந்தேன். ஸாத்விகம் நிறைந்த என் சித்தத்தை உன்பால் செலுத்திப் போற்றினேன். நீ உண்மை தவறாதவன் என்றும் நம்பினேன். எனினும், உன் க்ருபை வாராததேன்?

89. மஹிதப்ரவ்ருத்த. மகிமை மிகுந்த ப்ரவ்ருத்த ஸ்ரீமதி என்றழைக்கப்படும் அம்பிகையே, முருகன், விநாயகர் இவர்களின் அன்னையே, உனது திருவடிகளில் நான் பக்தி கொள்ளும்படி அருள்வாய். எல்லா உயிருக்கும் நலம் செய்பவளே, வைதேகியின் பதியான ஸ்ரீ ராமனுடைய ஸகோதரியே, ஸமுத்திரராஜனால் துதிக்கப்பட்டவளே, புதிய ஸர்ப்பங்களை ஆபரணமாகக் கொண்டவளே, ஸம்ஸாரமாகிற கொடிய பாம்பிற்கு மயில் போன்றவளே, சிங்கத்தின்மீது வீற்றிருப்பவளே, அர்ஜுனன் பாசுபதம் பெறும் பொருட்டுத் தவம் செய்து துதித்த பரமசிவனுடைய அன்புக்குப் பாத்திரமானவளே, பலன் வேண்டி வணங்குபவர்களுக் கெட்டாத பரவஸ்துவே, தபஸ்தீர்த்தம் என்ற லால்குடியில் விளங்குபவளே, ப்ரம்மா, சிவன், விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் வழிபடும் தெய்வமே, உனது பாதங்களில் என் பக்தி வளருமாறு அருள்வாய். வதனஜித ஸுதாகரே, ஸுகுண ரத்நாகரே, ஸரோஜதள நிபாக்ஷி, முதலியவை லலிதமான ஸம்போதனங்கள்.

90. மாஜாநகி. எங்களுடைய பக்திக்கும் அன்புக்கும் கட்டுப்பட்ட ஸீதா தேவியை மனையாளாகப்பெற்றே நீ மஹாராஜனானாய்.

ராஜாதிராஜனே, கமலநயனனே, கேட்பாய். உன்னுடன் கானகம் சென்று, தாமஸ ராஜஸ ஸ்வரூபங்களுடன் அக்கினியின் சமீபத்திலிருந்து பிறகு அக்னிப்ரவேசம் செய்து ஸத்வ குணத்துடன் வெளிவரவேண்டுமென்ற உனது அத்யாத்மக் கருத்துக்கிணங்கி நடந்து, உன் அவதாரநோக்கம் பூர்த்தியாகும் நிமித்தம் ராவணனுடன் லங்கை யடைந்து, தானிருக்குமிடம் சோகமற்ற தென்பதை நிரூபித்து மரத்தடியில் தங்கி, ராவணனுடைய வார்த்தைகளைச் செவியுற்று, அவனிடம் கோபம் கொண்டு தன் கண்ணால் அவனைச் சுட்டெரிக்காமல், ஒரு புல்லை அவன் முன்னெறிந்து, அவனைக் கொல்லாமல் விடுத்து, கடைசியாக ராவணனைக் கொன்ற புகழ் உன்னையே சேரும்படி நடந்து—இவ்வித மெல்லாம் உனக்கு என்றும் புகழ் விளங்கும்படி செய்த எங்கள் ஸீதா தேவியைக் கைப்பிடித்தன்றோ நீ ஸார்வபௌம சக்ரவர்த்தியானாய்?

91. அதிகாது பஜன. மனமே, உள்ளொன்று வைத்துப் புறமொன்று காட்டிச் செய்யும் பூஜை சரியன்று. உயர்ந்த நிலை யடையவேண்டுமென்ற ஆசை, கேவலமான இந்திரிய சுகங்களுக்கு ஆவல், வயிறு வளர்க்கப் பலவிதமாக நடித்தல், இவற்றிலுழலுபவர்கள் எவ்வளவு பெயர்கள்!

92. எந்தனுத்ஸு ஸைரிந்துனு. ஸீதாகாந்தனுடைய தயை வராமல் நான் எவ்வளவென்று சகிப்பேன்? என்னருகில் வந்து காத்தருள இன்னும் உனக்கு மனம் வாராதா? நான் உனதடிமை யன்றோ? என் முறைகள் வீணாயினவா? உனக்கு நான் அன்னியன் என்று தோன்றியதா? என் தவமெல்லாம் வியர்த்தமாகாமல் எனக்கு ஞானத்தை அனுக்ரகித்து என்னைக் காப்பாற்றக்கூடாதா? முனி சிந்தனீய, ஸமரஹித, அஸமான, ஸமானபால, சுபாகரமா, ஆப்தபரிவார, அமரவினுத, கராஜமுக, வ்ருஷபராஜபனுத, நிராதங்க, விராஜமான கவிராஜரக்ஷக, நகராஜதர, என்பன போன்ற ஸம்போதனங்கள் எளிதில் விளங்கக்கூடியவைகளே.

93. ஏதாவுன நேர்சிதிவோ. ஸீதாதேவி, லக்ஷ்மணன், பரதசத்ருக்னர்கள், ஆஞ்சநேயர், முதலியோருடன் ஆடின நாடகத்தை எங்கு கற்றாயோ? எவ்வளவு காலம் கற்றாயோ? எனித்தனை கஷ்டம்? மனையாள் வைரமிழைத்த ஆபரணங்களையும், தம்பிகளும் பெற்றோர்களும் அன்னத்தையும், சீலம் நிறைந்த பக்தர்கள் தங்களைக் காக்கும்படி உன் உதவியையும் வேண்டினார்களோ? அனைத்தையும் செய்யவல்ல உனக்கு என்னைக் காப்பதற்கு முடியாமல் என்ன தடை இருக்கக்

கூடும்? இந்த நாடகத்தை நீ நடத்துவதற்கு எங்கு, எவ்வளவு காலம் கற்றனையோ?

94. வர ராக லயக்ஞுலு. ஸங்கீத சாஸ்திரம் ஸ்வரம், ஜாதி, மூர்ச்சனை முதலிய பல அம்சங்களுடையது. ஆத்மாவிலூறிய தெய்வ பக்தி மனதைத் தூண்டவும், அதனாலேற்படும் அக்னியும் வாயுவும் நாபி, ஹ்ருதயம், கண்டம், தலை, நாக்கு, மூக்கு, முதலிய உறுப்புகளின் வழியே வியாபித்து, அழகிய நாதம் பிறக்கிறது. இது ஓங்கார வடிவமும் தெய்வத்தன்மையும் வாய்ந்தது. இதை ஞானிகள் நன்றாக உணர்ந்து ஸத்துவ மயமான கானவித்தையின் மூலம் ஓங்கார உபாஸனையின் பலனைப் பெறுவர். ஆனால் மனிதரிற் சிலர் இந்த அறிவு சிறிதுமில்லாமல், தாங்கள் ராக தாள நுட்பங்களைச் செவ்வனே கற்றறிந்த மேதாவிகள் என்று பிதற்றிக்கொண்டு பிறரையும் நிந்திக்கின்றனர்.

95. ஈவஸுத நீவண்டி. கோவூர் பஞ்சரத்ன க்ருதிகளில் இது ஒன்று. மங்களகரமாகச் செழித்தோங்கி விளங்கும் கோவூர் என்ற க்ஷேத்திரத்தில் உள்ள ஸுந்தரேசுவர மூர்த்தியே, புவியில் உன்னை யொத்த தெய்வம் எங்கும் கண்டிலேன். உன்னிடம் அன்பு பூண்டு, அரை நிமிஷமேனும் உன் புண்ணிய ஸ்தலத்தில் தங்குவோரின் கஷ்டங்கள் யாவையும் நீக்கி, நிறை பொருள், நீண்ட ஆயுள், நல்லோரிடம் பக்தி, அருளொளி, உலகோரிடையே புகழ், மற்றும் அடியார்கள் வேண்டுபவை யனைத்தையும் தருபவரும், என் உள்ளத்தில் கோயில் கொண்டவருமான ஸுந்தரேசப் பெருமானே.

96. ஏமானிதிச்சேவோ. உன் கட்டளை எதுவோ? சித்தம் என்னவோ? என் தலை யெழுத்து என்னவோ? புகழ், ஆயுள், உத்தம பக்தி, உன்னிடமே குடிகொண்ட சித்தம், வலிவும் வனப்புமடைந்த உடல், இவற்றைக் கொடுக்கும் வள்ளலே, தேஜோமயமான பரமசிவன் வணங்கும் தெய்வமே.

97. தேஹி தவபத பக்திம். விதேஹராஜ குமாரியே, உன் திருவடிகளில் நிரந்தரமான பக்தி யிருக்கும்படி எனக்கருள்வாய். இகபர மிரண்டிற்கும் நலம் செய்பவளே. அகஸ்திய முனிவரின் துதி கேட்டு மகிழ்பவளே, எங்கும் நிறைந்து விளங்கும் பரப்ரம்ம ஸ்வரூபிணியே, வண்டுக் கூட்டங்களைப் போலப் பிரகாசிக்கும் அழகிய கூந்தலை யுடையவளே, வேள்வி காத்த ராமனுடைய பத்தினியே, எனக்கு நன்மை செய்பவளே, காலைக் கதிரவனைக் கண்டு மலர்ந்த கமலம் போன்ற கண்களுடையவளே!

98. கருணா ஜலதி. என் ப்ரார்த்தனைக்கு நீ செவிசாய்க்காமல் யோசனை செய்தால், நான் அதை ஒப்புக்கொண்டு சும்மா இருக்கமாட்டேன். என்னிடம் அன்பு வைத்து இரக்கம் பாராட்டினால் உன் பரம்பரை சொத்து செலவழிந்து போய்விடாது. இந்த ஸாஹஸமேன்? இனிச் சகியேன். இனியேனும் உனது திருவடிகளில் எனக்கு உத்தமமான பக்தி செவ்வனே வளரும்படி அருள இது தருணம். தனத்தினால் கர்வங்கொண்ட மனிதர்களிடம் நான் எதையும் இரக்கும் பொருட்டு வந்தேனில்லை. அதற்கு என் மனம் இணங்காது. எனது உடலும் உயிரும் உன்னுடையதென்று உன்னையே வழிபடுவேன். தருணா அருண நிபசரண, ஆச்ரிதஜன சரண, ஸுகுணதாம, சதுர்முக ஜனக, ஜனகவசன ஸுபரிபாலனமுஜேஷின வனஜலோசன, ஹரிகண அதிப பரிசர, கனரவஸ்வர, முதலியவை ரஸமான ஸம்போதனங்கள்.

99. வாரிஜ நயன. கமல முகத்தோனே, கமலக் கண்ணனே, என்னைக் காத்தருள். மாயையாகிற கடலில் முழுகித் திணறுவதென்ற தீர்மானம் என்னுடையதல்லவே. ஸுக்ரீவனைப் போலப் பொருள், மனைவி மக்கள், முதலியவற்றைக் கோரி உன்னை நான் அடையவில்லை. குதிரைகள் பூட்டிய ரதங்கள் மீதேறிச் சத்துருக்களான அரசர்களைவெருட்டியடிக்க

உன் உதவியை நாடிய அர்ஜுனன் நானல்லவே. உன்னை தியானித்துத் துதிப்பதே எனக்கு நவநிதிகளன்றோ? ஆகையினால் இந்தத் துராசைகள் எனக்கேன்?

100. கதலேவாடு. "ஸ்தைர்யே ஹிமவானிவ" என்றபடி, ராமன் சலிக்கிறவனல்லவே. அவன் ஸ்திர புத்தியுடையவனாயிற்றே. அவனுடைய வரலாறுகள் எவ்வளவு மகிமை வாய்ந்தவை! அவன் ஸகல ஜீவன்களுக்கும், அண்டசராசரங்களுக்கும் வித்தான மூலபுருஷனன்றோ? ஆதியந்தமில்லாதவனாயிற்றே. அவனுடைய ஸ்ருஷ்டியாகிய இந்த ஜகமெல்லாம் அழியக்கூடிய மாயக் கற்பனையல்ல, அவனுடைய விருப்பத்தின் விளைவே. ஆதிசேஷன் மீது படுத்துறங்கும் அவனே நான் வணங்கும் தெய்வம்.

101. பஜனபருலகு. மனமே, ப்ரம்மா, பரமசிவன், இந்திரன், முதலியவர்களில் அவரவர்களுக்கேற்ற பதவியைக் கொடுக்கும் பரம புருஷனான ஸ்ரீ ராமனுடைய பஜனையே உய்யும் வழி என்றிருப்பவர்களுக்கும், கோதண்டதரனான ராமபிரானின் திருமுகத்தை ஹ்ருதய கமலத்தில் கண்டு அதனைப் போற்றி, அவனே பரம்பொருளாக அண்டகோடிகளில் விளங்குகிறான் என்பதை உணர்ந்து, அவனிடம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, அனுஸக்தி யோகத்திலமர்ந்திருப்பவர்களுக்கும், காலனிடம் பயமேது? கஜரக்ஷகனான அந்த பரமாத்மாவன்றோ நான் வணங்கும் தெய்வம்?

102. ராமதைவமா. என் தெய்வமான ஸ்ரீ ராம மூர்த்தியே, வரவர என்னிடம் உனக்கேனிந்த உலோபித்தனம்? உன் திருமுகத்தை எனக்குக் காண்பிப்பாய். ஸ்ரீ ரங்கனாத மூர்த்தியை விபீஷணனுக்குக் கொடுத்து அவன் அதை இலங்கைக்கு எடுத்துக்கொண்டுபோக முடியாமல் ஸ்ரீரங்கத்தில் வைத்து விடும்படியாகச் செய்து அவனுக்குப் பட்டை நாமமிட்டாயே. அதனால் உனது இல்லம் பொன்மயமாக மாறியதா? வெண்ணெயைத் தான் திருடிக் கோபிகைகள் முகத்தில் தடவியதுபோலாயிற்றே. உன் திறமையை நான் காணட்டும். என் கஷ்டங்களை அகற்றுவாய். உன் கிருபை கிடைக்கும் என்ற நம்பிக்கையினால் நான் சிறிதும் பதறாமல், காத்திருக்கிறேன். நீயே தஞ்சம் என்று ஒரு தரம் சொன்னாலும் போதுமன்றோ? ஆகையால் என்னிடம் உனக்கேனிந்த லோப குணம்?

